உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

# கூரியர்

நவம்பர் 1969 ஆண்டுச் சந்தா ரூ. 10.50 தனிப்பிரதி ரூ. 1.00

## காந்தி

## அகிம்சையின் மரபு

Photo © Moravske Museum, Brno

# உலகக் கலைக் கருவூலங்கள்

37

## புதிரான தலைசிறந்த படைப்பு

ப்ருனே (செக்கோஸ்லாவாகியா)வில் பண்டைய கல்லறையில் எடுக்கப்பெற்ற இவ்வரிய எழில் உருபொருளாய்வாளருக்கு வியப் பளிக்கிறது. இது 14 செ. மீ. உயரமும் 12 செ. மீ. அகலமும் உள் ளது. கி. மு. 2ஆம்நூற்ருண்டைச் சேர்ந்தது. இதை மரப் பாண்டத்தின் வேலைப்பாடென சில வல்லுநரும், இருநுகத்தடியின் அலங்காரமென வேறு சிலரும் கருதுகின்றனர். அஃது எவ்வாறு இருப்பினும் இந்த வெண்கலப் பொருளின் வனப்பையும் அழகையும் எக்கோணத்தி லிருந்தும் காணலாம். (வலப்புறப் படத்தைப் பார்க்கவும்.)

# யுனெஸ்கோ கூரியர்

நவம்பர் 1969

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினால் பதின்மூன்று பதிப்புகளாக வெளியிடப்படுகிறது.**

ஆங்கிலம் ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு இத்தாலியன்
ஸ்பானிஷ் ஹிந்தி
ரஷ்யன் தமிழ்
ஜெர்மன் ஹீப்ரு
அராபிக் பெர்சியன்
அமெரிக்க ஐக்கிய நாடு

விற்பனை, விநியோக அலுவலகம்:
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10
ஆண்டுச் சந்தா ரூ. 10.50



யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப் படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.



ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபா஁ன்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.



பிரதம ஆசிரியர்:
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர்:
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலப் பதிப்பு: ரொனால்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸன் (டில்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பெலி (ஜெருசலம்)
தமிழ்ப் பதிப்பு: தெ. பொ. மீனாட்சிசுந்தரன் (சென்னை)
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள்:
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா
*ஆராய்ச்சி:* ஒல்கா ரோடல்
*அமைப்பு, சித்திரம்:* ராபர்ட் ஜாகுமின்


எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.


The UNESCO Courier

November, 1969 No. 29


## இதழ் 29

பக்கம்


4 மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி
ராஜா ராவ்

6 ஓர் அரிய வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள்
ஆலிவர் லக்கோம்ப்

13 அகிம்சையின் மரபு
ரெனே ஹபாஹி

20 மார்ட்டின் லூத்தர் கிங்:
"நாம் வெற்றி பெறுவோம்"

22 பாபுவின் வழி
ஹுமாயூன் கபிர்

26 கார்ல் ஜாஸ்பெர்ஸின் இறுதிக் கருத்துரைகளில் ஒன்று: காந்தியடிகள்
கார்ல் ஜாஸ்பெர்ஸ்

28 மாணவர்களையும் அரசியலையும் பற்றி காந்தியின் கருத்துக்கள்
மால்கம் எஸ். ஆதிசேஷையா

31 கல்விபற்றி காந்தியின் கருத்துக்கள்

34 யுனெஸ்கோ செய்தியறை

2 உலகக் கலைக் கருவூலங்கள்
புதிரான தலைசிறந்த படைப்பு (செக்கோஸ்லாவாகிய)



No 7 - 1969 MC 69-1-248 A




### அட்டைப் படம்

மகாத்மா காந்தியின் இப்படத்தை வரைந்தவர் புது டெல்லியைச் சேர்ந்த இந்திய ஓவியர் திரு. சுராஜ் சதன். முன், பின் அட்டைகளின் பின்னணி உருவம் மற்றோர் இந்திய ஓவியர் நந்தலால் போஸின் மரச் செதுக்களிலிருந்து எடுக்கப் பெற்றது. இரு ஓவியரும் காந்தி நூற்றாண்டின் நினைவு அஞ்சல் தலை உருவங்களைத் தீட்டினர். அட்டையின் எழில் தோற்றத்தை அமைத்தவர் ஜார்ஜ் ஹாடென் (பாரிஸ்).



# காந்தி

'இவரைப் போன்ற ஒருவர் இவ்வுலகில் வாழ்ந்தாரெனப் பல தலைமுறைகளுக்கு மக்கள் நம்புவது கடினம்.'

— ஐன்ஸ்டீன்

**ராஜா ராவ்**

ஒரு காலத்தில் மகானும் அரசருமான கண்ணபிரான் வாழ்ந்தார். இந்தியாவின் மேற்குத் தீபகற்பமான கத்தியவாரின் துறைமுகமான துவாரகையிலிருந்து அந்த யாதவ வமிசத்தவர் திறமையோடும் சிறப்போடும் நாட்டை ஆண்டார். ஒரு நாள் அரசரின் உடன்பயின்றவர் எனக் கூறிக்கொண்ட சுதாமர் என்ற ஓர் எளிய அந்தணர் வாயிலில் இருப்பதாகக் காவலன் அறிவித்தான். 'அவரை வரவிடுங்கள்' என்ற அரசர், அவர் வந்தபோது வெந்நீராலும் தண்ணீராலும் அரசரே அவரது கால்களைக் கழுவி, தைலங்களைத் தடவித் தழுவி, அவர் நண்பர்க்காக அன்புடன் கொண்டு வந்திருந்த ஒரு கைப்பிடி அவலை மகிழ்வுடன் பெற்றுக்கொண்டார். உள்ளே அழைத்துச் சென்று விசாரித்து பழைய நெருங்கிய நண்பர்க்குச் செய்வதுபோல, உணவூட்டி மரியாதை செய்தார். சுதாமர் மிக மகிழ்ந்து கண்ணபிரானிடம் ஒருநாள் தங்கி, விருந்துண்டு அரசவாகனத்தில் அருகிலுள்ள தம் சிற்றூருக்கு மீளும்போது, தான் வந்த நோக்கத்தை நினைத்தார். அவர்கள் பரம ஏழைகளானதால், அவரது மனைவி, ஒருபிடி அவலை நண்பர்க்குக் காணிக்கையாகக் கொடுத்தாள். ஆனால் சுதாமர் மகிழ்ச்சியில் வந்த நோக்கத்தை மறந்தார். அவர் தாம் அரச ஊர்தியில் மீள்வதையும் மறந்தார். ஆனால் ஊர் மீண்டபோது அவரது வீடு சலவைக்கல் சுவர்கள். குளிர்முற்றங்கள், பலகணிகளில் படரும் கொடிகள் ஆகியவற்றோடு, பக்தியோடும் பணிவோடும் வரவேற்க ஆடம்பரமாய் உடுத்துள்ள மனைவி வாயிலில் எதிர்பார்க்க, ஊரே பொலிவுற்றிருந்தது. அவர் கேளாமலே இவை அளிக்கப்பட்டிருந்தது. தரித்திர நாராயணனுக்கு உதவும் கண்ணபிரானின் அன்பளிப்பு அப்படிப்பட்டது. அதிலிருந்து அவ்வூர் சுதாமபுரி என அழைக்கப்பட்டு, நாளடைவில் பூரி என்றாகி அது துறைமுகமானதால், அதைக் குறிக்கும் 'பந்தர்' என்ற பெயரும் இணைந்து போர்பந்தர் ஆயிற்று. அதன் அரசர்கள் மற்றவர்களைப் போன்றே தாம் சூரிய, சந்திர பரம்பரையினராயும், இராமபிரான், கண்ணபிரான் ஆகியோரின் சந்ததியினர் என்றும் கூறிக்கொண்டனர். கீதையில் கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு அறிவுரையாக ''கடமையைச் செய்; ஆனால் அதன் விளைவுகளைக் கருதாதே'' என்று சொன்னார்.

போர்பந்தர் பற்றி புராதன கிரேக்க, ரோமானிய வணிகர்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுக் காலமாக மழையில் நனைந்து இறுகிய குன்றுகளில் இருந்து வெட்டிக் கட்டிய சலவைக் கற்களாலான வீடுகளைக் கொண்டுள்ளதால் அவ்வூர் வெள்ளை நகர் என அழைக்கப்பட்டது. மரக்கதவுகளால் அலங்கரிக்கப்பட்டு, உயர்ந்த மாடிகளைக் கொண்ட வீடொன்றில்தான் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 2-10-1869இல் பிறந்தார். அவர் குடியில் ஐந்து தலைமுறையினர் போர்பந்தர் மன்னர்க்குத் திவானாக நேர்மை, பயபக்தியோடு பணி புரிந்தனர். அவரது தந்தை ஒழுங்காக இருந்து, அநீதி நிகழ்ந்ததால், அரசர்க்கும் பணியாமல் இருந்த தன் விளைவை மோகன்தாஸின் தாத்தா ஒட்டா காந்தி அனுபவிக்க நேர்ந்தது. அரசியின் ஊதாரித்தனத்தை எதிர்த்த ஒரு பொக்கிஷதாருக்கு தஞ்சமளித்ததால், வீடே பீரங்கித் தாக்குதலுக்காளாகியது. தாக்குதலின் அறிகுறி இன்றும் அவ்வீட்டில் இருக்கக் காணலாம். ஒட்டாகாந்தி போர்பந்தரை விட்டு தம் சொந்த ஊரான ஜூனாகத் போனபோது அவ்வூர் மன்னரும் அவரைத் தம் திவானாக இருக்கச் சொன்னதற்கு, அவர் அரச

---

ராஜா ராவ் சிறந்த இந்திய எழுத்தாளர்; இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸில் கல்வி பயின்றவர். இந்து வேத நூல்களினின்று பெறப்பட்ட அத்வைத வேதாந்தத் தத்துவத்தைப் பின்பற்றியவர். ஆங்கிலத்தில் எழுதியபோதிலும் இந்தியாவின் மரபான முறையிலும் நடையிலும் எழுதுகிறார். "காந்தபுரம்", "கௌ ஆப் தி பேரிகேடஸ் அண்டு அதர் ஸ்டோரீஸ்", "தி சர்பண்ட் அண்டு தி ரோப்" "தி கேட் அண்டு ஷேக்ஸ்பியர்" மற்றும் பல சிறுகதைகளும் அவருடைய வெளியீடுகளாகும்.



Photo © Brian Brake Rapho

ருக்குத் தம் இடக்கையை நீட்டினார். ''இதன் பொருள் என்ன?'' என்றதற்கு, ''என் மறுகை போர்பந்தருக்குக் கடமைப்பட்டது'' என்றார் ஓட்டா. காந்திகள், அத்தகைய விசுவாசம் உள்ளவர்கள்.

நோன்பும், துறவிகட்கு தானமளித்தலையும், தியானித்தலையும் விரும்பும் வைதீக அம்மையாரான மோகன்தாஸின் தாயார் பெரியோர்க்குப் பணிதலையும், சமய சகிப்புத் தன்மையையும், நன்னடத்தையையும் தம் குழந்தைகளுக்குக் கற்பித்தார். அவர் தம் குழந்தைகளை, கதாகாலட்சேபங்களுக்கு அழைத்துச் செல்வது வழக்கம். அங்கே கதைகளிலிருந்து ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைச் சொல்வார். அவற்றில், சாதாரணத் தூணிலிருந்து கடவுளை வரச்செய்து, கடவுள் இருப்பதை இறையுணர்வற்ற தந்தைக்கு விளக்கிய பிரகலாதன் கதை, அல்லது உண்மைக்காக நாட்டை விட்டு, மனைவியை வேலைக்காரியாக விற்று, தானே சுடுகாட்டுக் காவலனாகிய அரிச்சந்திரன் கதை போன்றவை இருக்கும். மோகன்தாஸ் தானும், மற்றவர்களும் அரிசந்திரனைப்போல் ஏன் வாழக் கூடாது என வியந்தார்.

வளர்ந்து வருங்கால் முதலில் போர்பந்தரிலும் பின்னர் (ராஜ்கோட் அரசாங்கத்தைச் சரிசெய்யத் தந்தையார் அழைக்கப்பட்டதால் அங்கும்) படித்தபோது, மோகன்தாஸ் எப்போதும் உண்மையை நாடினார். ஓர் ஆங்கில ஆய்வாளர், 'ஆல்பிரட் உயர்பள்ளி'ச் சோதனைக்கு வந்தபோது, 'கெட்டில்' (''Kettle'') என்ற ஆங்கில வார்த்தையைக் 'காப்பி'யடிக்க ஆசிரியர் சொன்னதைச் செய்யாததால் ஆசிரியரால் வெறுக்கப்பட்டு, துன்புறுத்தப் பட்டார். அவருடன் படித்தவர்கள் புத்தகத்தை யன்னியில் பிற விஷயங்களைப் பற்றிப் பேசி வெளி உலகம் மீகமிகக் கொடிதென்றும் உண்மையில் புலால் உண்டதாலேயே ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டனர் என்றும் பேசிக் கொண்டனர்.

அதிவீர ஆங்கிலேயன் பார்
ஆள்கின்றான் குள்ள இந்தியனை,
எதனால்? புலாலைத் தின்பதனால்,
எடுப்பான உயரம் ஐந்து முழம்,

போன்ற வரிகளையும் பாடினர். எனவே மோகன்தாஸ் தம் சகோதரருடன் ஆற்றோரம் மறைவாகப் புலால் உண்ணத் தொடங்கினார். எனினும், பணம் திருடி உண்மைக்குப் புறம்பாக இக்காரியம் செய்யப்படுவதால், அவர் தம் தந்தையைப்போல் வளர்ந்த பின், புலால் உண்ணுவது எனத் தீர்மானித்தார். மற்றொருநாள் நண்பனுடன் விபசார விடுதிக்குப் போனபோது, விலைமாதின்பால் இரக்கப்பட்டுக் கோழையாக வெளியே ஓடிவந்தார். மோகன்தாஸ் ஏற்கெனவே மணமானவரானதால் இது இன்னும் மோசமானதாயிருந்தது. அவருக்கு 13 வயதான போது அதே வயதுடையவரும், ஐந்து வயது முதலே துணையெனக் கருதப் பட்டவருமான கஸ்தூரிபாயை மணந்தார். அவ்வமயம் வயதில் பெண்மையை உணராதவர்க்கு, அவள்மீது இருந்த மிகுந்த காமவெறி அவரது அறவுணர்வுகளையே மறக்கச் செய்து விட்டது; அவரது தந்தையிடம் வந்த துறவியர் மற்றும் பெரியோர் பேசுவதையும், துளசிதாசரின் இராமாயணம் படிக்கப்படுவதையும் காந்தி கேட்க மறந்தார். அவரது தந்தை மிகவும் நோய்வாய்ப்பட்ட இரவன்று கூட சிற்றின்ப ஆசையின் வயப்பட்டு சென்றுவிட்டார். அவர் திரும்ப அழைக்கப்படுமுன் அவர் தந்தை இறந்து விட்டார். இது அவர் தம் அற வழிச் சிந்தனையின் அடிப்படையையே ஆட்டிவிட்டது.

அவரது சகோதரர்கள் நல்லவர்கள் என்றாலும், போர்பந்தர் திவான்களாக முடியவில்லை. நவீனக் கல்வி பெறாதவர்கள், ஆங்கிலேயர் வேரூன்றியபோது, வழக்கறிஞரல்லாத எவரும் திவானாக முடியாது. எனவே, அவரது தாய், மனைவி, உற்றார் உறவினர் அனைவரின் விருப்பத்துக்கு எதிராக அவரது குடும்பத்தினர் அவரை லண்டனுக்கனுப்பி வழக்கறிஞராக்கத் தீர்மானித்தனர். மேலை நாகரிகத்துத் தீமைகளான மாமிசம், மது, மங்கை மூன்றையும் தொடாதிருக்க வாக்குறுதி அளித்தார் காந்தி. கடல் கடந்து லண்டனுக்குச் சென்று (செப்டம்பர் 1888) இங்கிலாந்தில் விசித்திரமான விக்டோரியாக் காலத்தில் மூன்றாண்டுகள் தங்கினார். ஏகாதிபத்தியத்தை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் சைவமும் அசைவமும் ஆத்திகரும் நாத்திகரும் கருத்தடையை ஆதரிப்போரும் எதிர்ப்போருமாக ஒருவருடன்ஒருவர் மோதிக் கொண்ட காலம் அது. அவர் சொற்பொழிவுகளையும், பால் ரூம் நடனத்தையும் பெருமிதமான பிரெஞ்சு மொழியையும் கற்க முயன்று, ஆங்கில கனவானாகத் துடித்தார். முயற்சியில் தோற்று, சிக்கன வாழ்வு வாழ்ந்து, லத்தீன், சட்டம் ஆகியவற்றைப் படிக்கலானார். மோகன்தாஸின் மரக்கறி உண்ணுதல், அவரை அபூர்வச் சாகசங்களிலும், இரக்கமுள்ள விசித்திரமான ஆங்கிலேயரின் தொடர்பிலும் கொண்டுவிட்டது. அவர்கள் உணவில் இத்தகைய சிறு மாறுதலைச் செய்வதன் மூலம் மக்களைப் புது யுகத்துக்கும், மெய்க் கடவுளிடமும் கொண்டு செலுத்தலாம் என்று நம்பினார்கள். அவர் லண்டன் மரக்கறியுண்போர் சங்கச் செயலாளராக எல்லாக் கூட்டங்களிலும் பங்கு கொண்டாலும், சபைக் கூச்சத்தால் ஒரு பேச்சும் பேசவில்லை. பாரிஸில் பொருட்காட்சி காணப் போய் சிறிது காலம் தங்கி, 'எபில்' கோபுரத்தைப் பார்த்துவிட்டு, லண்டன் திரும்பி பட்டதாரியாகி இந்தியா திரும்பினார் (1891). ஆனால் திவான் பதவி தர இந்தியாவில் யாருமில்லை. வழக்கறிஞராகியும் வாய்மையாளராய் இருந்ததால் தம் தேவைகளை நிறைக்குமளவிற்கும் சம்பாதிக்க அவரால் முடியவில்லை. தென் ஆப்பிரிக்காவுடன் தொடர்பு கொண்ட போர்பந்தர் கம்பெனி ஒன்றின் சட்ட ஆலோசகராக, நேட்டாலின் தலைநகரான டர்பனுக்கு 1893 ஏப்ரலில் சென்றார்.

அப்போதைய தென்னாப்பிரிக்கா பல இனங்களைச் சார்ந்த பன்னாட்டவர்களையும் இருக்க இடம் கொடுத்தது. கொடிய ஆத்திகப் போயர்கள் ஜுலுவின் ஓரங்களில் வாழ, ஆங்கிலேயரோ, அந்நாட்டைத் தங்கள் சிறந்த சந்தைக்காடாக்கி, சாலையும் ரயில்வேயும் அமைத்துக் குடியாட்சிக்கு வழிகோலினர். அடிமை முறை ஒழிக்கப்படவே உழைக்கும் ஆட்களாக ஒப்பந்தம் பேரில், கூலிகளாய் இந்தியர் அழைக்கப்பட்டனர். கறுப்பும் வெள்ளையுமின்றி பழுப்பு நிறத்தினரான இவர்களின் அந்தஸ்தை தீர்மானிக்க எவராலும் முடியவில்லை. வழக்கு

ஒன்றையொட்டி பிரிட்டோரியா சென்றபோது, பீட்டர் மாரிட்ஸ்பர்கில் நிறாவற்றுமையின் காரணமாக ரயிலிலிருந்து வெளியேற்றப்பட்டார். இதுவே அவரை விழித்தெழச் செய்த சம்பவம். நிலையத்தில் குளிரில் நடுங்கி, துணையின்றித் துன்புற்றார். உண்மையை நம்பியதால் அவமானப்படாமல், முன்னேறத் தீர்மானித்தார். பிரிட்டோரியா நோக்கி வண்டியில் போனபோது முரட்டு வெள்ளையனால் தாக்கப்பட்டும் இவர் திரும்பத் தாக்க மறுத்தார். மேலும் தமக்காக வழக்காடுவதில்லை என்றும் தீர்மானித்தார். பின்னர் வெள்ளையர்க்கென இருந்த பிரிட்டோரியா நடைபாதையில் காவலர்களால் உதைத்துத் தள்ளப்பட்டபோதும், வழக்காடவில்லை. இந்நிலையில் ''கூலி வழக்கறிஞர்'', கூலிகளைத் தரித்தநாராயணனைக் கொண்டு, ஆங்கில எஜமானர்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள இந்திய நாவிதர்க்கும், வணிகர்க்கும் ஆங்கிலம் கற்பித்தார். சட்டமன்றங்கட்குக் கடிதங்களும், லண்டன் ஏகாதிபத்திய அரசுக்கு வேண்டுகோள்களும் எழுதி, இந்திய அரசியல் பண்பாட்டுக் கழகங்களை நிறுவி, தென்னாப்பிர்க்கச் சிக்கலை ஏகாதிபத்திய-பன்னாட்டுப் பிரச்னையாக்கிவிட்டார். இப்படிச் செய்கையில் மலைப் பிரசங்கம், கண்ணனின் கீதோபதேசம் ஆகியவற்றின் அடிப்படையான ஆன்ம உணர்வில் மனித எழுச்சியைத் தூண்ட சத்தியாக்கிரகத்தைக் கண்டார். அதற்கு உண்மை, அன்பில் உருவான சக்தி அகிம்சை எனப் பொருள். அவரது நோக்கம், கூலியையோ, இந்தியாவையோ அன்றி, மனிதனையே விடுவித்தலாகும். இந்தத் தத்துவத்தோடு, அகிம்சை முறைகளில் தென்னாப்பிரிக்க இந்தியரின் உரிமைகட்காகப் போராடினார். எனினும் போயர் போரில் ஆங்கிலேயர் சிக்கியபோது, செஞ்சிலுவைக் குழு அமைத்து, மிக ஆபத்தான போர்க்களங்களில் பணி புரிந்தார். ஜுலுக்கள் புரட்சியில் படுகாயமுற்ற ஜுலுக்களுக்கும், வெள்ளையர்களுக்கும் சிகிச்சைச் செய்தார். கிறிஸ்தவர், முஸ்லீம்களுடன் அவர்களது மதம் பற்றிப் பேசி இந்துக்களின் குறைகளைச் சாடினார். 1914இல் அவர் தென்னாப்பிரிக்கா விட்டுப் புறப்பட்டபோது, அகிம்சைமூலம் எண்ணிய குறிகளை அடைந்து, சத்தியாக்கிரகத்தின் தனி மனிதத்துவ சாத்தியக் கூறுகளை உலகுக்குக் காட்டினார்.

ஸ்மட்ஸையும், சிறப்பாக ரோடஸையும் போல காந்தி பிரிட்டிஷாரின் முக்கியத்வத்தையும், உறுதிப்பாட்டையும் நம்பினார். மனித சமவுரிமை அரசைத் தோற்றுவிப்பதில் முதல் முயற்சியை மேற்கொண்ட ரோடஸ் எண்ண, காந்தியோ, சாம்ராஜ்யத்தின் துன்பமய உலகிலிருந்து டால்ஸ்டாயின் உலக சகோதர நேயத்தை நாடினார். காந்தி ஏற்கெனவே *(1901)* டால்ஸ்டாய்க்குத் தம் டிரான்ஸ்வால் அகிம்சை அனுபவங்களை எழுதியதற்கு, டால்ஸ்டாய் ''டிரான்ஸ்வாலில் நம் சகோதரருக்கு இறைவன் அருள்க'' எனப் பதில் எழுதி, சத்தி

# ஓர் அரிய வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள்

**மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் சிலவற்றைப் படங்களுடன் கீழே தருகிறோம். அவற்றின் வாசகங்களை எழுதியவர் பிரெஞ்சு கீழ்த்திசை வாணரான ஆலிவர் லக்கோம்ப். ஸோர்போனில் ஒப்பீட்டுத் தத்துவப் பேராசிரியராகவும் பாரிஸில் இந்தியா நாகரிக நிலைய இயக்குநராகவும் பணியாற்றும் இவர் இந்தியப் பண்பாடு, தத்துவம் பற்றி விரிவாக எழுதியுள்ளார்; "காந்தி அவ் லா ஃபோர்ஸ்தெ லா அமெ" (காந்தி அல்லது 'ஆன்ம வலிமை'யின் ஆற்றல்) எனும் நூலையும் எழுதியிருக்கிறார். பாரிஸில் உள்ள எட். ப்லோன் நிறுவனத்தால் 1964இல் வெளியிடப்பட்டுள்ளது.**

Photo © Snark International



இந்தியாவில் காந்தி, 7 வயது...

Photo PIB, New Delhi



17 வயது

## 1. லண்டனில்
## இந்து மதம் பற்றி மறு ஆய்வு

*மேற்கு இந்தியாவிலுள்ள கத்தியவார் தீபகற்பத்தின் தென்மேற்குக் கரைத் துறைமுகமும் ஒரு சிற்றரசின் தலைநகருமான போர்பந்தரில் அக்டோபர் 2, 1869இல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். அங்கு அவர் தந்தை உட்பட, குடும்பத்தினர் பலர் முதலமைச்சர்களாகப் பணியாற்றினர்.*

*1948 ஜனவரி 30ஆம் தேதி அவர் தமது 79ஆவது வயதில் ஓர் இந்து தீவிரவாதியினால் கொல்லப்பட்டார்.*

*அவரது வாழ்க்கையில் மூன்று பெரும் பகுதிகள் உள: (1) எதிர்காலப் பணியுடன் நெருங்கிய தொடர்பில்லாத பயிற்சிப் பருவம்; இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கழிந்த இப்பகுதி 1893இல் அவரது 24வது வயதில் முடிந்தது. (2) காந்தி தமது ''முறை''யை வகுத்து அதை தென்னாப்பிரிக்காவில் இந்தியர் வாழ்ந்த பகுதிகளில் தற்காலிகமாகப் பயன்படுத்திய காலம் (1893-1914); (3) தமது முறையை இந்தியாவிலே சீர்படுத்தி, அது தாம் பேணிய பரந்த நாட்டின் எல்லை கடந்து செல்லும்வரை அதைப் பரவலாகப் பயன்படுத்தி வந்த செயல் நிறைவுக் காலம். (1915-1948)*

*படித்த பல இந்தியரைப் போல் காந்தியும் நமது உள்ளம் கவர்ந்த கீழ், மேல் நாடுகளின் பண்பாடுகளைக் கற்று ஒன்றாக இணைக்க வேண்டியிருந்தது, அவரது குழந்தைப் பருவம் இந்து மரபில் எவ்வளவு மூழ்கியிருந்த தென்பதை எளிதில் காணலாம். இந்து சமூக படி நிலையில் அவரது 'சாதி' மூன்றாவதாக இருந்தது. (காந்தி என்றால் 'வாசனைப் பொருள் வணிகன்' என்று பொருள்) ஆயினும் அவருடைய குடும்பத்தினர் சிலருக்கு வழங்கப்பெற்ற அரசியல், ஆட்சித் துறை அலுவல்களால் அக்குடும்ப நிலை உயர்ந்தது.*

*காந்தியின் 16-ஆவது வயதில் அவர் தந்தை இறந்தார். ஈராண்டுகளுக்குப் பின் அவர் தமது சாதியின் விருப்பத்தை எதிர்த்து இங்கி*

**ஆலிவர் லக்கோம்ப்**

Photo Sumati Morarjee, Bombay

இலண்டனில் சட்ட மாணவன், 20 வயது

PIB, New Delhi

ஜோஹன்னஸ்பர்க் (தென்னாப்பிரிக்கா வழக்கறிஞர்) 40 வயது

# 2. தென்னாப்பிரிக்காவில் நிறவெறிப் போராட்டம்

லாந்து சென்றார். அதற்காக சாதியிலிருந்து விலக்கப்பட்டார். பிரிட்டனில் (1888-1891) சட்டம் பயின்றபோது மேல்நாட்டுப் பண்பாட்டை நன்கு அறிந்ததுடன் தமது இந்து மதத்தையும் திரும்ப ஆய்ந்துணர்ந்தார்.

பிற்காலத்தில் அவருக்கு ஆறுதலளித்த 'பகவத்கீதை'யை' 'விண்ணகப் பாடலை' அவர் அப்போது படித்ததில்லை. சர் எட்வின் ஆர்னால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பை முதலில் படித்தார், வடமொழி முதல் நூலையும் ஒப்பிட்டுப் பார்த்தார். அதே ஆங்கிலக் கவிஞர் தாம் 'தி லைட் ஆப் ஏசியா'வில் அவருக்குப் புத்தரது காவியத்தை அறிமுகப்படுத்தினார்,

காந்தி படித்த நூல்கள் அவருக்குத் தமது முன்னோரின் மதத்தின் மேலிருந்த இயல்பான பற்றை வளர்த்தன. ஆயினும் அவர் விவிலியத்தையும் படித்தார், தீவினையைத் தீவினையினால் எதிர்க்கக் கூடாது என்ற மலைப் பேருரையின் கொள்கை அவரது உள்ளத்தை ஈர்த்தது.

1891இல் இந்தியா திரும்பிய காந்தி இந்திய வழக்கறிஞர் நிலையப் பிரதிநிதியாக தென்னாப்பிரிக்கா சென்று, 1893 மே இறுதியில் நேட்டால் சேர்ந்தார், உடனே அங்கு இனம், நிறம் காரணமாக அவருக்கு ஏற்பட்ட இன்னலும் காட்டப்பட்ட வேறுபாடும் அவரது வாழ்க்கையையே மாற்றியமைத்தன. தென்னாப்பிரிக்காவில் வெறுப்புக்கும் பகைமைக்கும் பலியான தமது நாட்டினரின் உரிமைகளைக் காக்க உறுதி கொண்டார்.

அவர்கள் காந்தியிடம் அமைதி நாட்டமும், ஆனால் உறுதியான ஆற்றலும், தெளிவும் நுட்பமும் புத்தாக்கமுமுள்ள உள்ளமும், இருந்ததைக் கண்டு அவரை வரவேற்றனர். அவர்கள் எதிர்பார்த்தவாறே நிகழ்ந்தது. ஏனெனில் அவர் பொதுநலம் எனத் தாம் கருதியதைத் துணிவுடன், உறுதியாக விடா முயற்சியுடன், ஆனால் அப்போது சாதிக்கக் கூடிய அளவில் நிறைவேற்றினார். வீரத்தை விட விவேகம் சிறந்ததென அவருக்குத் தெரியும்.

1894இல், இந்தியரின் நலன்களைக் காக்க நிரந்தர நிறுவனம் அமைக்கக் கருதி, அதே ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசைப் போல் நேட்டால் இந்திய காங்கிரசை நிறுவினார்.

1904இல் "இந்தியன் ஒபினியன்" என்ற வார இதழைத் தொடங்கி, பணமும் கட்டுரைகளும் வழங்கினார். பிறகு அதன் முழுப் பொறுப்பையும் ஏற்று தமது சேமிப்பை அதற்கெனச் செலவழித்தார்.

நிலைமை மோசமானதும், நிற வெறிப் போராட்டம் வலுவடைந்ததும் அது காலத்திற்கேற்ற கருவியாகப் பயன்பட்டது.

யாக்கிரகத்தை ஊக்கினுர். சீக்கிரமே டால்ஸ்டாய் இறந்த பின், ஜெர்மனியரும், பிரிட்டிஷாரும் (பிரெஞ்சுக்காரரும் ரஷ்யரும்) செர்பியாவில கொலையுண்ட அரச சந்ததியின் பிணத்திற்காகப் போரிடக் காந்தியோ, போர் இம்சையில் நம்பிக்கை இல்லையெனினும், உண்மைப் பிரிட்டிஷ் குடிமகனுக, அரசுக்கு வேண்டிய படையைத் திரட்டித் தந்தார். காந்தியின் உடல்நிலை அவரை இந்தியாவிற்கு மீள வைக்கையில், பெருந்தலைவர் கோகலே காந்தியை இந்திய அரசியலுக்காக வாழ்வை அர்ப்பணிக்க வற்புறுத்தினுர். பம்பாய் நகர மண்டபத்தில் கோகலே, ''காந்தியிடம் எளிய மனிதனை வீரர்களாக மாற்றும் சிறந்த ஆன்மீக சக்தி உள்ளது' என்ருர்.

போர் வந்து சென்றது. இந்தியர் பிளாண்டரிலும், மத்தியக் கிழக்கிலும் போரிட்டனர். பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் வாக்குறுதி தந்தனர். ஆனல் அமைதி வந்தபோது, பிரிட்டனுக்கு இந்தியாவை இழக்க விருப்பமில்லை. எங்கும் குழப்பம். அடக்குமுறை, இம்சை மலிந்தது. காந்தி வாக்குறுதிகளை மதிக்கவும், நல்லுறவுக்காகவும் வாதாடினுர். பிரிட்டிஷார் செவிசாய்க்கவில்லை. இதற்கிடையில் போரின்போது பீகாரில் அவுரி பயிரிடுவோர், நேட்டால் கூலிகளைப் போல் நடத்தப்பட்டதால் அவர்களைக் கவனித்து, நேர்மையோடு விவரங்களைச் சேகரித்துச் சம்பாரனில் தொழிலாளர் அடிமைகளாய் நடத்தப்பட்டதை வெளி உலகுக்குணர்த்தினுர், தென்னுப்பிரிக்காவிலும் பிரிட்டனிலும் நல்லிதயம் படைத்த ஆங்கிலேயர்கள் அவரை ஆதரித்தனர். ஒவ்வொரு முறையும் சோதித்தபோது, வேறுபாடின்றி, உண்மைக்கு இச்சக்தி இருப்பதைக் கண்டதாகக் கூறினுர். அவருக்கு எதிரிகளில்லை; கருத்து மாறுபட்டோரே உண்டு. கருத்து மாறுபாடும் ஓர் அமைப்பேயொழிய மனிதனில்லை. ஒவ்வொரு முறையும் ஓர் ஆங்கிலேயன் நம் கருத்தை ஏற்கையில், கருத்து மாறுபாடு நலிகிறது. இதற்குள் தர்ம் தலைமை பூண்ட இந்தியத் தேசிய காங்கிரசின் துணையோடு, ஹர்த்தால் செய்ய, தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கும் அலுவலகர்கள் பணிமனைகளில் பணிகளைக் கைவிட, ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினுர். சில சமயங்களில் சிலவிடங்களில் பலாத்காரம் தலைகாட்டியபோது, தொண்டர்களைத் தடுத்துப் பிரார்த்தனைச் செய்யச் சொன்னுர். நாம் சத்தியாக்கிரகத்துக்கு இன்னும் தயாராகவில்லை. மீண்டும் ஹர்த்தாலும், சத்யாக்கிரகமும் தொடங்கும். அகிம்சை அலைகள் அடுத்தடுத்து இந்தியாவை ஆட்டியதால் ஆர்வம் மிகுந்தது. ஸ்மட்ஸைப் போன்றே பிரிட்டிஷாரும் இதற்குத் தயாராயில்லை. சில சமயங்களில் சில இடங்களில் மீண்டும் பலாத்காரம் தலைதூக்கியது. நாடு ஆன்மீக அரசியல் விழிப்புகளில் பக்குவப்படவில்லை. பிறகு அவர் 140 கிராமங்களைக் கொண்ட சிறு பகுதி (பர்தோலி)யில் அகிம்சையையும் சத்தியாக்கிரகத்தையும் பரிசோதித்தார். அது பெருவெற்றியாகி நாடு எழுச்சியுற்றது. சௌரி சௌராவில் சில போலீஸ்காரர்கள், மிருகத்தனமாகக் கொல்லப்பட்டபோது, பெரும்பாலான தொண்டர்களின் கருத்துக்கு மாருக, அவர்களின் வெறுப்போடு அப்போரை நிறுத்தினுர். இந்தியா இன்னும் சுயராஜ்ய சுதந்திரத்துக்குப் பக்குவப்படவில்லை. நாம் உண்ணுவிரதம் இருந்தும் பிரார்த்தனை செய்தும் இதற்குத் தயாராக வேண்டும். எனினும் பிரிட்டிஷார் அப்படிச் செய்ய விடவில்லை. அவர் கைதாகித் தீர்ப்பு வழங்கும் நிலையில், பிரிட்டிஷ் பாரம்பரியத்தைப் பெருமைப்படுத்தும் முறையில் நீதிபதி, ''உங்கள் அரசியலிருந்து மாறுபட்டோரும், தங்களை உயர்ந்த கோட்பாடுகளும் புனித பலமும் வாழ்வும் உள்ளோராகவே கருதுகின்றனர்''. என்ருர். ஆருண்டு சிறைப்பட்டார் எனினும், அவர் விடுவிக்கப்பட்டால், தம்மைவிட யாரும் மிக மகிழ முடியாதென்ருர், நீதிபதி. மருத்துவ காரணங்களால் இரண்டாண்டுகளில் விடுவிக்கப்பட்டார்..

கடைசி சத்தியாக்கிரகி இருக்கும் வரையும், தோல்வியில்லை. இதுவே காந்தியச் சாரம். அவர் ஒருவரே இருக்கும் வரை சத்தியாக்கிரகம் தொடரும். இதற்கு ஒழுக்கமும், உறுதியும், பிரார்த்தனையும் தேவை. அவர் ஏற்கெனவே அகமதாபாதில் சபர்மதி ஆஸ்ரமம் நிறுவியிருந்தார். அவர் அங்கே தொண்டர்களைப் போருக்குத் தயாரித்தார். அவர் வாய்ப்பைத் தேடுவதில்லை. வாய்ப்பு அவரைத் தேடி வரும். அப்போது உண்மையோடும் அகிம்சையோடும், அறப்போருக்குப் போவார். என்ருவது ஒருநாள் மாறுபட்டவரின் மனம் மாறி, நம் துன்பம் அவனை மாற்றி, மனிதனின் சமவுரிமை அரசு இனியும் அமைக்கப்பட முடியும் என நம்பினுர்.

இதற்கிடையில் இந்து—முஸ்லீம் ஒற்றுமையைப் போதித்தார். தென்னுப்பிரிக்காவிலும், பெரும்பாலான தலைவர்கள் முஸ்லீம்களாகவும், பல நிலைகளில் இந்துக்களும் இருந்தனர். இந்தியாவில் சகோதரப் பங்காளிகள்போல் அவர்கள் போரிடுகின்றனர். அவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மேலிருந்த நம்பிக்கையை இழந்தார். பிரிட்டன் நம் மனிதத் தன்மையை அபகரித்து, இரத்தக்களரியாக்க வந்துள்ளனர். எனவே, இயக்கத்தின் தொடக்கமாக உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கி (மார்ச் 1930) தொண்டர்களுடன் கடல் நோக்கிச் சென்றுஇறுதியில் அரசின் ஏகாதிபத்தியதைத் தகர்க்கக் கடற்கரையில் உப்பு எடுத்தார். இயற்கை, காற்று, நீர்போல், இலவசமாய்த் தந்த ஏழையின் உணவான, தரித்திர நாராயணனின் தேவையான உப்புக்காகப் பணம் செலுத்த, ஏழைகளை அரசு பட்டினிக் கிடக்கச் செய்தது. இச் சத்தியாக்கிரகம் முந்தையதைவிடப் பெரிதாகி, இந்தியா எங்கும் பரவியது. மீண்டும் கைதாக்கி விடுவித்து, ஆலோசனைக்காக லண்டனுக்கு அழைத்தனர். அவர் கேட்டதைப் பெருநிலையில் திரும்பியதும் மீண்டும் கைதானுர். அரசு தீண்டப்படாதோர்க்குத் தனி பிரதிநிதித்துவம் தரவே, காந்தி உண்ணுவிரதம் தொடர்கையில் அவர்

## 3. துறவும் அகிம்சையும் தொடங்குதல்

ஜோஹன்னஸ்பர்க் போராட்டக் களமாக மாறியதும் காந்தியின் புதிய முறையும் தொடங்கியது. அதற்கென 'சத்தியாக்கிரகம் (சத்திய : உண்மை; அக்ரஹா : பற்று) எனும் புது வடமொழிச் சொல் புனையப்பெற்றது.

அதிகாரிகளுடன் கடும் போர் தொடங்கியது. 1906-க்கும் 1914-க்கும் இடையில் காந்தி ஆறு முறை கைதாகி, நான்கு முறை சிறைத் தண்டனை பெற்று, ஓராண்டுக்கு மேல் சிறையில் கழித்தார் ஆனல் அவர் இறுதியில் வெற்றி பெற்ருர். ஜூலை 1914-இல் அவர் தென்னுப்பிரிக்காவை விட்டு வெளியேறுமுன் இந்தியாவின் முக்கிய கோரிக்கைகளை ஏற்கும் வகையில் இந்திய நிவாரணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தென்னுப்பிரிக்க அரசாங்கத்துடன் நீண்ட போராட்டம் நிகழ்த்திய காந்தியுடன்

1899இல் தென்னுப்பிரிக்க போயர் போரில் தாம் நிறுவிப் பயிற்சியளித்த இந்திய மருத்துவக் குழுவினருடன் காந்தி.

Photo PIB, New Delhi



தென்னாப்பிரிக்காவை விட்டுப் புறப்படு முன் 45 வயதான காந்தி, நீண்ட காலமாக கட்டுப் பாட்டுடன் வாழ்ந்து அகிம்சையை வெற்றிகரமாகக் கடைப்பிடித்தார். தென்னாப்பிரிக்காவில் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார்.



Photo, Gandhi Smarak Sangrahalaya, Ahmedbad

1896இல் அவர் மனைவி கஸ்தூரி பாயும் இரு மக்களும் மருமகனும் சேரவே அவரது குடும்ப வாழ்வு பெரிதும் மாறியது. அவரது தனிப்பட்ட வாழ்க்கை பொது வாழ்க்கையுடன் ஒன்றாகி அதற்குத் தூய்மையும் ஆற்றலுமளித்து, அதனால் ஊக்கமும் உற்சாகமும் பெற்றது.

எளிய துறவு வாழ்வில் நாட்டமும் ஏழைகளோடு வாழ விரும்பும் பேரவாவும் அவரை நகரையும் அதன் செயற்கை வாழ்க்கையையும் துறந்து, தாம் நிறுவிய ஃபீனிக்ஸ், டால்ஸ்டாய் பண்ணைகள் ஆகிய கிராமப் பகுதிகளுக்குச் செல்லத் தூண்டின. அங்கு அவர் தமது விருப்பம்போல் கல்வி கற்றுக் கொடுத்து வந்தார்:



# 4. இந்தியாவில் முதல் போராட்டம்: தீண்டாமை ஒழித்தல்

Photo PIB New Delhi

**1915இல் இந்தியா திரும்பிய காந்தியும் அவர் மனைவி கஸ்தூரி பாயும்.**

காந்தி லண்டன் வழியாக இந்தியா திரும்பும் போது முதல் உலகப் போர் தொடங்கியது. அவர் தமது 45வது வயதில் ஜனவரி 9, 1915இல் பம்பாயில் இறங்கினர். ஏற்கெனவே அவர் மிதமான வன்முறை விரும்பாத புரட்சியாளராக இருந்தார். எதற்கும் இணங்காமல், கடுமையான குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். அத் தனி முதல் குறிக்கோள்கள் அடைய முடியாதவை போல் தோன்றின. அவர் நடைமுறைக்கேற்ற வாய்ப்புக்களையும் நழுவ விடவில்லை. அவர், தாமே கூறியதுபோல் ஒரு "நடைமுறை லட்சியவாதி"யாக விளங்கினர்.

மேலும், அரசியல் காரியங்களைத் தவிர்த்த போதிலும் அடிக்கடி அரசியல் துறையில் நுழைந்தார். மதம் அறவியலுடனும், அறவியல் சமூக, அரசியல் வாழ்வுடனும் நுட்பமாகக் கலந்திருந்தது என்றும் தாம் தீர்க்க விழைந்த பிரச்னைகளின் முடிவு அரசின் முடிவுகளைப் பொறுத்தது என்றும் கருதினர், இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்த பிறகு காந்தி மே 25, 1915இல் அகமதாபாத் அருகில் சத்தியாகிரக ஆசிரமத்தை நிறுவினர். தென்னுப்பிரிக்காவில் நிறுவியவற்றை போல் அதுவும் கற்றுக் கொடுத்து, போராட்டங்களைத் திட்டமிட்டு, வழிபட்டு, எழுதி, படிக்கும் இடமாக அமைந்தது.

முதலில் அங்கு 25 ஆண்களும் பெண்களும் இருந்தனர். சிலர் தென்னுப்பிரிக்காவின் ஃபீனிக்ஸிலும் டால்ஸ்டாய் பண்ணைகளிலுமிருந்தும், பிறர் இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்து வந்தனர், காந்தி தீண்டப்படாத குடும்பம் ஒன்றினை அங்குச் சேர்த்துக்கொண்டார். ஆசிரமத்தின் உள்ளும் புறமும் அதற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனல் இந்தியரே தாங்கள் ஒரு சிலரது மனிதத் தன்மையை மதிக்கவில்லையெனில் அந்நிய ஆட்சியாளர் அவர்களை எப்படி மதிக்க முடியும்?

இவ்வாருக காந்தி இந்து சமூகத்தின் மரபான அமைப்பாகிய சாதிமுறையை எதிர்க்க நேர்ந்தது. அவர் அதை சமூகப் பிரச்னையாகக் கருதாமல் அற நோக்குடன் அணுகினர். சாதி முறையின் அடிப்படைக் கொள்கையை அவர் எதிர்க்கவில்லை. அதனல் கடந்த காலத்தில் விளைந்த நல்விளைவுகளையும், பல சாதியினரின் உரிமைப் பிணக்கில்லாமல் அவர்களின் வெவ்வேறு தொழில்களின் அடிப்படையில் எழுந்த சமூக அமைப்பின் பயனையும் உணர்ந்திருந்தார். ஆயினும் அதை பாழ்படுத்திய தீய பழக்கங்களையும் வன்செயல்களையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். அதன் அடிப்படையையும் நடைமுறையையும் முற்றிலும் மாற்ற விரும்பினர்.

குறிப்பாக தீண்டப்படாதவர்களுக்கு ஏற்பட்ட இகழ்ச்சி கண்டு வெறுப்புற்ருர்; அவர்களுக்கு ஹரிஜனங்கள் (இறைமக்கள்) எனப் புதிய பெயர் வழங்கினர். அவர்களுக்கு இன்னல் இழைத்த இந்து சமூகத்திலே அவர்கள் உரிமையுடன் வாழ வழி வகுக்க உறுதி கொண்டார்,

1915இல் உலகப் போரின்போது காந்தி பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக சத்தியாக்கிரகத்தைப் பயன்படுத்தவில்லை.

பீகாரில் சாம்பரான் அவுரித் தோட்டங்களில் குத்தகைக் குடிகளை துன்புத்தி வந்த பண்ணையாளர்களுக்கும் குறைந்த கூலி கொடுத்து மிகுந்த வேலை வாங்கி வந்த அகமதாபாத் ஆலை முதலாளிகளுக்கும், எதிராக முதன் முதலில் இந்தியாவில் அகிம்சை போராட்டம் நடத்தினர். ஆனல் பேரரசுடன் ஒத்துழைத்தார். தமது பற்றுறுதியினுலும் பெருந்தன்மையினுலும் தாம் மதித்து அன்பு காட்டிய பிரிட்டிஷாரின் பற்றையும் பெருந்தன்மையையும் பெற விழைந்தார்.

இறந்தால் இரத்தப் புரட்சி ஏற்படுமென அஞ்சினர். அரசு விட்டுத் தந்தது; தீண்டாமைப் பிரச்னையைக் காங்கிரசிடம் விட்டது.

நிகழ வேண்டியவைகளுக்காகத் தன்னையும், நாட்டையும் தயார்படுத்த அரசியலிலிருந்து சிறிது காலம் விலகினர். இதற்குள் இட்லர் போருக்குத் தயாரானர். யூதர்கள் கொலையுண்டனர். ஜப்பான் ஆசிய சாம்ராஜ்யத்துக்காகப் படை திரட்டியது. நடைமுறைக் காரணங்களுக்காக காந்தி இந்தியா சுதந்திரம் அடைந்து, பன்னாட்டு விவகாரங்களில் தன் பங்காற்றவும், போராடும் நாடுகளிடையே அமைதிக்குதவவும் வேண்டுமெனவிரும்பினர். அவர் இந்தியாவின் சுதந்திரத்திற்காகவன்றி, எப்போதும் முழு மனித இன நலம் ஒன்றியுள்ள விடுதலைக்காகவே போராடினர். ஆயின் பிரிட்டிஷார் அதைப்புரிந்து கொள்ளும் மன நிலையில் இல்லை. இட்லர் போலந்திலும், ஜப்பானியர் பேர்ல் துறைமுகத்திலும் நுழைந்தபோது காந்தி அவர்களுடன் தாம் பேச அனுமதி கேட்டார். சர்ச்சில் இந்த ''நிர்வாணப் பக்கிரி''க்கு செவிசாய்க்கும் மன நிலையில் இல்லை. மலேயாவிலும், பிற இடங்களிலும் மேற்கிலும் வந்த தோல்வி பிரிட்டனை ஆட்டிவிட்டது. ரொமெல் இந்தியாவை நெருங்கிவிட்டார். இழப்பு பிரிட்டிஷாரை இந்தியாவில் கொடூரமாக்கியது. ஆனல் காந்தி பிரிட்டிஷார் உதவி கேட்கையில், மோதவில்லை. எனினும் பிரிட்டிஷார் புரிந்து கொள்ளாததால், அவர்கள் ஜர்மானியர், ஜப்பானியரிடையில் பிடிபட்டபோது, காங்கிரசில் புகழ்பெற்ற பேச்சில் (ஆகஸ்ட் 1942) ''வெள்ளையனே வெளியேறு'', ''இந்தியாவை இறைவனின் ஆணைக்கு விடு'' என்று சொன்னர். சர்ச்சில் அவரையும், அவர் துணைவர்களான நேருவையும், நம் காலத்தில் சிறந்த முஸ்லீம் சமயவாதியான காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆசாதையும் கைது செய்தார். காந்தியும், பிற முக்கிய இந்தியத் தலைவர்களும் கைதான செய்தியால், 1857 சிப்பாய்க் கலகத்திற்குப் பின், புரட்சி நிலையும், பேரெழுச்சிகளும் 6 மாதத்துக்கு நீடித்தன. பலாத்கார முறையில் இருப்புப் பாதை பெயர்க்கப்பட்டது; தந்திக் கம்பிகள் வெட்டப்பட்டன; அரசுப் பணிமனைகள் சூரையாடப்பட்டன. இன்றுவரை ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தில் சுடப்பட்டவர் தொகை கணக்கிடுதல் அரிது. ஐரோப்பாவில் நேச நாடுகளின் வெற்றியும் நிகழவுள்ளவையும் இந்தியாவிற்கு அனுகூலமாயின. (ஆறு ஐரோப்பியரே

Photo Unesco Cart

தீண்டப்படாதவரை நுழைய விடாத எக்கோயிலினுள்ளும் காந்தி நுழைய மறுத்தார். பல ஆண்டுகள் அதற்காக அவர் உழைத்து உண்ணாநோன்பிருந்ததனால் நூற்றுக்கணக்கான கோயில்களில் அத்தடை நீக்கப்பெற்றது. நிழற்படம் தமிழ்நாட்டிலுள்ள மதுரைக் கோயிலைக் காட்டுகிறது.

மாண்ட) ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கம், பிரிட்டிஷ் அரசின் உறுதியைத் தகர்த்ததால், இந்தியக் கடற்படை பிரிட்டிஷாருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து, ஆங்கில வீரர்கள் தாயகம் மீள விரும்பிய நிலையில் (அவர்கள் இந்தியருடன் போரிடவில்லை) பிரிட்டன் இந்தியாவுக்குச் சுதந்திரமளிக்கத் தீர்மானித்தது. அப்போது ஜின்னாவும், முஸ்லீம் லீகும் பலமடைந்திருந்தனர். இந்துக்கள் பெரும்பாலாக உள்ள நாட்டில் அவர்கள் முக்கியமான ஆதரவற்ற சிறுபான்மையினராகவே இருப்பர் என அஞ்சினர். காந்தியும், நேருவும் அவர்களுடன் வாதாடினர். இதில் வேடிக்கையானது பெரிய முஸ்லீம் சமயவாதியான மௌலானா ஆசாத், காங்கிரசின் தலைவராயிருந்ததே. ஆயின் அரசியல், உண்மைக்கு உட்பட்டதல்ல, காந்தியே தம் பழைய நண்பர் ஜின்னா விரும்பினால் முழு இந்தியாவையும் கொடுக்க எண்ணினார். பிரிட்டிஷார் அரசரின் ஒன்றுவிட்ட சகோதரரான மௌண்ட்பேட்டனை இந்தியாவின் வைசிராயாக அனுப்பினர். இவ்வாறு சுதந்திரம் வந்தபோது, காந்தி பிரிவினையின்போது ஏற்பட்ட இந்து-முஸ்லீம் கொலைகளைத் தவிர்க்க முயன்றார். அவர் இந்துக்களிடையில் முஸ்லீம்களைக் காக்கச் சென்றார். அவர் இந்தியர்கட்குத் துணிவூட்ட பாகிஸ்தான் போனார். சத்தியாக்கிரகிக்கு மரண பயமில்லை. உண்மையில் அதுவே சரியான சாவு. வளைந்த மூங்கில் பாலங்களின் மேல் நடந்தும், ஏழைவீட்டில் தூங்கியும், காலை, மாலை சர்வ சமய நூல்களைப் படித்துப் பிரார்த்தித்தும், குக்கிராமந்தோறும் அன்பைப் போதித்தார். இறுதியாக டெல்லிக்கு வந்து, ராம் லீலா வெளியில் மாலைதோறும் உலக சகோதரத்துவத்தைப் போதித்தார். அவர் மனைவி ஏற்கெனவே சிறையில் இறந்தார். அவர் மெலிந்து தனியராகி, சரியாகப்புரிந்துகொள்ளப்படாதவராக வருந்துபவராகத் தெரிந்தார். முஸ்லீம்களைக் காத்ததால், இந்துக்கள் வெறிகொண்டு, அவரைக் கொல்லச் செய்த சதிகளை அரசு அறிய வந்தும், அவர் எவ்விதப் பாதுகாப்பையும் ஏற்க மறுத்துவிட்டார். முஸ்லீம்களையும், பாகிஸ்தானையும் அரசும், இந்தியரும் நன்கு நடத்துவதற்காக, அப்போதுதான் உண்ணாவிரதம் தொடங்கினார். ஓர் இந்து இளைஞன், அவரை மதித்தபோதும் இந்து இந்தியாவுக்கு அவரது பேச்சுக்கள் ஆபத்தென்று எண்ணி, ஒரு நாள் மாலை அவர், பிரார்த்தனைக்குச் செல்கையில் மண்டியிட்டுக் கொன்று விட்டான். ''ஹே ராம்'' என்று கத்தினார். உண்மைக்காக மறைந்தார்.

ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன், ''வரும் தலைமுறைகள் இவ்வுலகில் இத்தகைய ஒருவர் தோன்றி வாழ்ந்தார் என்பதை நம்புவதும் அரிது'' என்று கூறியுள்ளார்.

தமிழில்: மனசை ப. கீரன்

## 5. சிறைத் தண்டனை, உண்ணாநோன்பு, வேலை நிறுத்தம், மக்கள் ஆர்ப்பாட்டம்.

1918—19இல் காந்தியின் கொள்கையில் முக்கிய மாற்றம் ஏற்பட்டது. புதுடெல்லியில் பேரரசாட்சிக்குஎதிராக ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியது, போர்க் காலத் தடைகளை நீடித்த அவசரச் சட்டங்களே இதற்குக் காரணம். அவை அமைதிக் காலத்தில் முறையற்றவை என்றும் காந்தியும் அவரைப் பின்பற்றியவர்களும் கருதினர்.

காந்தி தலைமைப் பதவியை நாடவில்லையெனினும், மக்கள் அவரை நாட்டின் விடுதலை இயக்கத் தலைவராக ஏற்றுக்கொண்டனர். அவருக்கு இரு தெளிவான நோக்கங்கள் இருந்தன: சீடர்கள் உறுதி குலைந்து, பொது மக்கள் கட்டுப்பாடின்றி இருந்த போதிலும் அவர் போராட்டத்தை வன்முறையின்றி நடத்தத் துணிந்தார். மேலும், எளிதில் பெற முடியாததுபோல் தோன்றிய சுதந்திரத்தை அடைந்தே தீரவேண்டுமென தீர்மானித்தார்.

முதல் நோக்கத்தை நிறைவேற்ற, ஒத்துழையாமை'யை அதாவது அநீதிக்குப் பணியவோ அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவோ மறுப்பதை வன்முறையில் நிகழ்த்தக் கூடாது என்று காந்தி கருதினார். தியாகம், தூய்மை அடிகளையும் சிறைத் தண்டனையையும் ஏற்றல், மக்களுக்கும் பொருளுக்கும் தீங்கிழையாமை போன்ற பண்புகளால் உரிமைகளை வலியுறுத்தினால் மட்டும் உண்மையான மாசற்ற சுதந்திரம் பெறலாமெனக் கூறினார். இறுதி நோக்கம் நிறைவேறும் வரை வன்முறையற்ற வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும். உண்ணா நோன்பும் இடையறாது நடந்து வந்தன. 1918இலிருந்து 1948 வரை காந்தி 15 நீண்ட உண்ணாவிரதம் இருந்தார்: அவற்றுள் மூன்று 21 நாட்கள் நீடித்தன; இரண்டை, கோரிக்கைகள் நிறைவேறும் வரை, சாகும்வரை நடத்தத் துணிந்தார்: சில வேளை அமைதி நிலவிய போதிலும் காந்தி விழிப்பாகவே இருந்தார்.

காந்தி இந்திய தேசிய காங்கிரசுக்கும் நாட்டிற்கும் மக்களின் மதிப்பையும் ஆதரவையும் பெற்ற தலைவராக இயங்கினார், ஆனால் அனைவரும் சத்தியாக்கிரகத்தின் தேவையைஉணரவில்லை, பிப்ரவரி, 1922இல் வெற்றி நிலையில் மக்கள் வன்முறையில் ஈடுபட்டதால் காந்தி அவ்வியக்கத்தைக் கண்டித்து நிறுத்தவும் துணிந்தார்,

பலமுறை கைதாகி. இந்தியாவிலும் தென்னாப்பிரிக்காவிலும் 5 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் கழித்த காந்தி உண்ணா நோன்பிலிருந்து அகிம்சைப் போராட்டங்கள் பல நாடு முழுவதிலும் நடத்தினார். இங்கு கல்கத்தா அருகிலுள்ள சிறையில் அரசியல் கைதிகளைப் பார்க்கிறார்.

photo © Snark International

# அகிம்சையின் மரபு

**ரெனே ஹபாஹி**

**கா**ந்தியடிகளின் மறைவுக்குப் பின்; நாம் அடையாளங் கண்டு கொள்ள முடியாத அளவிற்கு உலகில் வன்முறை பல்வேறு உருவங்களில் வளர்ந்துள்ளது. விரும்பியவாறெல்லாம் கருத்தை உருவாக்கும் வன்முறை, பொருளாதாரத் துறை வன்முறை, வானொலி, செய்தித்தாள், வெள்ளம்போல் பரவி வரும் விளம்பரங்கள்ஆகியவை மூலம் நுட்பமான ஆதிக்கங்கள்; போர்க்கருவிகள் மூலம் வெளிப்படையான வன்முறை; வளம் பொருந்திய நாடுகளில் அதிக நுகர்வுப் பொருள்கள் வேண்டியும் ஏழை நாடுகளின் வறுமையின் காரணமாகவும் ஏற்படும் ஆரவாரங்கள் ஆகியவை இன்றைய உலகில் நாம் காணும் இம்சையின் பல்வேறுவகைத் தோற்றங்களாம். இவைகளைக் கண்டு தான் பிரேசில் நாட்டு அகிம்சைவாதியான டான் ஹெல்டர்காமரா, ''வெளிக்குத் தோன்றும் அகிம்சைக்கும் ஒழுங்கிற்கும் உள்ளே அமைதியைக் குலைக்கும் அபாயங்களும் அப்பட்டமான அநீதியும் அடங்கிக் கிடக்கின்றன'' என்று கூறினார்.

உடனே நமக்கு ஓர் ஐயம் தோன்றுகிறது. நாம் எல்லோரும் இம்சை சூழ் நிலையில் வாழவில்லையா? நாம் அதை மற்றவர்கள் மீது திணிக்கவில்லையா? ஆழ்ந்து வேர் விட்டிருக்கும் வன்முறைக்கு, நம் வாழ்க்கையில் நாம் அறியாது நுழைந்து மரணத்தையும் பேரழிவையும் உண்டாக்கும் வரை மறைந்து கிடக்கும் வன்முறைக்கு, நாமெல்லோரும் காரணமானவர்கள் அல்லவா?

இவ்வாறு எங்கும் தோன்றியிருக்கும் வன்முறையை காந்திஜி இருந்தால்—வழக்கத்திற்கு முரணான முறையில்—அகிம்சைகொண்டு எதிர்த்திருப்பார். அவைகளைப் பலவீனத்துடன் ஏற்கமாட்டார்; கோழைத்தனமான சாத்வீகம் பேசமாட்டார். வன்முறை வடதுருவம் என்றால் அகிம்சை தென்துருவம். வன்முறையைத் தலைகுப்புறக் கவிழ்த்தினால் அகிம்சை வரும். வன்முறைக்குத் தேவையான சக்தி அகிம்சைக்கும் தேவை. இம்சையைச் சமாளிக்கும் அளவிற்கு அதை ஒரு தார்மீக சக்தியாக மாற்ற வேண்டுமென்றாலோ இன்னும் சற்று அதிக சக்தி தேவை.

> ''கொடுங்கோலனுடைய வாளின் கூர்மை மழுங்குமாறு செய்வதே என்நோக்கம். அதற்காக, அதைக் காட்டிலும் கூர்மையான ஆயுதங் கொண்டு போராட மாட்டேன். உடல் பலத்தால் நான் எதிர்ப்பேன் என அவன் எதிர்பார்த்து ஏமாந்து போகுமாறு செய்வேன்'' (**'யங் இந்தியா'**, *அக்டோபர் 8, 1925*)

இவ்வாறு அகிம்சை உயிர் ஆகிறது; சுதந்திரத்தின் கடைசிப் புகலிடம் அது. அதை விட்டால் எஞ்சுவது மிருக சக்தியே. எவன் அதிகம் இரக்கமற்றவனோ அவனுக்குத்தான் அதில் இறுதி வெற்றி. இன்னும் மனிதத் தன்மையுடன் இருக்கும் உலகிற்கு, ஆன்மாவை இழந்து விடாத உலகிற்குத் தான் காந்தி உபதேசம். ஏனெனில் அவருடைய முடிவான செய்தி ''மனித வர்க்கத்திடம் நம்பிக்கை வை'' என்பதே.

மனித வர்க்கத்திடம் வைத்த நம்பிக்கையின் காரணமாகத் தம் உயிரையே அவர் பலி கொடுத்தார். அகிம்சையிலிருந்து பிரிக்க முடியாத சுதந்திரமான முடிவின் வெற்றி இது,

வெற்றிகரமான வாபஸ் என்பது அகிம்சையில் இல்லை. ஆகையால் அதனுடைய முதல் நடவடிக்கை, எதிரியின் பலத்தைச் சோதித்து அறிந்து கொள்வதே. ''பலமற்றவர்களின் அகிம்சையால் பயனென்ன?'' என்று காந்திஜி கேட்கிறார். ''மன்னிப்பு வீரனின் இலட்சணம், கோழையின் குணமல்ல... கோழைத்தனத்திற்கும் வன்முறைக்குமிடையே எது வேண்டுமென்றால் வன்முறையையே நான் தேர்ந்தெடுப்பேன்'' என்று *1920*இல் அவர் எழுதினார். (**'ஹிந்த் சுயராஜ்'** *ஆக. 11, 1920*) ''ஓர் இனமே ஆண்மையற்றுப் போவதை விட ஆயிரந்தடவை வன்முறையில் ஈடுபடும் அபாயத்தை நான் ஏற்பேன்'' (**'ஹிந்த் சுயராஜ்'** ஆகஸ்ட் *4, 1920*). மேலும் அவர் சொன்னார்:

> ''பிறரைக் கொல்லாது நான் மடியும் துணிவை நான் பயின்று வருகிறேன். இத்துணிவு இல்லாதவன், அபாயத்திலிருந்து வெட்கமில்லாது தப்பி ஓடுவதற்குப் பதில், பிறரைக் கொன்று தாமும் கொல்லப்படுவதை ஏற்குங் கலையைக் கற்க வேண்டுமென விரும்புவேன்'' (**'ஹிந்த் சுயராஜ்'**, *அக்டோபர் 2, 1920*)

ஆகையால் அகிம்சையைக் கடைப்பிடிப்பவன், முதலில் வன்முறையின் வலிமையை மதிப்பிடும் திறனுள்ளவனாய் இருக்க வேண்டும். அவ்வாறு அளவிட்டு, வன்முறையால் உயிரே போவதானாலும் கடைசிவரை அகிம்சையைக் கடைப்பிடிக்கத் தயாராய் இருக்க வேண்டும்.

காந்திஜி வாழ்க்கை ஒரு சத்திய சோதனையாகும். மற்றெதையும் விடச் சத்தியமே அவருக்குப் பெரிது. அவருடைய சமயம் சத்தியமே. ''சத்தியமே கடவுள்'', என அவர் எழுதி

---

*லெபனானைச் சேர்ந்த ரெனே ஹபாஹி யுனெஸ்கோவின் தத்துவப் பகுதியின் உறுப்பினர்; பெய்ரூட்டிலுள்ள லெபனீசிய, பிரெஞ்சு, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் தத்துவப் பேராசிரியர். மத்திய கிழக்கைப்பற்றிய 'ஓரியண்ட், க்வெல் எஸ்டோன் ஆக்ஸிடெண்ட்?' (கிழக்கே, உனது மேற்கு எது?) 1969; 'லோ கொலோன் பீரிஸி டி பால்பெக்' (பால்பெக்கின் உடைந்த தூண்) 1968; 'போர்யுனெ பென்ஸீ மெடிட்டரேனின்னே' (மத்திய தரைக் கடல் நாடுகளின் தத்துவ மலர்ச்சி) 4 தொகுதிகள், (1956-60) போன்ற பல தத்துவ நூல்களை எழுதியுள்ளார்.*

# 6. காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகம்

ஆதரவாளர்கள் ஏமாற்றமளித்தபோதிலும், அதிகாரிகள் கடுமையாக நடத்தியபோதிலும் மகாத்மா நம்பிக்கை இழந்துவிடவில்லை. 'யங் இந்தியா', 'நவஜீவன்' என்ற குஜராத்தி வார இதழையும் நடத்தி வந்தார். ஒவ்வோர் இதழிலும் தமது கொள்கை, திட்டம் இவற்றின் உண்மை நோக்கத்தை விளக்கி வந்தார். அக்கால தீமைகளை ஒழிப்பதுமல்லாமல், பொறுமையுடனும் ஆவலுடனும் நீதியுள்ள ஒரு சமூகத்தை நிறுவ விழைந்தார். அதற்காக அவரே கிராம தொழில் சங்கத்தையும், வார்தாவிலும், சேகானிலும் இரு புதிய ஆசிரமங்களை அமைத்தார்.

மார்ச் 12, 1930இல் அறிவிக்கப்பட்ட 'சுதந்திரப் போர்' அறிக்கையும், அதன் பிறகு, அடக்குமுறையின் அடையாளமாகக் கருதப்பட்ட அரசாங்க உப்பு முற்றுரிமைக்கு எதிரான உணர்ச்சி பொங்கும் உப்புச் சத்தியாக்கிரகமும். வட்டமேஜை மாநாட்டில் (இலண்டன், 1931) காந்தியின் பங்கும், தீண்டப்படாதவரின் சார்பாக நடத்திய உண்ணா நோன்புகளும், 1937 மாநிலத் தேர்தல்களை ஆதரித்தும் இதுவரை குறிப்பிடாத முக்கிய நிகழ்ச்சிகளாகும்.



னார். (யங் இந்தியா, 31–12–1931) தன்னுள் இருந்த வன்முறை உணர்வை மன ஒருமையுடன் கொன்ற பனை— வீரனாக, அகிம்சையை அவர் உருவகப்படுத்துகிறார். சத்தியம் பார்வைக்குத் தெரியாது போனபோதும், சத்தியத்தை நாடிச் சென்ற போதும் அதைக் கொண்டு வந்து நிறுத்தக் கூடிய சக்தி வாய்ந்தது அவருக்கு அகிம்சை ஒன்றே.

சத்தியாக்கிரகத்தின் (சத்தியத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளுதல் என்பதே இதன் பொருள்) உயர்ந்த குறிக்கோள் இதுவே. காந்திஜியை நேரடியாக அறிந்த அவருடைய ஆதரவாளர்களில் ஒருவரான, பிரெஞ்சு வேதாந்தி லூயி மாசிக்னன், ''சத்தியத்திற்காக நடைபெறும் மக்கள் யுத்தம்'' என்று இதற்குப் திட்டவட்டமான விளக்கம் கூறினார். இந்த யுத்தத்தின் ஒரே ஆயுதம் அகிம்சை—பிறருக்குத் தீங்கு செய்யாதிருப்பது, பிறரை மதிப்பது—ஆகும்.

இவ்வாறாக, ஒரு சத்தியாக்கிரகியின் குறிக்கோள் சத்தியம்; அவன் வழி அகிம்சை. இதனுடைய ஆக்கபூர்வமான அம்சங்கள் அன்பும் இரக்கமும் ஆகும். இதில் குறிக்கோளும் மார்க்கமும் பின்னிப் பிணைந்திருத்தலால், வெற்றி பெறுவதற்கான போர்த் தந்திர நடவடிக்கையாக சத்தியாக்கிரகத்தைப் பயன்படுத்த முடியாது.

சத்தியாக்கிரகி உண்மையைக் கடைப் பிடிப்பவனாய் இருக்க வேண்டும். அவனுடைய இரத்தத்தில் அகிம்சையும் இரக்கமும் ஓடவேண்டும். ஆகவே, அவன் கடுமையான கட்டுப்பாட்டிற்கு உட்பட வேண்டும்; நீண்ட பயிற்சி பெற வேண்டும். பிரம்மச்சர்யம் என்பது இதுதான்.

உண்ணா நோன்பு, பிரம்மச்சர்யம், மௌனம் (ஒவ்வொரு திங்கட்கிழமையும் காந்திஜி மௌன விரதம் இருந்தார்.) எளிய உடை அணிதல் (இதன் காரணமாகவே அரை ஆடை புனைந்தார். ஆடைக்காக இராட்டையில் நூல் நூற்கச் சொன்னார்), (தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் காந்திஜி தோற்றுவித்த ஆசிரமங்களில்) பிரார்த்தனை செய்தல் ஆகியவைகளின் மூலம், இம்சையின் மீதுள்ள நாட்டத்தை ஒழித்துக் கட்டிவிட வேண்டும்.

இவ்வாறாக, ஒரு சத்தியாக்கிரகி வெளிப்படையாக அகிம்சைப் போர் தொடங்கு முன், தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்ள வேண்டும். நம் முன் சத்தியம் இல்லாவிடின், பிறரிடமிருந்து எவ்வாறு அதை எதிர்பார்க்க முடியும்? அழுக்கடைந்த கைகள் ஜீவ ஒளியைத் தூண்ட முடியாது. இவ்வித கடுமையான—ஏன், யாரும் எதிர்பாராத— காரியங்களைச் செய்யச் சொல்லித்தான் ஒரு நாடு முழுவதையுமே ஆன்மீக வழிக்கு—அதே சமயம், அரசியல் விடுதலைக்கு உயர்த்தினார் மகாத்மா.

எல்லா வகை வ்ன்முறையாலும் வதங்கிக் கொண்டிருக்கும் இன்றைய உலகம், காந்திஜியின் செய்தியை ஏற்குமாறு செய்ய முடியுமா?

Photo, Gandhi Smarak Sangrahalaya, Ahmedbad

1930இன் உப்புச் சத்தியாக்கிரகமே இந்திய சுதந்திரத்திற்கு அடிகோலிய முதல் பெரும் போராட்டமாகும். மார்ச் 12இல் சபர்மதி கிராமத்திலிருந்து புறப்பட்டு (இடப்புறம்), பல்லாயிரம் பேர் பின்தொடர 248 மைல் நடந்து (வலப்புறம்) மேற்குக் கரையில் தண்டியை அடைந்து, அங்கு எதிர்ப்பின் அடையாளமாக கடல் உப்பைக் கையில் எடுத்து பிரிட்டிஷ் உப்பு முற்றுரிமைச் சட்டத்தை இந்தியர் அனைவரும் எதிர்க்கச் செய்தார். இஃது அமெரிக்க சுதந்திரப் போரில் போஸ்டன் குடிகள் 1775இல் பிரதிநிதித்துவ மின்றி விதிக்கப்பட்ட பிரிட்டிஷ் வரியை எதிர்த்து பிரிட்டிஷ் கப்பல்களிலிருந்த தேயிலையைக் கடலில் வீசியதை நினைவூட்டுகிறது. ஒரு மாநாட்டில் இந்திய வைஸ்ராய் இர்வின் பிரபு காந்தியைத் தேநீர் அருந்துமாறு கூறியதும், காந்தி தன் பையொன்றை எடுத்து "போஸ்டன் தேநீர் விருந்தை நினைவுபடுத்துவதற்காக இந்த உப்பைத் தேநீரில் போடுகிறேன்" என்றாராம்.

Photo PIB, New Delhi

"வரலாற்றுப் பூர்வமாக நேற்றிருந்த சூழ்நிலைகளில் சாத்தியமானது இன்றையச் சூழ்நிலைகளில் சாத்தியமாகாது. காந்திஜியின் கொள்கையும் இன்று சாத்தியமாகாது" என்று கூறிச் சிலர் அதை எதிர்க்கிறார்கள். ஓர் ஆன்மீகவாதி யென காந்திஜி பெயர் பெற்றிருந்தார். ஆகையால், பிரிட்டனுடைய உதார குணமும் நியாய உணர்வும் அவர் அரசியலில் நுழைய இடங் கொடுத்தன. தம் நாட்டு மக்களுடைய மனச் சாட்சிக்கும், பேரரசு ஊழியர்களின் மனச் சாட்சிக்கும் காந்திஜி வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தார். பரம்பரையாகப் பிராடெஸ்டண்ட் மதத்தினராயிருந்து வந்த மக்கள் அதற்குச் செவி சாய்க்காமல் இருக்க முடியவில்லை. அதன் காரணமாகவே ஆங்கிலப் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெற்றிருந்த இம் முனிவர், எளிய ஆடை அணிந்தவர், பக்கிங்காம் அரண்மனைக்குள் விரைவில் செல்ல முடிந்தது. ஆனால் அந்த நிலைமை இனி வரப் போவதில்லை.

கட்டுக் கோப்பாக இருந்த பிரிட்டிஸ் பேரரசில் இந்தியா ஒரு அங்கமாக இருந்தபோது, பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஒத்துழையாமை (அகிம்சை) நடவடிக்கை நல்ல விளைவை ஏற்படுத்தியிருக்க முடியும்; ஆனால் இன்றுள்ள பரந்த உலக வாணிக அமைப்பில் அத்தகைய சாத்வீக எதிர்ப்பு அவ்வளவு பயன் தராது என்று சுட்டிக் காட்டப்படுகிறது. "ஒரு மார்க்கெட்டை இழந்தால் மற்றொரு மார்க்கெட்டைப் பிடித்துக் கொள்ளலாம். ஒரு நாட்டின் அரசுக்கு அந்நாட்டிற்குள் முழு அதிகாரம் உண்டு என்ற கொள்கை ஏற்கப் பட்டிருப்பதால் உள் விவகாரங்களில் ஒரு வெளி நாடு குறுக்கிட முடியாது. வன்முறையால் எதிர்ப்பை நசுக்கி விடலாம். இது அடிக்கடி நடைபெறவும் செய்கிறது. ஆகையால் அகிம்சைக்கு இடமே இருக்க முடியாது" என்று இவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இந்த வாதம் அரை குறை உண்மையையே அடிப்படையாகக் கொண்டது. கட்டுக்கோப்பாக இருந்த ஏகாதிபத்திய முறை மறைந்தது அகிம்சைக்கு அதிக அனுகூலமாக முடியலாம் என்ற உண்மையை இது மறைத்து விடுகிறது. இன்று, ஒரு நாட்டின் துன்பங்களைப் பற்றிய செய்தி, பிற நாடுகளில் அனுதாபத்தையும் ஐக்கியத்தையும் காட்டும் மக்கள் இயக்கத்தை உருவாக்குகிறது. ஒரு நாட்டின் கருத்து, பல நாடுகளின் கருத்தாகவோ உலகின் கருத்தாகவோ விரைவில் உருவெடுக்கிறது. ஆகையால் எதிர்ப்பை அநீதி இழைப்பவர்கள் விரைவில் உணர நேருகிறது. ஒரு பகுதியியில் உள்ள எதிர்ப்பு மற்ற பகுதிகளில் மக்கள் ஆதரவைப் பெற்று, நேரடியாகவோ மறைமுகமாகவோ அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப் பெறாது தடுக்க முடியும். இத்தகைய சான்றுகளை நம்மில் ஒவ்வொருவரும் அறிவோம்.

எந்தத் தேசிய நிகழ்ச்சியும் இப்போது உலக முழுவதிலும் விளைவுகளை ஏற்படுத்த முடியுமாதலால், அகிம்சைக்கு இன்று உலக முக்கியத்

# 7. ‘வெள்ளையனே வெளியேறு’

2-ஆம் உலகப் போரில் இந்தியா பிற குடியேற்ற உரிமை நாடுகளைப் போலவே பங்கு பெற விழைந்தது. முதலில் காந்தி 1914-18இல் செய்ததுபோல் போர் முயற்சிகளை ஆதரிக்க விரும்பினார். அரசாங்கத்தின் கொள்கை அவரது போக்கை மாற்றியது. அக்டோபர், 1940இல் போர் முயற்சிகளை எதிர்த்து அகிம்சைப் போராட்டம் தொடங்கினார்.
ஜூலை 14, 1942இல் காங்கிரஸ் ஆங்கிலேயர் வெளியேறவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது
போர் முடிவில் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு மிடையே பேச்சுகள் தொடங்கின. இதில் காந்தி முக்கிய பங்கு பெற்றார். ஆகஸ்ட் 15 1947இல் இந்தியா சுதந்திரமடைந்தது. ஆயினும், அடக்கி வைக்கப்பட்டிருந்தும் குமுறிக் கொண்டிருந்த இந்து முஸ்லிம் பகைமை அப்போது கொதித்தெழுந்து பெருந் தீங்கை விளைவித்தது.

1942இல் வெள்ளையரை வெளியேறச் சொன்னதற்காக காந்தியும் பிற இந்திய தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். காந்தியின் குறிக்கோள் ‘அகிம்சை’யாகவே இருந்த போதிலும், அவர் ஆதரவாளர்கள் நடத்திய அமைதியான போராட்டம் கண்ணீர் புகையினால் கலைக்கப்பட்டது (வலபுறம் புகைப்படம்).



Photo PIB, New Delhi

துவம்—குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபை செயல் முறையின் கீழ்—ஏற்பட்டிருக்கிறது. இம்மையின் சின்னமாகிய அணுக்குண்டை இறுதியில் வெல்லக் கூடியது அகிம்சையே. மனிதனுடைய மனச்சாட்சியை உண்மையான நிலைக்கு உயர்த்தித்தான் ஆக்கிரமிப்பு உணர்வைச் சமரச உணர்வாக மாற்ற முடியும்.

எதைப் பணயம் வைத்தாவது சாத்வீகத்தையும் தார்மீகத்தையும் பெற முடியுமென எண்ணுவது கற்பனையாகவே முடியும். அபாயமாகவும் இது முடியலாம். ஆகையால் காந்தி–நடைமுறை இலட்சியவாதி எனத் தம்மைக் கூறிக் கொண்ட காந்தி—பாஸ்கல் அழகாகக் கூறிய சமநிலைக் கோட்பாட்டை மறுக்க மாட்டார்.

‘‘வல்லமை இல்லாத நீதி ஆதரவற்றது. நீதி இல்லாத வல்லமை கொடுங் கோன்மையாகும். ஆகையால் பலத்தையும் நீதியையும் நாம் ஒன்று சேர்க்க வேண்டும். அவ்வாறு இணைக்க வேண்டுமெனில் எது வல்லமை வாய்ந்ததோ அது நியாயமானதாகும். எது நியாயமானதோ அது வல்லமை வாய்ந்ததாகவும் இருக்குமாறு செய்ய வேண்டும்.’’

இதன் பொருள் என்ன? உலக சமுதாயம், தான் பாதுகாக்க விரும்பும் நீதிக்கு ஏற்ற உலகப் படை ஒன்றை நிறுவ வேண்டுமென்பது தான். ஆயினும், அனைத்து நாடுகளும் சத்தியாக்கிரகத்தை ஏற்பதற்கு இது ஒரு முதல் நடவடிக்கையே. இது வன்முறையை ஓர் எல்லைக்குள் வைத்திருக்கும்; முற்றிலும் அகற்றிவிடாது. ஆகையால் இன்னும் நாம் மேலே செல்ல வேண்டும்.

போர் ஆயுதக் கலைப்பு, அகிம்சையை நடை முறையில் மெய்ப்பிப்பதாக இருக்கும். ஆக்கிரமிப்பு இல்லாமலும் வன்முறை மூலம் பிறநாட்டில் குறுக்கிடாமலும் தடுத்து பல்வேறு நாடுகளும் தங்கள் கருத்து வேறுபாடுகளை விவாதித்துத் தீர்த்துக் கொள்ளும் கட்டாய சூழ் நிலையை இது ஏற்படுத்தும். இவ்விஷயத்தில், அணு ஆயுதக் கலைப்புச் சரியான முதல் நடவடிக்கையாக இருக்கும். அதேசமயம், வன்முறைச் சாதனங்களை அகற்றுவதனால் மட்டும் அதன் மூலாதாரமான காரணங்கள், அகன்றுவிடா. ஆகையால் இன்னும் ஒருபடி நாம் மேலே செல்ல வேண்டும்.

‘‘அமைதி என்பது வளர்ச்சிதான்’’ ஆறாவது போப் பால் கூறியதை ஏற்று, சமத்துவமின்மை மேலும் வளர்ந்து, உலகில் பாதியை உதவியற்ற நிலைக்குத் தள்ளுவதற்குப் பதிலாக அதைக் குறைக்க விஞ்ஞானத்தையும், தொழில் நுணுக்கத்தையும் நாம் வேகமாகப் பயன்படுத்த முடியாதா? தேசிய, சர்வதேசிய விவகாரங்களில் ஒருபுறம் வல்லமையும் மற்றொரு புறம் வறுமையும், ஒன்றையொன்று எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது எந்த ஜனநாயகம் சாத்தியமாகும்? வல்லமை வன்முறையையும் வறுமை விரக்தியையும் தான் தூண்டும்.

ஆகையால் வளர்ச்சியில் நாம் முதல் கவனம் செலுத்த வேண்டும். மனித வர்க்கத்தின் வறுமைச் சிக்கலைச் சரியான முறையில் தீர்க்க வேண்டும். அடுத்த பத்தாண்டுகளுக்கு நல்ல, வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதில் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள சிறந்த அறிஞர்களை ஈடுபடுத்த வேண்டும். நாம் சோம்பியிருந்தால், உலக அழிவு ஏற்படலாம்; வளர்ந்து வரும் வறுமையின் காரணமாக ‘‘மூன்றாவது உலகம்’’ கொந்தளிப்பதைத் தடுக்க, நாம் அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாவோம். பிறருக்கு உதவுவது வீண்போகாது; அதன் மூலம் செழிப்பான சமுதாயங்களின் செல்வ பாரம் குறையும். உணவு இல்லாதிருப்பதைப் போன்றே அமித உணவும் மனிதப் பண்பை அழித்து விடும்.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்கெனவே இம் முயற்சியை மிகுந்த தயக்கத்துடன்) மேற்கொண்டு வருகிறது. (அதற்குள் உள்ள தகராறுகளால் அடிக்கடி இது பாதிக்கப்படுகிறது)

காந்திய அடிப்படையில் பார்த்தால், ''உலகில் சத்திய சோதனை'' செய்யும் முயற்சி இது. உலகச் சகோதரத்துவ இயக்கமாக—அதாவது ''அகிம்சை'' ஆக—அது இருக்கும்.

ஐ. நா. வில் உள்ள நாடுகளுக்குத் திடீரென அகிம்சை உணர்வு படியும் என எதிர்பார்க்க முடியுமா? உலகில் உள்ள பிற குரல்கள் சேர்ந்து ஒலிக்கா விட்டால் காந்திஜியின் குரல் மட்டும் கேட்குமா? இதனால்தான் அகிம்சைக்குச் சீடர்கள் இருப்பது மிகவும் அவசியமாகிறது. இவர்கள் தங்கள் குடிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதுடன், வன்முறையையும் அநீதியையும் எதிர்ப்பார்கள். அகிம்சை உணர்வை வெற்றி கொள்ள முடியாத கேடயமாக்கிக் கொள்ளுமாறு எல்லோரையும் வேண்டிக் கொள்வார்கள்.

காந்திஜியின் சோக முடிவை மார்ட்டின் லூத்தர் கிங் வாழ்க்கை நினைவு படுத்துகிறது. அகிம்சை, பிரம்மச்சர்யக் கோட்பாடுகளை எதிரொலிக்கும் பத்துக் கட்டளைகளைக் கொண்ட ''தியாகிகள் சங்க'த்தில் சேருமாறு அவர் தம்மைப் பின்பற்றுவோரைக் கேட்டுக் கொண்டார்.

2. அகிம்சை இயக்கம் நீதி, சமரசத்தை நாடுகிறது—வெற்றியை அல்ல.

5. எல்லோரும் சுதந்திர மக்களாவதற்கு உன் ஆசைகளைத் தியாகம் செய்.

6. நண்பனிடமும் எதிரியிடமும் சாதாரண .. மரியாதை உணர்வுடன் நடந்து கொள்.

9. உடல், ஆன்மீக நலத்துடன் இருக்க முயல்.

10. ஆர்ப்பாட்டத்தின்போது இயக்க விதிகளையும் தலைவர் உத்தரவுகளையும் அனுசரி.

பிரேசில் மதகுருவும், ''செயல், நீதி, சமாதானம்'' என்ற இயக்கத்தின் தலைவருமான டான் ஹெல்டர் காமரா, மார்டின் லூத்தர் கிங் போன்ற ஆக்கபூர்வமான எதிர்ப்புக் கொள்கை மூலம் நீதி பெறுவதற்கு, பைபிளின் மேற்கோளைக் காட்டுகிறார்.''

''நசுக்கப்பட்டுள்ள மக்களின் கிளர்ச்சியை அடக்குவதற்காக, 'செயல், நீதி, சமாதானம்' இயக்கம் அமைக்கப் பெறவில்லை. நம் எல்லோருடைய கிளர்ச்சிக்கும் எதிர்ப்புக்கும் ஒரு தைரியமான, ஆக்கபூர்வமான, உயர்ந்த நிர்மாணப்பூர்வமான, பொருள் தரவே அமைக்கப் பெற்றது.

இதோ காந்திஜியின் நேரடிச் சீடரான ஆச்சார்ய வினோபா இருக்கிறார். கிராமத்திலுள்ள குடும்பங்களின் நலனுக்கு நிலங்களை மறு விநியோகம் செய்வது இந்த இயக்கத்தின் நோக்கம். சமுதாய ஒத்துழைப்பிற்கு மக்கள் எழுச்சி பெறுமாறு செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் இவர் ''சாந்தி சேனை' அமைக்கிறார்.

''காற்றையும் நீரையும்போல எல்லா நிலமும் கடவுளுக்கே சொந்தம். சரியான முறையில் நிலம் விநியோகமானால் தற்போதுள்ள மனக்குறை நீங்கி நல்லெண்ணம், சகோதரத்துவ அன்பு, ஒத்துழைப்புக் கொண்ட சமுதாயம் மலரும்''.

கிறிஸ்து அல்லது காந்திஜியின் போதனைகளால் உந்தப்பட்டு (காந்திஜியும் மலைப் பிரசங்கத்தால் கவரப்பட்டவரே; அவர் அதை கங்கைக்கரையில் எதிரொலித்துக் கொண்டிருந்தார்) அகிம்சைச் சீடர்கள் பல்வேறு நாடுகளும் மக்களும் ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பதை வலியுறுத்துகின்றனர். அவர்களுடைய தேசியப் புரட்சியை உலக ஐக்கிய இயக்கத்தின் அங்கமாகக் கருதுகின்றனர். 1925இல் கல்கத்தாவில் நிகழ்த்திய உரையில் காந்திஜி கூறினார்:

''இந்திய விடுதலை இங்கிலாந்தையோ ஆங்கிலேயர்களையோ ஒழித்துக் கட்டி விடுமென்றால் எனக்கு அது வேண்டாம். என் தனிப்பட்ட கருத்து இது. நான் விடுதலை கேட்பதெல்லாம் என் சுதந்திர நாட்டிலிருந்து பிறநாடுகள் ஏதாவது கற்க வேண்டும், மனித வர்க்கத்தின் நலனுக்கு என் நாட்டு வளங்கள் பயன்படவேண்டும் என்பதற்காகவே''

இந்த உலகக் கண்ணோட்டம் வெறும் இலட்சியமாக அல்லாது ஒரு வாழ்க்கை அனுபவமாக, மனிதனுடைய புத்திக் கூர்மை, உணர்ச்சி, அன்பு ஆகியவைகளின் விளைவாகக் கொள்ளப்படுகிறது.

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

# 8. கொலையாளியின் குண்டு

நாட்டு மக்களில் கால் பகுதியினரான முஸ்லிம் சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினரான இந்துக்கள் ஆட்சி செய்வதை முஸ்லிம் லீக் ஏற்கவில்லை.
காந்தியும் அவர் தோழர்களும் உளம் வருந்தி நாட்டின் பிரிவினையை ஏற்றுக் கொண்டனர். ஆகஸ்ட் 15, 1947இல் 'பிரிக்க முடியாதென்று' கருதப்பட்ட இந்தியா விடுதலையடைந்து, இந்தியா, பாகிஸ்தான் எனும் இரு நாடுகளாகப் பிரிந்தது.
இந்நம்பிக்கைகளுக்கும் ஏமாற்றங்களுக்குமிடையே குழப்பம், வன்முறை, கொடுஞ்செயல்கள் நிகழ்ந்தன. இரு சமூகங்களையும் இணைக்க முயன்று வந்த காந்தி இதைக் கண்டு துடித்தார். தீமை நாட்டில் பரவவே அவர் செயலில் இறங்கினார். 77 வயதாகிய போதிலும், தமது உயிரே அவ்வெறிக்குப் பலியாகும் என்று தெரிந்திருந்தும், துயரும் பகைமையும் மலிந்த இடங்களுக்கு அமைதியை நிலைநாட்ட கால்நடையாகச் சென்றார். இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு காந்தி காட்டிய பரிவை உணராமல் அவரை துரோகியாகக் கருதிய ஓர் இந்து தீவிரவாதி ஜனவரி [redacted]30,1948இல் அவரைச் சுட்டுக் கொன்றான். இவ்வாறாக காந்தி, எல்லாரும் அடையக்கூடியதாகக் கருதிய குறிக்கோளாகிய அகிம்சைக்காகத் தமது உயிரையே தியாகம் செய்தார்.

இந்து முஸ்லிம் கலவரம் நடந்த பகுதிகளில் எல்லாம் 77 வயதான காந்தி வெறுங்காலுடன் நடந்து சென்றார். (கீழே) இந்திய சுதந்திர நாளன்று காந்தி மகிழ்ச்சியடையவில்லை. இரு சமூகங்களுக்கிடையே அமைதியை நிலைநாட்ட நோன்பிருந்து உழைத்தார்.

1947இல் இந்தியா இரு நாடுகளான போது தற்கால வரலாற்றில் முதன் முறையாக ஏராளமான மக்கள் நாடு கடந்து சென்றனர். எண்ணற்ற அகதிகள் வன்முறைக்கு அஞ்சி சில, பொருள்களுடன் மாட்டு வண்டிகளில் தப்பித்துச் சென்றனர்.

Photo PIB, New Delhi



Photo Margaret Bourke-White Life Magazine © Time Inc

புதுடெல்லி, ஜனவரி [redacted] 30, 1948. சில வினாடிகளுக்கு முன் காந்தி சுடப்பட்ட அதே இடத்தில் அவர் நண்பர் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, அமைதியில் மூழ்கிய மக்களுக்கு காந்தி இறந்ததை அறிவிக்கிறார்.

Photo © H. Cartier Bresson



Photos© Life Magazine-Grey Villet

மார்ட்டின் லூத்தர் கிங் அலபாமாவிலுள்ள மாண்ட்கோமரியில் 1956இல் நகரம் பேருந்துகளை விலக்கீடு செய்யுமுன், நீக்ரோக்கள் அவற்றின் பின் இடங்களில் தாம் அமர முடியும். கூட்டமாக இருந்தால் வெள்ளையருக்கு அமர இடமளிக்க வேண்டும். ஒரு நீக்ரோ பெண் இடமளிக்க மறுத்ததற்காகக் கைதானபோது கிங் பேருந்து மறியலைத் தொடங்கினார். பல மாதங்களாக பேருந்துகள் காலியாகச் சென்றன (மேலே) நீக்ரோக்கள் பிரிவினையை எதிர்த்து பல மைல் நடந்து வேலைக்குச் சென்றனர். (மேலே வலப்புறம்). 1956இல் தலைமை நீதி மன்றம் பொதுப் போக்குவரத்தில் பிரிவினை காட்டுவதைச் சட்ட முரணானதென அறிவித்தது. அதனால், இதுவரை மாண்ட்கோமரியின் சாதாரண சமயக் குருவாக இருந்த மார்ட்டின் லூத்தர் கிங் திடீரென மக்கள் உரிமைப் போராட்டத் தலைவரானார். ஆகஸ்ட் 1913இல் அவரது இன நீதி இயக்கம் புகழ்மிகு உரிமை அணிவகுப்பை நடத்தியது. அப்போது லிங்கன் நினைவு மன்றத்திற்கும் வாஷிங்டன் நினைவுச் சின்னத்திற்கு மிடையே உள்ள பூங்காவில் 2,00,000 நீக்ரோக்களும் வெள்ளையரும் திரண்டு குழுமினர் கீழே).

# மார்ட்டின் லூத்தர் கிங்: ‘நாம் வெற்றி பெறுவோம்’

Photo © Life Magazine Robert W. Kelley





Photo-© Bruce Davidson – Magnum

1965இல் மார்ட்டின் லூத்தர் கிங் (மேலே படத்தின் நடுவில்) அலபாமாவிலுள்ள கெல்மாவிலிருந்து மாண்ட்கோமரிக்கு 50 மைல் மக்களுரிமை ஆர்ப்பாட்ட அணிவகுப்பை நடத்திச் செல்கிறார். அவருக்கு வலப்புறம் ஐ. நா. வைச் சேர்ந்தவரும் நோபல் பரிசு பெற்றவருமான ரால்ப் பஞ்சும், அவருக்கு வலப்புறம் 1968இல் டாக்டர் கிங் கொலைக்குப் பிறகு அவருடைய இடத்தைப் பெற்ற மறைத்திரு ரால்ப் அபர்நாத்தியும் காணப்படுகின்றனர். கீழே, மார்ட்டின் லூத்தர் கிங்கின் சவ ஊர்வலத்தில் அவரது படம் எடுத்துச் செல்லப்படுகிறது.

மகாத்மா காந்தியைப் போலவே மார்ட்டின் லூத்தர் கிங்கும் அமெரிக்காவில் அநீதியை எதிர்க்க அகிம்சை வழியைப் பின்பற்றினார். அவரும் ''வெற்றி பெறுவோம்'' என்ற போர்க் குரல் எழுப்பி தமது தோழர்களை வன்முறையை விலக்குமாறு வற்புறுத்தினார்.

1964இல் நோபல் அமைதிப் பரிசு பெற்ற மார்ட்டின் லூத்தர் கிங் தமது இன உரிமைப் போராட்டத்தில் அகிம்சையைப் பயன்படுத்துவதனால் விளையும் இன்னல்களை உணர்ந்திருந்தார். ''அகிம்சை வழியில் சென்றால் இன்னலையும் இழப்பையும் ஏற்கவேண்டும். சிறைத் தண்டனையையும், சாவையுமே ஏற்க நேரிடும். ஆனால், ஒருவன் தனது குழந்தைகளையும் வெள்ளைச் சகோதரரையும் நிலையான ஆன்மீக அழிவினின்று விடுவிக்க தனது உயிரைத் தியாகம் செய்ய வேண்டுமென்றால், அதுவே மாண்புறு மீட்பு வழியாகும்'' என்று அவர் கூறினார். காந்தி கொலைக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஏப்ரல் 4, 1968இல் அவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காந்தியின் வழி அவரை மிகவும் ஊக்குவித்தது. ''இந்நூற்றாண்டுக்கு முன்னால் நம்பிக்கையும் வெறுப்புமே புரட்சிகளைத் தோற்றுவித்தன. உரிமையையும் நீதியையும் எதிர்பார்த்த ஆவல் நம்பிக்கையாகவும், பழைய முறைகளைச் செயல்படுத்தியவர் மேல் காட்டப்பெற்ற மனக் கசப்பு வெறுப்பாகவும் வெளிப்பட்டன. வெறுப்பே புரட்சிகளை வன்முறையில் ஆழ்த்தின. மகாத்மா காந்தியின் இயக்கம் நம்பிக்கை, அன்பு, அகிம்சை ஆகிய அடிப்படைகளில் எழுந்த புதிய புரட்சி. நமது நாட்டிலும் 1956இல் மாண்ட்கோமரி பேருந்து மறியலிலிருந்து 1965இன் செல்மா இயக்கம்வரை நடந்த மக்கள் உரிமை இயக்கத்தில் இதையே வலியுறுத்தினோம்'' என்று அவர் கூறினார். (மேலே நிழற் படங்களைப் பார்க்கவும்)


Photo © Burk Uzzle Magnum

மார்ட்டின் லூத்தர் கிங் தமது போராட்டத்தை அநீதிக்கு எதிரான மாபெரும் கிளர்ச்சியின் ஒரு பகுதியாகவே கருதினார். ''இது நீக்ரோக்கள் வெள்ளையரை எதிர்க்கும் இனப் பிரச்னை மட்டுமன்று. இது மக்களை எதிர்க்கும் போராட்டமே யன்று; நீதிக்கும் அநீதிக்குமுள்ள பிணக்கு. அகிம்சைப் போராட்டம் அநீதி இழைப்பவர்களை யல்ல அநீதியையே எதிர்க்கிறது. அதன் கொடியின் கீழ் இனத் தொகுதிகளல்ல உள்ளங்களே பணிபுரிகின்றன'' என்றார்.

# பாபுவின் வழி

ஹுமாயூன் கபீர்

மேலை நாடுகளின் ஆதிக்கம் உலகெங்கும் ஓங்கியிருந்த நேரத்தில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். மேலைநாட்டு வல்லரசுகளின் அரசியல் ஆதிக்கம் ஓங்கிவந்ததோடு, பொருளாதார, கலாச்சார, அறிவியல் துறைகளிலும் அவர்கள் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்தது. இந்தியா மட்டுமல்ல, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் அனைத்துமே, அரசியல் சுதந்திரத்தைப் பறிகொடுத்துப் பொருளாதார வேகத்தையும் ஆன்ம வளத்தையும் இழந்திருந்தன. இந்தியாவில் 1857ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின், பண்டையப் பெருமையை நிலைநாட்ட மொகலாய மாமன்னரும் அவருடைய ஆதரவாளர்களும் மேற்கொண்ட கடைசி முயற்சி முறியடிக்கப்பட்டிருந்தது. ஐரோப்பாக் கண்டத்தின் நோயாளி நாடென்ற அவலநிலையைத் துருக்கி அடைந்திருந்தது. அச் சாம்ராஜ்யம் வேகமாகச் சீரழிந்து கொண்டிருந்தது. கஞ்சாப் போரில் தோல்வி அடைந்திருந்த சீனாவின் மீதுப் புதுச் சுமைகள் சுமத்தப்பட்டிருந்தன. வளரும் அமெரிக்காவின் ஊடுருவல்களினால், ஜப்பான் அதிர்ச்சி அடைந்திருந்தது. ஆசியாவிற்குள் புகுந்து, ரஷ்யா தன் எல்லைகளை விரிவாக்கவும், கிழக்கிலும் தெற்கிலும் கடலோரப் பகுதிகளை எட்டிப்பிடிக்கவும் முயன்று கொண்டிருந்தது. மேலை நாட்டு ஏகாதிபத்தியம் எல்லா முனைகளிலும் ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்தது. மேலை நாடுகளுக்குப் பணிவதுதான் விதி விட்ட வழி என்ற எண்ணம், வரலாற்றில் முதன்முறையாக, ஆசியர், ஆப்பிரிக்கர் பலரிடையே பரவலாயிற்று.

காந்தியின் வாழ்நாள் முடிவடையுமுன், இச் சோர்வு மனப்பான்மை அடியோடு மறைந்து விட்டது. அதற்குப் பதிலாகப் புதியதொரு வேகமும் நம்பிக்கையும் ஆர்வமும், சில சமயங்களில் பதட்டத் துடிப்பும் குடிகொண்டன. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும் புதிய வேகமும் வலிமையும் பெருக்கெடுத்தன. மனித வாழ்வில் தங்களுக்கு நியாயமாய் உரிய இடத்தைப் கைப்பற்ற அந்நாடுகள் துடித்தன. இம் மகத்தான மாறுதலுக்கும் சாதனைக்கும் பெருமளவில் பொறுப்பானவர், காந்தி. இந்திய மக்களின் தன்மான உணர்வை மீட்டுப் பாமர மனிதனும் புதிய தன்னம்பிக்கை கொள்ளச் செய்வதற்கு முக்கிய காரணமாயிருந்தவர், அவரே. இந்தியா விழிப்புற்று எழுந்ததின் எதிரொலி, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களின் மூலை முடுக்குகளிலும் கேட்கத் தொடங்கியது. அடிமை நாட்டின் குடிமகன் ஒருவர், உலகில், தன் வாழ்நாளிலேயே, இவ்வளவு மகத்தான சக்தியும் செல்வாக்கும் பெற்று விளங்கியதற்குக் காந்தியைத் தவிர வரலாற்றிலேயே வேறு எடுத்துக்காட்டு இல்லையெனலாம். அவர் மறைந்து பத்தாண்டுகளுக்குள், ஏகாதிபத்தியம் எல்லா முனைகளிலும் பின்வாங்கிக் கொண்டிருந்தது.

பொறுமையாக அடங்கிக் கிடந்த இந்திய மக்களிடையே பொதிந்திருந்த வேகத்தையும் வலிமையையும் வெளிப்படுத்திப் பயன்படுத்துவதில் வெற்றி கண்ட காந்தியின் சாதனை உலகிலேயே புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கியது. இந்தியப் பாமர மக்கள், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நீண்ட காலமாகச் சகித்து அடங்கியிருந்தனர். வேறெந்த நாட்டு மக்களும் வெகு காலத்திற்கு முன்பே கிளர்ந்து எழுந்திருப்பார்கள். அவர்கள் சகிப்புத் தன்மையையும் செயலற்றிருந்த நிலையையும், அவர்கள் பலவீனத்தின் அறிகுறியென்று நண்பர்களும் பகைவர்களும் கருதினர். இந்தியப் பாமர மக்களின் தன்மையையும் பாங்கினையும் மனத்திற் கொண்டு, அவர்கள் தீவிர, வெளிப்படையான புரட்சி செய்ய முன்வரமாட்டார்கள் என்று இந்தியத் தலைவர்கள் கூட முடிவு கட்டினர். விதி விட்டவழி என்று செயலற்றிருந்த இந்திய மக்களின் உளப்பாங்கைக் காந்தி உணராமலில்லை. ஆனால் அதையே, புதைந்திருந்த சக்தியின் பெட்டகமாய்க் காந்தி மாற்றி, அதற்கு அரசியல் உணர்வும் வேகமும் ஊட்டினார். இராணுவ வன்முறைக் கிளர்ச்சிக்குப் பதிலாக, ஒத்துழையாமை இயக்கத்தை உருவாக்கி, இந்திய மக்களின் சகிப்புத் தன்மையையும் செயலற்ற நிலையையும் புதியதொரு வலிமைக்கும் வேகத்திற்கும் ஊற்றுவாயாக மாற்றினார். இந்தியப் பாமர மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் முனைந்த போது, இந்திய உளப் பாங்கின் தன்மையாயிருந்த நிதானமே, தீவிரத் துணிவாக மாறியது. மக்கள் தங்கள் தன்மதிப்பை மீண்டும் பெற்றனர். இழந்த ஆன்மீகப் பண்புகளை நிலைநாட்ட இதுவே வழிகாட்டியது.

மேலை நாட்டு ஆதிக்கத்திற்கு அறைகூவல் விடுத்ததில் முன்னணியில் இருந்த தலைவர்களில் காந்தி ஒருவர். ஆனால் மனிதக் கலாச்சாரத்தை வளப்படுத்திய மேலைநாட்டுப் பண்புகளை அவர் மறுதலிக்கவில்லை. ஐரோப்பிய விஞ்ஞானப் புரட்சியைத் தொடர்ந்து எண்ணற்ற புதிய பல வாய்ப்புகளும் வளங்களும் மனிதனுக்குக் கிட்டியிருந்தன. தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டிருந்த மகத்தான முன்னேற்றங்களின் பயனாய், பசி, பிணியிலிருந்து விடுதலை கிடைக்க வழி ஏற்பட்டது. அரசியல் துறையில், இறைமாட்சி உரிமை பெற்ற நாட்டில் இதமான மக்களாட்சியின் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அறிவுத் துறையில் பகுத்தறிவின் வளர்ச்சிக்கும், கல்வி பரவுவதால் மனித இனத்தை வாட்டும் கேடுகளுக்குத் தீர்வும் காண முடியுமென்ற நம்பிக்கைக்கும், வழி பிறந்துள்ளது. ஐரோப்பா முழுவதும், நம்பிக்கையும் புத்துணர்வும் கொண்டு, தன் செல்வாக்கை விரிவாக்கும் நிலையில் இருந்தது. ஐரோப்பா காட்டிய வழியில், உலகின் மற்ற நாடுகள் பின்பற்றிச் சென்றன.

மனித இனத்தின் கேடுகளைப் போக்குவதில் விஞ்ஞான வளர்ச்சிக்கு இருந்த பங்கையும் பொறுப்பையும் காந்தி உணர்ந்தார். ஆனால் அதைத் தொடர்ந்து, பொருள்வசதிப் பெருக்கமே தலையாயது என்ற உலகப் பற்றுப் போக்கை அவர் கண்டித்தார். அரசியல் விடுதலைக்காகப் போராடிய ஐரேப்பா, மிகக் கொடிய பொருளாதார அடிமைத்தனத்துக்கு உடந்தையாய் இருந்ததென்று அவர் கருதினார். எளிமையான இயந்திரங்கள் மனிதர் நலனுக்கு இன்றியமையாதவைதான். ஆனால் இயந்திரங்களை ஐரோப்பா பயன்படுத்திய முறை, மனிதரை அடிமைகள் நிலைக்கு, அழைத்துச் சென்று விட்டது. மேலை

---

புகழ்மிகு இந்திய எழுத்தாளரும் கல்வி அறிஞருமாகிய ஹுமாயூன் கபீர் ஆகஸ்ட், 1968 இல் இறந்தார். பேராசிரியர் கபீர் இந்திய அரசாங்கத்தில் பல முறை அமைச்சராகப் பணியாற்றியவர். தத்துவம், கவிதை, சிறுகதைகள் பற்றியும் காந்தியைப் பற்றியும் பல நூல்கள் எழுதியுள்ளார். இக்கட்டுரை 'மகாத்மா காந்தி: 100 ஆண்டுகள்'' எனும் நூலில் உள்ளது இந் நூல் காந்தி பிறந்த நூற்றாண்டிற்''கென காந்தி அமைதி நிறுவனம் புது டெல்லியில் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பு. 'மென் அண்ட் ரிவர்ஸ்', 'தி இண்டியன் ஹெரிட்டேஜ், 'சயின்ஸ், டெமாக்ரஸி அண்ட் இஸ்லாம்', 'இம்மானுவேல் காண்ட்' ஆகியவை கபீரின் நூல்களில் சில.

நாட்டுச் சிந்தனை மரபுகள் மீளமுடியாத நெருக்கடியில் மனிதனைச் சிக்க வைத்து விட்டன என்பதைக் கண்ட காந்தி, தம் வாய்மைப் பரிசோதனைகள் மூலம், தற்போதைய அரசியல் சமூக நெருக்கடியிலிருந்து விடுதலை காண முயன்றார்.

செல்வம் ஒரு சிலரிடம் குவியவும், ஆன்ம வளமில்லாத இயந்திர நாகரிகம் பரவவும், இயந்திர வெறி வழி செய்திருந்தது. தன்னிறைவும் தன்னாட்சி உரிமையும் பெற்ற கிராமத்தை சமுதாயத்தின் அடிப்படையாக அமைத்து, அதன் மூலம் இந்த இரு கேடுகளுக்கும் நிவாரணம் தேடினார் காந்தி.

தனி மனிதனின் பொருளாதார சுதந்திரத்தின் முக்கியத்துவத்தைக் காந்தி நன்கு உணர்ந்தார். பொருளாதார சுதந்திரம் இல்லாத நிலையில் அரசியல் சுதந்திரம் கேலிக் கூத்தாகவும் மக்களாட்சி வெறும் மோசடியாகவும் ஆகிவிடும். செல்வம் ஒரு சிலரிடம் சிக்கிக் குவிவதால், மனிதனின் பொருளாதார சுதந்திரம் பறிக்கப் படுகிறது. தனியார் உடைமை முறையில் பெருவாரியான உற்பத்தி நடக்கும்போது, செல்வம் ஒரு சிலரிடம் சிக்குவதைத் தடுக்கமுடிவதில்லை. இக்கட்டம் வரை, காந்தியின் ஆராய்ச்சியும் சமதர்மவாதிகளின் ஆராய்ச்சியும் ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் பிரச்னைக்கு அவர் காணும் தீர்வு முற்றிலும் வேறானது. பெருவாரியான தொழில் உற்பத்தி அமைப்புகளை வைத்துக் கொண்டுத் தனி உடைமையை மட்டும் ஒழித்து விட வேண்டுமென்பது சமதர்மவாதிகள் காட்டும் வழி. உற்பத்தி, பரவல் முறையில் அமைந்தால், செல்வம் ஒரு சிலரிடம் சிக்குவதற்கான வாய்ப்புகள் தாமாகக் குறைந்து விடுமென்பது காந்தியின் நம்பிக்கை.

காந்திய வழிக்கும் சமதர்மவாதிகள் வழிக்கும் இடையேயுள்ள வேறுபாடு எளிதில் புலனாகும். தனிமனிதனைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்தின் அடிப்படையில் இந்த வேறுபாடு எழுகிறது. தனிமனிதன் நலன் தலையாயதல்ல என்று நம்பும் சமதர்மவாதிகள், அரசியல், பொருளாதார, சமூக, சமத்துவத்தை, அவசியமானால் வன்முறையைப் பின்பற்றி நிலைநாட்டச் சித்தமாயுள்ளனர். தனி மனிதனே தலையாயவன் என்று காந்தி நம்பினார். ஆகவே அவன் சுதந்திரத்தை எந்த முறையிலும் கட்டுப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். பொருளாதார சுதந்திரத்துக்கு அடிப்படையான சமதர்மத்தைச் சமாதான, அகிம்சை, முறைகளில் நிலைநாட்ட வேண்டும். இரத்தம் சிந்தும் வன்முறைப் புரட்சிகளால் அரசியல் விடுதலையை அடைய முடியும் வரலாற்றில் அடிக்கடி அவ்வாறு அடைந்துள்ளோம், என்று சமதர்மவாதிகள் நம்புகின்றனர். இவ் வழியில் நாம் அடையக் கூடியது, சுதந்திரத்தின் வெளித் தோற்றமாக இருக்குமே யொழிய, உட்கரு அல்ல, என்பது காந்தியின் கருத்து. வன்முறைப் புரட்சியால் கிடைக்கும் பலன்களை, அதைவிட வன்முறை எதிர்ப்புரட்சியால் இழக்கவும் கூடும். மேலும் வாளை நம்பி வாழத் துணிந்தவர்கள் பெரும்பாலும் வாளினால் வீழ்ந்துள்ளார்கள். இந்த அபாயங்களை உணர்ந்திருந்ததால் தான், வன்முறையில் சிக்காமல், பொருளாதார, அரசியல், சுதந்திரத்தை, மனிதன் அடைய வேண்டுமென்று காந்தி வலியுறுத்தினார். வன்முறை அனைத்தும் வெறுப்பிலிருந்து பிறப்பது என்று அவர் நம்பினார். ஆகவே மனிதரிடை பூசல்களைத் தீர்க்க ஒரே வழி, வெறுப்பை வெல்வதுதான்.

இடமும் காலமும் ஏற்படுத்தியுள்ள தடைகளை வென்று உலகை ஒன்று சேர்த்துள்ளது, இயந்திரத் தொழில் நுட்ப முன்னேற்றம். பண்டைக் காலத்தில் மனிதன் எவ்வளவு வேகமாக நடமாட முடிந்ததோ, அவ்வளவு வேகமாகத்தான் கருத்துக்களும் பரவின. சென்ற நூற்றாண்டின் மத்தியில் கூட, ஒரு நாளைக்கு 200 மைல் வேகத்தில் தான் மனிதனால் செல்ல முடிந்தது. இன்றோ இரண்டு மணி நேரத்திற்குள்ளாக உலகையே சுற்றி வர முடியும். ஒரு கருத்தை ஒரே நேரத்தில் உலகம் முழுவதும் இன்று பரப்ப முடியும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு, இதைக் கற்பனை கூட செய்திருக்க முடியாது. மலைகளும் கடல்களும் இன்று மனிதரைப் பிரிக்கவில்லை. இரண்டையும் கடந்து, வான வெளியில் அவன் சஞ்சாரம் செய்கிறான். தொழில் நுட்ப முன்னேற்றத்தால் உலகம் ஒன்று பட்டதைத் தொடர்ந்து, அரசியல், பொருளாதார, கலாச்சார, ஒற்றுமையும் ஏற்பட்டாக வேண்டும். உறுப்பினர் நாடுகளின் தன்னாட்சியையும் தனித்தன்மையையும் காப்பதன் மூலம்தான் இந்த ஒற்றுமையை வளர்க்க முடியும்.

இன்றைய முற்போக்கு உலகில், நாடுகளிடையே போர்கள் மட்டுமல்ல, ஒரு நாட்டுக்குள்ளாக வர்க்கப் போராட்டங்களும் காலத்துக்கு



Photo © Lennart Olson - Willy Bern

பஞ்சாபிலுள்ள கிராமம். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய மக்களில் 80 சதவிகிதம் பேர் 'இந்தியாவின் உண்மைத் தோற்றம்' என்று காந்தி கூறிய 7,00,000 கிராமங்களில் வாழ்ந்தனர்.

Photo Margaret Bourke White, Life Magazine © Time Inc

## ராட்டினம் சுற்றும் மூதறிஞர்

**இந்திய கிராமங்களை சீர்திருத்தும் முயற்சியில் காந்தி இராட்டினத்தைப் பயன் படுத்தியது எல்லாருக்கும் தெரியும். (சிலர் இதற்காக அவரை குறை கூறினர்.) காந்தி சுதந்திரத்தைவிட பட்டினியை முதலாவதாகக் கருதினர். கையால் நூற்று நெய்வதன் நோக்கம் நிலமில்லாத உழவருக்கு உணவளிப்பதுதான். கைவிடப்பட்ட இத்தொழில்கள் புத்துயிர் பெற்று பல கிராமங்களை முற்றிலும் மாற்றின. அவரது தூண்டுதலால் மக்கள் அயல் நாட்டுத் துணிகளை வாங்க மறுத்தது பருத்தி உற்பத்தியில் இந்தியாவுக்கு அதிக உரிமை அளித்தது. சிறையில் கூட ஒவ்வொரு நாளும் காந்தி பல மணி நேரம் நூற்று வழி காட்டினர். இடப்புறம்: இராட்டினம் அருகில் காந்தி அவர் அதை எல்லாரையும்பிணைக்கும் இணைப்பாகவும், தன்னம்பிக்கை, தன்மானம் இவற்றின் கருவியாகவும் கருதினர். இயந்திரத்தையும் தொழில் வளர்ச்சியையும் காந்தி எதிர்த்ததாக சொல்லப்படுகிறது. ஆயினும் இது முற்றிலும் உண்மையன்று. 1921 இல் அவர், ''பெரிய இயந்திரங்களைப் பயன் படுத்தினுல் வறுமையும் சோம்பலும் மறையுமானுல் அவற்றை நான் ஆதரிப்பேன்'' என்ருர்.**

ஒவ்வாதவை ஆகியுள்ளன. உலகப் போர் மனித இனத்தையே அழித்து விடுமென்பதை உண்ர்ந்ததால்தான், பெரிய வல்லரசுகள் போரின் விளிம்பு வரை அடிக்கடி எட்டிவிட்டுப் பின் வாங்கியுள்ளன. இன்று அச்சத்தின் நிர்ப்பந்தத்தில் தான் ஒரு நிலையற்ற அமைதி நிலவுகிறது. இந்த அளவுக்கு நல்லது தான். ஆனுல் சமூகத்துக்குள்ளாக வன்முறை எழுவதும் பெரும் அபாயம்தான் என்பதை இன்னமும் சரிவர நாம் உணரவில்லை. உட்பூசல் எதுவும் முழுவதும் உட்பூசலாகவே இருந்து விடுவதில்லை என்பது இதற்கு ஒரு காரணம். நாடுகளுக்கிடையேயும் உள்ளாகவும் பற்பல உறவுகள் பின்னி நிற்கும் நிலையில், ஓரிடத்தில் எழும் உட்பூசல், அயலாரின் கவனத்தையும் தலையீட்டையும் ஈர்க்கக்கூடும்; அவ்வாறு அடிக்கடி ஏற்படுவதுமுண்டு. ஸ்பெயின் நாட்டில் இரு குழுக்களுக்கிடையே மோதலாகத்தான் ஸ்பெயின் உள்நாட்டுப் போர் முதலில் தொடங்கியது. ஆனுல் பெரும் வல்லரசுகள் அதில் தலையிட்டதால், இரண்டாவது உலகப் போருக்கு ஒத்திகை என்ற அளவில், அது விரைவில் வலுத்து விட்டது. வலிமைக் குறைவான நாடுகளின் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்க, வல்லரசுகளால் இயலாது என்பதற்கு வியட்னும் வேதனை தோய்ந்த நினைவூட்டு ஆகும். பெரும் வல்லரசுகள் தலையிடாமல் இருந்தால், மேற்கு ஆசியாவின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும். ஆகவே, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், வன்முறை தவிர்க்கப்பட்டால் ஒழிய, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருக்க முடியாது. தன் உடன்பிறந்தானுக்குத் தான் பொறுப்பல்ல என்று காயின் மறுதலித்த அன்றே, மனிதரிடையே பூசல்கள் எழுந்து விட்டன. இன்றோ, மற்றவர் அனைவர்க்கும் நம்மில் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும் என்பதைக் காலத்தின் போக்கு, உலகெங்கும் பலருக்கும் உணர்த்தியுள்ளது.

காந்தி ஆற்றிய அருந் தொண்டு, தீமையை எதிர்த்துப் போராட அகிம்சா நடவடிக்கைகளைச் செயல்படுத்த முயன்றதாகும். வன்முறையை விரும்பாத அரசியல்வாதிகள் கூட, கொள்கை அளவில் வன்முறையை விலக்க முன்வருவதில்லை. உள்நாட்டு விவகாரங்களாயினும், வெளிநாட்டு விவகாரங்களாயினும் சரி, மனத்தை மாற்ற முயல்வதே மனிதத் தன்மைக்கு ஏற்ற, பண்பட்ட வழியாகும் என்று காந்தி வலியுறுத்தினர். வன்முறையை விலக்கி, ஆன்மீக சக்தியைப் பயன்படுத்த அவர் விரும்பினர். தீமையை அகிம்சா அடிப்படையில் எதிர்த்துப் போராடுவதே அவர் கருத்தின் அடிப்படை. இப் போராட்டத்தின் முதல்படியாக, மற்ற மனிதர்கள் மனத்தை மாற்ற மனிதன் முயல வேண்டும். இத்தகைய நடவடிக்கையால், தனி மனிதன் அகத்தேயுள்ள உணர்ச்சி நெரிசல்களும், மனிதர்களிடையே எழும் பூசல்களும் குறையும். மனிதன் அகத்தேயுள்ள உணர்ச்சி நெரிசல்கள் சமூகத்தில் பிரதிபலிப்பது போலவே, நாட்டுக்குள் இருக்கும் சிக்கல்கள் சர்வதேச விவகாரங்களிலும் பிரதிபலிக்கின்றன. தன்னகத்தேயுள்ள உணர்ச்சி நெரிசல்களுக்குத் தீர்வு காண்பவன், நிறைவு பெற்ற மனிதனுகின்ருன். அவன் சக்தி ஊற்றுக்கள் வலுவும் வளர்ச்சியும் பெற்றுப் பிறரையும் ஈர்க்கின்றன. அகத்தே உணர்ச்சி நெரிசல்கள் இல்லாத மனிதர்களை உருவாக்கி, அதன் மூலம் சமூகப் பகைமைகளையும் தீர்த்து, நாட்டிலும் அனைத்துலகிலும், வன்முறைப் பிரச்னைக்குத் தீர்வு காண, வழிகாட்டினர் காந்தி. சமூகப் பகைமைகள் குறைவதைத் தொடர்ந்து சர்வதேசப் பகைமைகளும் தாகைக் குறையும்.

Photo © Bern, Paris - Rune Hassner

தனி மனிதரிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளும் அநீதிகளும்தான், பூசல்களுக்கும் பகைமைக்கும் மூல காரணம் என்று காந்தி கண்டார். சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற நிலையை உறுதிப்படுத்துவதன் மூலம், நாட்டுக்குள் பூசல்களுக்கு மூலகாரணத்தைத் தவிர்க்க நாடுகள் முயல்கின்றன. செல்வம் உயர உயர, வரியும் உயரும் முறைக்கும் இதே நோக்கம் தான் அடிப்படையானது. நாடுகளிடையே உறவுகள் பலப்பட்டு வரும் நிலையில், கடுமையான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவும் நீதியை நிலைநாட்டவும், சர்வதேசத் துறையிலும், இம்முறைகளைப் பின்பற்றுவது அவசியமாகிறது. விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்களின் பயனாய் உலகம் நெருங்கி ஒன்றாகி வரும் வேளையில், மனிதர் சுதந்திரமாய் உறவு கொள்வதற்குப் பல தடைகளை நாடுகள் விதித்து வருவது, இன்றைய வளர்ச்சியுகத்தின் பெரும்புதிர்களில் ஒன்றாகும்.

உலகம் ஒற்றுமையை நோக்கி வேகமாக உந்தப்படுகிறது. ஆனால் புதிய உலக சமுதாயம் உருவாகுமுன், இரண்டு நிபந்தனைகள் நிறைவுபெற வேண்டும். மனித இனத்தின் மிகச் சிறிய உறுப்புக்கும் பூர்ணமான கலாச்சார சுதந்திரமும் தன்னுரிமையும் அளிக்கப்படுமென்ற உத்தரவாதம் வேண்டுமென்பது முதல் நிபந்தனை. சென்ற ஐம்பது ஆண்டுகள் வரலாற்றில் கவனத்தை ஈர்க்கும் முக்கியமான நிகழ்ச்சி, ராட்சத வல்லரசுகளின் வளர்ச்சியும், அதை ஒட்டிச் சிறிய சிறிய உறுப்புக்களும் அதிக அளவில் தன்னாட்சி உரிமைக் கோரிக்கையை வற்புறுத்தும் போக்கும் ஆகும். இரண்டாவது நிபந்தனை, உலகெங்கும் பொது மக்களிடையே அக்கறையும் விழிப்புணர்ச்சியும் வளர வேண்டும் என்பது. இராணுவமல்லாத பொது ஆட்சி, விருப்பு வெறுப்பின்றி, மக்களிடம் நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கை வலுத்ததன் காரணமாய், அதன் வல்லமையும் வளர்ந்தது. எல்லோரையும் நியாயமாக நடத்தி, நீதி வழங்கும் நிலையை உத்தரவாதப்படுத்தினால், உலக ஆட்சிக் குழுவின் செல்வாக்கும் வளரும்.

மனிதன் பாங்கினையே மாற்ற முற்பட்ட புரட்சிவாதி, காந்தி. பலன்களைக் கொண்டுதான் தம் கொள்கைகள் பற்றி மக்கள் தீர்ப்புக் கூறுவார்கள் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஆகவே தான், அவர் தனி மனிதனுடன் தொடங்கி, அவனை முதலில் மாற்ற முற்பட்டார். மிகச் சிறிய தொடக்கத்தினாலும் மிகப் பெரிய பலன்கள் விளையக் கூடுமென்று அவர் நம்பினார். ஆகவே காந்தியின் வழிமுறை, சிறு தொகுதிகளால் மேற்கொள்ளப் படுவதற்கும், தொடக்கத்தில் அடக்கமான அளவில் உள்ள திட்டங்கள் மூலம் செயல்படுத்தப் படுவதற்கும் ஏற்றதாய் அமைந்திருந்தது. நல்ல குறிக்கோள்களை அடைய எந்த சாதனங்களையும் பயன்படுத்தலாமென்ற கருத்தை அவர் நிராகரித்தார். முடிவுகளைப் போலவே வழிமுறைகளும் முக்கியமானவை என்று அவர் நம்பினார். இக் கொள்கையை ஏற்றுத் தனிமனிதன் நடக்கும்போது சொந்த வாழ்வில் அவன் உயர்வு அடைவதுடன், தூய்மையான வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வரலாற்றின் போக்கையே மாற்றுகிறான்.

அகிம்சையிலும், தனி மனிதனின் முக்கியத்துவத்திலும் காந்தி கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையின் சிறந்த எடுத்துக் காட்டாகத் தம் கடைசி நாட்களில் அவர் கொண்டிருந்த எண்ணங்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளும் அமைந்தன. 1937–47ஆம் ஆண்டுகள், இந்தியாவின் வரலாற்றில் சிக்கலும் சோதனையும் மிக்க நாட்கள். அரசியல்

சுதந்திரம் நெருங்கிய நிலையில், இந்தியரில் பல்வேறு பிரிவினரிடையே'நலவுரிமைப் போராட்டங்கள் கடுமையாகின. ஒற்றுமையை விலையாகக் கொடுத்து, இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் கிடைத்து நிலைபெறுமுன் இடைநேரத்தில் பெருமளவில் வன்முறைக் குழப்பங்களும் கொலைகளும் நடைபெற்றன. வகுப்பு வெறியும் குரோதமும் ஓங்குவதைத் தடுக்கக் காந்தி உறுதியாக நின்றார். முதலில் நவகாளியிலும், பின்னர் பீகாரிலும் கல்கத்தாவிலும், பகைமை உணர்ச்சிகளைத் தணிக்க அவர் உதவிய பின்பு, இந்தியாவின் பிரிவினையை ஒட்டி, டில்லியில் மூண்டிருந்த வகுப்புக் கலவரங்களைச் சமாளிக்க, அவர் டில்லிக்கு வந்தார்.

தமக்கே உரிய வீரத்துடன், காந்தி வெறிபிடித்த கூட்டத்தின் ஆத்திரத்தைச் சமாளித்து, நட்பு உணர்வையும் சமரச உணர்வையும் போதித்தார். தலைநகரிலும், வெளியேயும் கணக்கற்ற மக்கள், அவர் வழிபாட்டுக் கூட்டங்களிலிருந்து ஆறுதலும் வலிமையும் பெற்றனர். வெறியும் ஆத்திரமும் வலுத்திருந்ததால், தவறான வழியிற் சென்ற சிலர், அக் கூட்டங்களைத் தடுக்க முயன்றனர். ஆனால் அந்த எதிர்ப்பையும் அச்சுறுத்தல்களையும் தாக்குதல்களையும் பொருட்படுத்தாமல், தம் முயற்சியை அவர் துணிவுடன் தொடர்ந்தார். 1947 செப்டம்பரில் கல்கத்தாவில் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டு, உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. டில்லியிலும், இதைத் தொடர்ந்து, அவர்மீது பல தாக்குதல்கள் நடந்தன. அவர் உயிருக்கே ஆபத்து என்ற நிலை ஏற்பட்டது. ஆயினும் அவற்றால் அவர் உறுதி இழக்கவில்லை. இணையற்ற வீரத்துடனும் பொறுமையுடனும், அனுதாபத்தையும் அன்பையும் நட்புணர்வையும் பரப்பும் முயற்சியில் அவர் உறுதியுடன் நின்றார். தென்னாப்பிரிக்காவில் அவர் அநீதியை எதிர்த்துப் போராடிய நாள் முதற்கொண்டு, அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்திலும் வீர முத்திரை பொறித்திருந்தது. ஆயினும் இறுதி ஆறுமாதங்களில் அவர் இணையற்ற வீரத்தின் உச்ச கட்டத்தை எய்தி இருந்தார். அவர் சொல்லிலிருந்தும் செயலிலிருந்தும் புதியதோர் இனிமையும் வலிமையும் ஊற்றெடுத்தன. அவரைச் சந்தித்தவர் அனைவரும், அதனால் தூய்மையும் உயர்வும் அடைந்தனர். ஆனால் அதே சமயத்தில் தீய சக்திகளும் திரண்டு வலுத்தன. 1948 சனவரி 30ஆம் தேதி, தம்உடன்பிறந்தோரிடம் கொண்டிருந்த அன்புக்குத் தம் உயிரையே அவர் காணிக்கையாக வழங்கினார். கொலைகாரனின் குண்டு அவர் உடலை வீழ்த்தியது. ஆனால் அவர் ஆன்மா அழியவில்லை. மனித வரலாற்று வானில் மங்காத விண்மீனாய் ஒளி வீசித் திகழும் அழிவற்ற அமரர் வரிசையில் அவர் இடம் பெற்றார்.

தமிழில்; கா. திரவியம்

# கார்ல் ஜாஸ்பெர்ஸின் இறுதிக் கருத்துரைகளில் ஒன்று: காந்தியடிகள்

**கார்ல் ஜாஸ்பெர்ஸ்**



Photo Gandhi Smarak Sangrahalaya, Ahmedbad

நேர்மையை அடிப்படையாகக் கொண்ட அகிம்சையால் காந்தி இந்தியாவை ஆங்கிலேய ஆட்சியினின்றும் விடுவித்தார். ஆயுதவலிமையாலன்று. ஆட்சியிலிருந்து அதிகாரிகளுடன் அவர் தொடர்பு கொள்ள வேண்டியிருந்ததால் அவர் செயல் அரசியல் தன்மை வாய்ந்ததெனினும் அவரது அரசியல் முன் கண்டிராத போக்கில் அமைந்திருந்தது.

நேர்மையுடனும் ஒழுக்கத்துடனும் வாழ்வதாகப் பாசாங்கு செய்த உலகில் காந்தி வெளி வேடத்தின் முகமூடியைக் கிழித்தெறிந்தார். சமூகத்தில் இம்சை ஆட்சி புரிவதைத் தம்முடைய ஆய்வுக் கட்டுரைகளில் அவர் சுட்டிக் காட்டினார். (இதனை அவருக்கு முன்பே பிறர் செய்திருந்தனர்). இதற்கு மேலாகத் தம்முடைய அன்றாட வாழ்வில் இம்சைக்குத் தாம் ஆளாவதாலும் அதனால் வெளிப்படையாகத் துன்புறுவதாலும் இம்சையின் ஆட்சிக்கு மக்களின் கவனத்தை ஈர்த்தார். தம்முடைய செயல்களுக்கான தண்டனையை ஆளுவோரிடமிருந்து ஏற்கத் தயாராயிருப்பதிலும் இத்தகைய மனப்பான்மை இந்திய மக்களுக்கு உண்டாக்குவதிலும் அவர் அடைந்த வெற்றியின் மூலம் அவர் வலிமையாக காணலாம். இம்சையை அகிம்சையைக் கொண்டே எதிர்த்துப் போராடி உலகத்தை வியப்புறச் செய்தார். இந்திய மக்களை ஊக்கமுறச் செய்தார்.

அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் என்ற இயலாத ஒன்றைக் காந்தி உருவாக்க முயன்றார். அவர் வெற்றி வழக்கத்தில் காணாத ஒன்று.

உடலியலான இம்சையைக் காந்தி அறவே விலக்கினார். தம் வாழ்நாளில் பலமுறை சிறை சென்றார். உயிருக்கே உலை வைக்கப்படுமென அச்சுறுத்தப்பட்டார்; இறுதியில் கொலையுண்டார். ஆனால் அவர் எல்லா வகையான இம்சையையும் எதிர்த்தாரா? இது முக்கியமான கேள்வி என நினைக்கிறேன். தம் கொள்கையைச் சரியென எதிரிகள் நம்பி மனம் மாறும்படி செய்து அவர்களுடன் உடன்பாடு காண வேண்டுமென்று அவர் உண்மையுடனும், வெளிப்படையாகவும் கூறினாரெனினும் நடைமுறையில் அவர் அற இயலான கட்டாயத்தை மேற்கொண்டார். துன்பத்தை ஏற்பதற்கு, அவருக்கிருந்த சொந்த ஆற்றல் துன்பத்தை மேற்கொள்வதில் இந்தியர்களுக்கிருந்த ஆற்றலைப் பேரளவில் தட்டியெழுப்பித் தானே ஒரு வகையான இம்சையாகி இறுதியில் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டி விட்டது.

துறவிகளின் ஆற்றலைப் பற்றிய பண்டைய இந்தியக் கொள்கை நினைவுக்கு வருகிறது. இணையற்ற முறையில் தங்களை வாட்டிக் கொள்வதால் அனைத்தையும் தம் ஆட்சிக்குட்படுத்தும் மந்திர சக்தியை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர். கடவுளரும் இத் துறவிகளின் ஆற்றலுக்கு அஞ்சினர்.

காந்தியின் அகிம்சை முறை இம்சையை ஒழிக்கவில்லை, அதனை இடம் பெயரச் செய்தது. அவர் விருப்பத்திற்கு மாறாக அவருடைய தொண்டர்களில் சிலர் குறைந்த அளவில் உடலியலான இம்சையைக் கையாண்டாலும் உடலியலான இம்சையின்றி அவர் அரசியல் வெற்றி பெற்றார்.

பிறரைக் கொன்று அழிப்பதால் மக்களைக் கீழ்ப்படியச் செய்யமுடியும் என்று வரலாறு கற்பிக்கிறது. எடுத்துக்காட்டு, ஸாமாஸில் அதீனியர்கள், பாலஸ்தீனத்தில் ரோமர்கள், ப்ராவென்ஸில் இடைக்காலக் கிறிஸ்தவத் திருச்சபை, அயர்லாந்தில் கிராம்வெல். கட்டுப்பாடோ, மனச்சான்றால் தயக்கமோ இல்லையெனின், துணிந்த கொள்கையின்படியோ தெய்வீகக் கட்டளையின்படியோ நிகழ்வதாகக் கூறி அதிகாரம் வரம்பு கடந்து செல்லும் இக்கொடுங்கோன்மையால் தங்கள் உரிமையில் பெருமை கொண்டிருந்தவர் அழிக்கப்படுகின்றனர்.

தன் அதிகாரத்திற்குப் பேரிடர் தோன்றும்போது எந்த அளவிற்கு ஆளும் அதிகாரிகள் செல்லலாம் என்னும் முக்கியமான கேள்விக்கு, பயங்கர முறைகளைக் கையாள்வதைவிட வெளியேறுவதே மேல் எனும்விடை ஆங்கிலேயரிடம் தயாராக இருந்தது. பொதுக்கூட்டங்களில் எப்போதும் காந்தி பேசுவதற்கு உரிமை இருந்தது. சிறையிலிருந்தபோதும் செயலில் ஈடுபட அவருக்கு அனுமதி இருந்தது. ஆங்கிலேயருடைய பரந்த மனப்பான்மையாலும் சட்ட உரிமைகள் பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்தாலும் முழுஅளவில் செயல்படுவது காந்திக்கு இயல்வதாயிற்று. காந்தியின் சாதனைகளுக்கு அவருடைய கருத்துக்கள் காரணமாயிருந்தமை போலவே ஆங்கிலேயருடைய அரசியல் நோக்கமும் ஒத்த அளவில் காரணமாயிருந்தது. பின்னது சற்று மிகுந்த அளவில் என்றும் சொல்லலாம்.

ஆனால் வரலாற்றிலேயே தனிப்பட்டதெனச் சொல்லக் கூடிய மிகச் சிறப்பான உண்மை யாதெனில் அரசியலுக்கு அப்பாற்பட்டதொருக் கருத்தைக் கொண்டு அரசியல் நடவடிக்கைக்கு வேண்டிய ஒரு கருவியை உண்டாக்கி அக்கருத்தின்உண்மைக்குத் தம் வாழ்க்கை முழுவதும் ஓர்எடுத்துக்காட்டாக விளங்கச் செய்தவர் காந்தி என்பதாம்.

தம்முடைய செயலுக்கான கொள்கையைக் காந்தி தாமே வகுத்தார். அரசியலைக் கடந்த சமய அடிப்படைகளில் அவர் அரசியல் வேரூன்றியுளது. அவ்வரசியல் சத்தியாக்கிரகத்திற்கு உண்மையை இடையீடின்றிக் கடைப்பிடிப்பதற்கு, வழிகோலும் அந்தராத்மாவின் செயலில் நிலை கொண்டுளது. இக்கொள்கைக்கு அவரே எடுத்துக்காட்டாக விளங்கினார். வெளிப்புற எதிர்ப்பான அவர் செயல்கள் அன்பு, உண்மை, தியாகம் என்பவற்றின் செயல்முறை ஆற்றலிலிருந்து கிளம்பியவை. சத்தியாக்கிரகியானவன், சத்தியம், கற்பு, அஞ்சாமை, தியாக உள்ளம் இவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். செயற்பாட்டு முறையிலன்றி 'உண்மையின் போர் வீரனாக' நின்றுதனக்கு இழைக்கப்படும் துன்ப மனைத்தையும் அவன் மகிழ்ச்சியுடன்ஏற்கவேண்டும். கருவிகளைப்பயன்படுத்துவதற்கு உடலுக்குப் பயிற்சி அளிப்பதைப்போல சத்தியாக்கிரகியானவன் மனத்திற்கும் ஆத்மாவிற்கும் கட்டுப்பாட்டுப் பயிற்சி அளிக்கிறான். தன்னைத் தூய்மை படுத்திக் கொண்டே வாழ்கிறான்.

தம்குற்றத்தை உணர்ந்து தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்காக தம் வாழ்நாள் முழுவதும் ஓயாமல் முடிவின்றி முயல்வதில் காந்தி சமயத் துறவிகளினின்றும் வேறுபடுகிறார். தம்மை மெய்யடியார்களில்ஒருவராக்கிவிடும் முயற்சி அனைத்தையும் அவர் வெறுத்தார். அவரைக் கடவுளாக்கிவிட விரும்பி அவரைத் தரிசிக்க வந்த பெருந்திரளான மக்களை அம்முயற்சியினின்றும் தடுப்பது அவர் கவனிக்க வேண்டிய பெரிய பணிகளில் ஒன்றாகி விட்டது.

தம்முடைய தியாக மனப்பான்மையால் 'அரசியலுக்குமேற்பட்ட'தொரு கருத்தை அரசியல் நடவடிக்கைக்குத் தேவையான ஆற்றலாக மாற்ற முடியுமென அவர் காட்டினார். நம் காலத்தில் இது காந்தியின் பெருமையைக் காட்டுகிறது. அவர் கருத்து அரசியலானது, அற இயல் சமயம் என்பவற்றினின்றும் பிரிக்க முடியாதது என்பது மட்டுமன்று. இவற்றால் அது இடைவிடாமலும் முழுவதும் வளர்க்கப்படுவதென்பதுமாகும். ஆன்மாவின் தூய்மையை இழப்பதைவிட இறப்பதே மேல், மக்களினம் உலகைவிட்டு மறைந்து விடுவதே மேல்.

அறத்தையும் சமயத்தையும் சார்ந்த அரசியலில் ஈடுபட்டு ஒளிவு மறைவின்றி உண்மைக்காக வாழும் மனிதனுக்கு நம் காலத்தில் இணையற்ற ஓர்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

---

**கார்ல் ஜாஸ் பெர்ஸ் 1883இல் ஜெர்மனியில் ஓல்டன்பர்கில் பிறந்தார் இவர் தற்கால தத்துவ அறிஞருள் தலை சிறந்தவருள் ஒருவர். ஏறக்குறைய 70 ஆண்டுகளாக இவர் செய்த பணி அக்காலக் கருத்தைப் பெரிதும் பாதித்தது. பிப்ருவரி 1969இல் சுவிட்ஸர்லாந்தில் பேஸலில் இறந்தார். இவருடைய இறுதிக் கட்டுரைகளில் ஒன்றாகிய இது "மகாத்மா காந்தி: 100 ஆண்டுகள்" என்ற நூலில் உள்ளது.**

**இடப்புறம்: "இரவலர் உடையில் பெருந்தகை" எனக் கவிஞர் தாகூர் கூறிய காந்தியின் உடைமைகள்; உணவுக் கிண்ணங்கள், மரமுள் கரண்டி, மூன்று பீங்கான் குரங்குகள், நாட்குறிப்பு, வழிபாட்டு ஏடு, கடிகாரம், படிக்கம், தாள் வெட்டும் கத்திகள், இரு ஜோடி செருப்புகள். இவை புது டெல்லியில் காந்தி இறந்த தோட்டத்திலுள்ள வீட்டில் வைக்கப்பட்டுள்ளன.**

# மாணவர்களையும் அரசியலையும் பற்றி காந்தியின் கருத்துக்கள்

**மால்கம் எஸ். ஆதிசேஷையா**
யுனெஸ்கோ துணைப் பொது இயக்குநர்

கல்வி நிலையங்களில் அரசியல் பற்றிக் காந்தியடிகளின் கருத்துக்களை, இந்தியா மட்டுமல்ல, யுனெஸ்கோவின் உறுப்பினர் நாடுகள் அனைத்தும் இந் நேரத்தில் அறிந்து கொள்வது பொருத்தமே. இது அனைத்து நாடுகளிலும் குமுறிக் கொண்டுள்ள ஒரு பிரச்னை. ஓராண்டில் மட்டும், 1967—68 ஆம் கல்வியாண்டில் யுனெஸ்கோ உறுப்பினர் நாடுகள் எண்பதில், ஐம்பத்தியாறு நாடுகளில் மாணவர் கலகங்களும் எழுச்சிகளும் ஏற்பட்டன. (எஞ்சிய 45 நாடுகளில் இன்னும் பல்கலைக் கழகங்கள் இயங்கவில்லை).

கல்வி நிலையங்களில் அரசியல் பற்றிக் காந்தியடிகளின் கருத்துக்களை நான் நான்கு சூத்திரங்களில் சுருக்கித் தருவேன்.

- கல்வி நிலையங்களும் அரசியல் அமைப்புக்களே.
- தேசிய அரசியல் நெருக்கடி நேரங்களில் கல்வி நிலையங்களும் பங்கு கொள்ளவேண்டும்.
- கல்வி நிலையங்கள் கட்சி அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது.

கல்வி நிலையங்கள் உண்மையில் கல்வி நிலையங்களாக இயங்க வேண்டும்.

## கல்வி நிலையங்களும் அரசியல் நிறுவனங்களே

விடுதலைக்கு வழி செய்வதே கல்வி, என்ற பண்டைய வாசகம், முன்பு போலவே இன்னும் பொருத்தம் உடையது என்று ''ஹரிஜன்'' பத்திரிகையில் 1946 மார்ச்சு 10ஆம் தேதி இதழில் காந்திஜி எழுதினார். கல்வி நிலையங்களில் அரசியல் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்களின் சாரம் இந்த வாசகத்தில் பொதிந்துள்ளது எனலாம். மனித சமுதாயத்திற்குச் சேவை செய்யும் பொருட்டுப் பயிற்சிகள் பெறுவது கல்வி என்பது அவர் கருத்து. தன் ஒழுக்கத்தைப் பண்படுத்திப் பக்குவம் பெறுவது அப்பயிற்சிகளில் முதன்மையானது. அதுபோலவே விடுதலை என்பது, அகத்திலும் புறத்திலும் எல்லா விதமான அடிமைத்தனங்களிலிருந்தும் பெறும் சுதந்திரத்தைக் குறிக்கும்.

இந்தியாவின் அரசியல் சட்டத்திலும், ஐக்கிய நாடுகள் சாசனத்திலும், பின்னர் இணைக்கப்பட்ட சுதந்திரங்களையும் உரிமைகளையும்—அதாவது, இன, மொழி, சமய, பால், வேற்றுமைகள் இன்றி மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் அனைவருக்கும் மதித்து வழங்க வேண்டுமென்ற குறிக்கோளை—எய்த மனித சமுதாயத்துக்குச் சேவை செய்வதுதான் அரசியல் என்றால், அந்த அடிப்படையில், கல்வி நிலையங்கள் அரசியல் அமைப்புக்களேயாகும். அரசியல் என்ற சொல்லின் இலக்கணத்திலேயே இப் பொருள் அமைந்துள்ளது.

விடுதலை பெறும் கலையிலும் அறிவியலிலும், பள்ளிகளும் கல்லூரிகளும் தங்கள் உறுப்பினருக்கும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கின்றன. கல்விதான் அறிவியல்; விடுதலை தான் கலை. அறிவு வளர்த்துப் பயிற்சி பெறுவது, கல்வியாகும். கேடு களைந்து சுதந்திரம் பெறுவது, விடுதலையாகும். கல்வி நிலையங்களில் மாணவன், தன்னைப் பற்றியும், தன்னைச் சுற்றியுள்ள உலகு பற்றியும் உணர்கிறான்; தன்னையும், தன்னைப் போலவே அடிமை நிலையில் உள்ள மற்றவர்களையும், விடுவிக்க முயல்கிறான். இந்த நோக்குடன் பார்த்தால், கல்வி நிலையங்களும் அரசியல் அமைப்புக்களே—அரசியல் என்ற சொல்லின் மிக உயர்ந்த பொருளில்.

## கல்வி நிலையங்கள் நாட்டின் அரசியல் நெருக்கடிகளில் பங்குபெற வேண்டும்

1941இல் முதல் முறையாக நாட்டுக்கு அளித்துப் பின்னர் 1945 நவம்பர் 13இல் திருத்திப் புனைவில் இறுதியாக வெளியிட்ட 'நிர்மாணத் திட்டத்தில் காந்திஜி கூறுகிறார்: ''ஒத்துழையாமை இயக்கத்தின் உச்ச கட்டத்தில், பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறுமாறு மாணவர்களும் ஆசிரியர்களும் அழைக்கப்பட்டனர். காங்கிரசின் அந்த அழைப்பை ஏற்ற சில மாணவர்களும் பேராசிரியர்களும், பின்னரும் கொள்கையில் உறுதியாய் நின்று நாட்டுக்கும் தங்களுக்கும் நன்மை தேடியுள்ளனர்''. ஒவ்வொரு நாட்டின் வாழ்விலும் அபாயகரமான, ஆனால் அபூர்வமான நெருக்கடிக் கட்டங்கள் சில ஏற்படுவதுண்டு. இந்தியாவில் ஏற்பட்ட அத்தகையதொரு நெருக்கடி நேரத்தில்தான், கல்வி நிலையங்களை விட்டு வெளியேறி தேசிய போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் காந்திஜியும் காங்கிரசும் அழைப்பு விடுத்தனர்.

''எல்லோருடைய வாழ்விலும் இத்தகைய கட்டங்கள் எழுவதில்லை. ஒரு சிலர் வாழ்விலும், இது போன்ற கட்டங்கள் அபூர்வமாகத் தான் எழும்'', என்று 1942இல் அனைத்திந்திய காங்கிரசுக் கமிட்டியின் பம்பாய்க் கூட்டத்தில், 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் நிறைவேற்றப்படும் தருவாயில், காந்திஜி கூறினார். ''நான் உங்களுக்கு அளிக்கும் மந்திரம் இதுதான். செய் அல்லது செத்துமடி''. உலகெங்கும் நடந்துள்ள சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் மாணவர்கள் முக்கிய பங்கு கொண்டுள்ளனர் என்று அவர் எடுத்துக் காட்டினர்.

ஒரு நாட்டின் வரலாற்றில், வாழ்வா, சாவா என்ற பிரச்னை எழும் இத்தகைய கட்டங்களில், அரசியல், இலட்சிய உணர்வால் வளம் பெற்று, சமூக வாழ்வு அனைத்துக்கும் உயிர் நாடியாய் விளங்குகிறது. சமூகத்தின் முக்கிய உறுப்பாயுள்ள கல்வி நிலையங்களும் இந்த அரசியல் வேகத்தில் பங்கு கொள்ளும். இவ்வாறு அரசியலில் கலந்து கொள்வது, சத்தியம், அகிம்சை ஆகிய இரண்டு அடிப்படைக் கோட்பாடுகளுக்குக் கட்டுப் பட்டதாய் இருக்க வேண்டும். மாணவனும் ஆசிரியரும் தேசிய இயக்கத்தில் இரண்டறக் கலப்பதில், எந்தவித 'இம்சைக்கும் இடமிருக்க முடியாது. போராட்டத்தின் இறுதிக் கட்டம் எழும்போது,

---

**மால்கம் எஸ். ஆதிசேஷையா யுனெஸ்கோவின் துணைப் பொது இயக்குநர்; 1949இல் அதில் சேர்ந்தார். தமிழ் நாட்டில் பிறந்த இவர் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கல்வி பயின்றார். யுனெஸ்கோவில் சேருமுன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் துறைத் தலைவராகவும், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராகவும் இருந்தார். யுனெஸ்கோவில் ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்கா இவற்றின் பொருளாதாரப் பிரச்னைகளில் ஈடுபட்டுவருகின்றார்.**

மாணவர்களும் ஆசிரியர்களும் கல்வி நிலையங்களை விட்டு வெளியேற, அவசியமானால் நாட்டின் விடுதலைக்காகத் தங்களைத் தியாகம் செய்ய முன்வர வேண்டும். இத் தியாகம், அகிம்சா பூர்வமானதால், பூர்ண தியாகமாகும்.

தேசிய அரசியல் நெருக்கடி நேரிடும் கட்டங்களில், கல்வி நிலையங்கள் எந்த விதத்திலும் ஒதுங்கி நிற்பது குறித்துக் காந்திஜி அதே புனா அறிக்கையில் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார். தற்போதைய கல்வி முறை, தன் உறுப்பினர்களுக்கு அளிக்கும் பொய்யான, இயற்கைக்கு முரணான கவர்ச்சிகளே, இவ்வாறு ஒதுங்கி நிற்பதற்குக் காரணம் என்று அவர் கண்டார். புரட்சி செய்ய ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள அடிப்படை உரிமை பற்றி ஹெரால்ட் லாஸ்கி குறிப்பிட்டார். தேசிய அரசியல் நெருக்கடியில் தங்கள் கடமையை ஆற்றக் கல்வி நிலையங்களைக் காந்திஜி அழைக்கும்போது, இந்த அடிப்படை உரிமையை மாணவர்களும் ஆசிரியர்களும் இழக்காமல் பார்த்துக் கொள்கிறார். இந்த இறுதியான, சிக்கலான, பொறுப்பை, ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக்கொண்டுள்ளது, மாணவன், ஆசிரியன் என்ற முறையில் அல்ல; தனிப்பட்ட குடிமகன் என்ற முறையில்தான். இப்பொறுப்பு பற்றி அவன் முடிவு செய்யும் நெருக்கடியான நேரத்தில், தனித்து நின்று, தன் சொந்த மனச்சான்றின் ஆணைக்குப் பணிந்து முடிவு செய்வான்.

அந்த மனச்சான்று ஒரு பெரும் புதிர் என்பதை மறந்துவிடக்கூடாது. நமக்கு அது மன உறுதி ஊட்டி, வலியவராக்கவும் முடியும்; அதே சமயத்தில் நம்மைக் கோழைகளாக்கவும் முடியும். காந்திஜி கூறியது போல் ‘ஆண்டவனையோ அழிவையோ அடைய என்னை விட்டு விடு’ என்று கூறும் நிலைக்கு, அது நம்மை அழைத்துச் செல்லக்கூடும். அல்லது இமாலயத் தவறு செய்து விட்டதாக அவர் கூறியது போல் கூறவும் நம்மை அது உந்தும். ஆயினும் எந்த நிலைமையிலும், நம்மிடமிருந்து மாறுபட்டு நிற்பவரிடமோ, அதிகாரிகளிடமோ, வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது என்று காந்திஜி எச்சரித்தார். மனச்சான்றின் அடிப்படையில் அரசியலில் பங்கு கொள்ளும்போது, அகிம்சையே அதில் குடிகொள்ளும். மனச்சான்றின் அடிப்படையில் அரசியலில் பங்கு கொள்ளும் போது, அகிம்சையே அதன் தனித்தன்மையாக விளங்கும்.

## கல்வி நிலையங்கள் கட்சி அரசியலில் ஈடுபடக் கூடாது

Photo © H. Cartie Bresson Paris.



# கல்வி பற்றி காந்தியின் கருத்துக்கள்

மாணவர்கள் கட்சி அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்று காந்தி கூறினர். அவர்கள் மாணவர்கள்; அறிவை நாடுபவர்கள்; அரசியல்வாதிகள் அல்ல. அரசியல் வேலே நிறுத்தங்களில் அவர்கள் ஈடுபடக்கூடாது. மாணவர்கள், தங்களுக்கு முன்மாதிரியாக, வழிகாட்டியாக, சில தலைவர்களை ஏற்றுக் கொள்ளலாம்; ஆனால் தலைவர்களிடம் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அவர்களுடைய பண்புகளில் சிறந்தவற்றைப் பின்பற்றுவதில் காட்ட வேண்டுமே யொழிய வேலை நிறுத்தங்கள் செய்வதில் காட்டக் கூடாது என்று, 1945 நவம்பரில் நிர்மாணத் திட்டத்தை விளக்கிக் காந்திஜி எழுதியபோது, தெளிவாக வலியுறுத்தினர்.

இது மிகத் தெளிவான ஆணை. இன்று வேலை நிறுத்தங்கள் செய்து, ஊர்வலங்கள் நடத்தி, டிராம்களையும் பஸ்களையும் கொளுத்தி, ரயில்கள் மீது கற்களை வீசி, அவற்றில் பயணம் செய்யும், ஒரு பாபமும் அறியாத, வயோதிகரையும் குழந்தைகளையும், காயப்படுத்தும் மாணவர்களுக்குக் காந்திஜியின் சொற்கள் நேரடியான எச்சரிக்கையாகும். மாணவர்களும், சில ஆசிரியர்களும், நடத்தும் இக் கிளர்ச்சிகள், மொழி, மாநில எல்லை, அல்லது கட்சி அரசியல் பிரச்னைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் கிளர்ச்சிகள் என்று கூறப்படுகிறது.

தேசிய அரசியல் பிரச்னைகளாய் இல்லாமல் இவை போன்ற கட்சி அரசியல் பிரச்னைகளில், வன்முறை கலக்கும் கிளர்ச்சிகளில் கல்வி நிலைய உறுப்பினர் கலந்து கொள்ளலாமா? ‘கூடாது’, என்பதுதான் காந்திஜியின் தெளிவான, ஆணித்தரமான பதில். சென்னைப் பல்கலைக் கழகத்தில் நான் உறுப்பினராக இருந்தபோது, இக் கேள்விக்கு நான் கூறிய பதிலும், ‘கூடாது’ என்பதுதான். யுனெஸ்கோ அதிகாரி என்ற முறையில் இன்றும் அதுவே என் பதில்.

அன்றாட அரசிய்ல் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு கொண்டு, கிளர்ச்சி செய்வது, கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் வேலையல்ல. இதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல, கல்வி நிலையங்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளக் கல்வி நிலையங்களுக்குத் சிறப்பான தேர்ச்சியோ தகுதியோ கிடையாது.

காந்திஜி எடுத்துக் காட்டியதுபோல் பள்ளிகளின், கல்லூரிகளின், ஒப்பிலாப் பொறுப்பு, அறிவைப் பெருக்குவது. மாணவர்களும் ஆசிரியர்களும் வ்ாய்மையை நாடுபவர்கள்; அந்த வேட்பில், சகிப்புத்தன்மை, கருணை, சமத்துவம், நீதி ஆகிய ப்ண்புகளில் பயிற்சியும் பக்குவமும் பெறுபவர்கள். கா ஷங்களை எழுப்பி ஊர்வலத்தில் சுற்றிக் கொண்டிருந்தால், வாய்மையை எப்படி நாட முடியும்? கத்தியையும் பூண் வைத்த கம்பையும் தூக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து, மாற்றானைக் குத்தவும் துணியும் நேரத்தில், சகிப்புத் தன்மையை நீ எப்படிப் பழக இயலும்? ரயில்களை நிறுத்தி அப்பாவிப் பயணிகளைக் கல்லால் அடிப்பதில் காலத்தைக் கழிக்கும்போது, பரிவும் பண்பும் கொள்ள எப்படி நீ கற்க இயலும்? எல்லா இந்தியர்களும் சமம் என்ற போதிலும், உன்னோடு சேர்ந்து வேலை நிறுத்தம் செய்ய மறுப்போரைவிட, அல்லது மற்ற மாநில மொழி, அரசியல் பிரிவுகளைச் சேர்ந்தோரைவிட, நீ உயர்ந்தவன் என்ற எண்ணத்தில், பள்ளியிலும் கல்லூரியிலும் நீ வேலை நிறுத்தக் கிளர்ச்சி செய்யும் போது, சமத்துவ உணர்வை நீ எப்படிப் பயில முடியும்? மற்றவர் உடைமைக்கும், பஸ்கள், டிராம்கள், வீடுகளுக்கும் தீ வைக்க நீ துணிந்த பின், உன் நீதி உணர்வு உன்னை எங்கே அழைத்துச் செல்கிறது?

வாய்மையை நாடி, மனிதப் பண்புகளைப் போற்றி வளர்க்கும் பணியினைப் பள்ளிகளும் கல்லூரிகளும் செவ்வனே செய்வதற்கு உதவும் பொருட்டுத் தானே, கல்வி நிலையங்களுக்கு இந் நாட்டிலும் மற்ற நாடுகளிலும் சிறப்பான சலுகைகளும், மாணவனின் பக்குவம் பெருத மனத்தைப் பண்படுத்தும் வகையில் செயல் சிந்தனைச் சுதந்திரமும், அளிக்கப்பட்டுள்ளன. கட்சி அரசியலில் மாணவர்கள் பங்கு கொள்ளும்போது, அந்த ஆர்ப்பாட்டங்களை ஒட்டி எப்பொழுதுமே வன்முறையும் எதிர்த்தாக்குதலும் ஏற்படுகின்றன என்பதே, கல்வி நிலையங்களின் வாய்மை வழியை வலியுறுத்தும் ஒரு சான்றல்லவா?

வாய்மையையும் சொந்த வாழ்வில் நேர்மையையும் பற்றி மாணவர்கள் அறிவுரைகள் பெறும் நேரத்திலே, பொய்மையும் அநீதியும் வெளியுலகில் பரவியுள்ளதைக் காண்கையில் நீதிக் கோட்பாடுகள் நெஞ்சை நிரப்பும் நேரத்திலே, நடைமுறையில் அநீதிகள் மலிந்து கிடப்பதைக் காண்கையில்—சுதந்திர இலக்கியங்களை ஆர்வத்துடன் நாம் ஒருபுறம் படிக்கையில், அரசிலும், நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் பல்வகையான ஆதிக்கக் கொடுமைகளும் சிறுமைகளும் நம் கண் முன் நடப்பதைக் காண்கையில் ஹெர்பெர்ட் மார்க்யூஸ் குறிப்பிடுவதுபோல், எதேச்சாதிகார அடிப்படை கொண்ட நமது சமுதாயம், மாணவர் உள்பட வெளியாரை நிர்ப்பந்தம் செய்ய சூட்சுமமான வன்முறையைப் பயன்படுத்தும் நிலையோடு; கொள்கை உறுதியுடன் வலியுறுத்தப்படும் பூர்ண அகிம்சை இலட்சியம் மோதுவதைக் காண்கையில்—மாண நடவடிக்கையில் ஈடுபடாமல், மாணவர்களும் ஆசிரியர்களும் செயலற்று இருப்பது எவ்வளவு கடினம் என்பதை நான் உணர்கிறேன்.

ஆயினும் கட்சி அரசியல் நடவ்டிக்கைகள் பெரும்பாலும் இக் குறிக்கோள்களைப் பொருட்படுத்துவதில்லை. மேலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உண்மையில் வேறு வழி கிடையாது. வானவெளி வீரர்கள் போல், அவர்கள் பயிற்சியில் முழுத் தேர்ச்சி பெற்றபின்தான், பயணத்தைத் தொடங்க முடியும்.

பயிற்சியில் தேர்ச்சி பெற மாணவர்கள் கல்லூரியில் இன்னுமோர் ஆண்டு கழிக்க வேண்டுமெனக் காந்திஜி கருதினர். மாணவர்கள் அறிவுப் ப்யிற்சியில் முழுக்க முழுக்க ஊறுவதுடன், தாமாகச் சிந்திக்கப் பழக வேண்டும். வாழ்வில் நேரிடக் கூடிய நெருக்கடிகள் அனைத்தையும் சமாளித்து, தங்களுக்கு மட்டுமல்ல, இப் பரந்த நாட்டில் எதிர்காலத்தில் அவர்களை நம்பி நிற்கப் போகும் கோடிக்கணக்கான மக்களுக்கும், அபாயங்கள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமானல், மாணவர்கள் அறிவுப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவது அவசியம். சிறப்பான பொறுப்புக்களை ஏற்றுள்ள கல்வி நிலையங்கள், உறுதியான கட்டுப் பாட்டுடன் இயங்க வேண்டும். பொறுமையான பயிற்சிக்கும், தானக அறிவு பெறத் தீவிர முயற்சிக்கும், கட்டுப்பாடு அவசியம்.

கல்வியைச் சமூக உறவுகளிலிருந்து பிரித்துச் சமூக, தேசிய, சூழ்நிலைகளுடன் சிறிதும் தொடர்பின்றி மேதைகளின் ஒய்யாரக் கோட்டைகளாகப் பள்ளிகளும் கல்லூரிகளும் இயங்க வேண்டுமென்று நான் கூறவில்லை. படிப்பு அனைத்தும் பள்ளியிலும் கல்லூரியிலும் தான் நடக்கிறதென்றும் நான் கூறத் துணிய மாட்டேன். அறிவுப் ப்யிற்சியின் தொடக்கம், கல்வி நிலையங்களில் என்றுதான் நான் கூறுவேன்.

இன்று சமூகம் உள்ள நிலையில், கல்வி, ஆழ்ந்ததொரு நெருக்கடியில் சிக்கியுள்ளது. கோட்பாடு, முறை, இரண்டிலும் எழுந்துள்ளது அந்த நெருக்கடி. கல்வியின் கோட்பாடு

எழுத்தறிவின்மையைவிட அறியாமையைப் பற்றியே நாம் மிகுதியாக வருந்தி வெட்கப்பட வேண்டுமெனக் கருதுகிறேன். ஆனால் இதிலிருந்து நான் எழுத்தறிவை எதிர்க்கிறேன் என்று நினைக்க வேண்டாம். அதை எவ்வளவு மதிக்கிறேன் என்றால் கல்வி முறையில் அதன் பயனைக் குறைவாகவோ இழிவாகவோ கருதுவதில்லை.

வாழ்க்கைத் தொழில் ஈடுபடும் வயது வந்தோர் அனைவருக்கும் எழுதப் படிக்கத் தெரியவேண்டும். பொது மக்கள் எழுத்தறிவு பெறாமை இந்தியாவின் பழியும் இழிவுமாகும். இதை ஒழிக்கவேண்டும். எழுத்தறிவு வழங்குவதுடன் நிறுத்திவிடாமல் பயன்தரும் அறிவைப் பரப்பவும் வேண்டும்.

★

பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்துடன் ஒரு கைத்தொழிலையும் சேர்ப்பது பழங் கருத்தாகும். அதன்படி கல்விக்குப் புறம்பாகவே தொழிலைக் கற்கவேண்டும். இது பெருந் தவறெனத் தோன்றுகிறது. தொழிலை ஆசிரியர் கற்று தமது அறிவை அதனுடன் இணைத்து தாம் தெரிந்து கொண்ட தொழிலின் வாயிலாக அந்த அறிவை வழங்கவேண்டும்.

நூற்றலை எடுத்துக் கொள்வோம். எனக்குக் கணிதம் தெரிந்தாலன்றி, தக்ளியில் எத்தனை கஜம் நூல் நூற்றேன், அஃது எத்தனை சுற்றுகள் சுற்றும் அல்லது நான் நூற்ற நூலின் இழைத் தரம் என்ன என்று சொல்ல முடியாது. அவ்வாறு சொல்ல எனக்கு எண்கள் தெரியவேண்டும்; கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் தெரியவேண்டும். சிக்கலான கணக்குகளைச் செய்ய தறிகளைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு குறிக் கணக்கியல் தேவை. இதிலும் ரோமானிய எழுத்துகளுக்குப் பதிலாக இந்துஸ்தானி எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

அடுத்ததாக வடிவியலை எடுப்போம். தக்ளியின் வட்டைவிட வட்ட வடிவை வேறெது நன்கு காட்ட முடியும்? யூக்லிடின் பெயரை முதலாகக் குறிப்பிடாமல் நான் இம்முறையிலே வட்டத்தைப் பற்றிக் கற்றுக்கொடுக்க முடியும்.

நூற்றலின் வழியாக எவ்வாறு குழந்தைக்குப் புவியியலும் வரலாறும் கற்பிக்க முடியுமென நீங்கள் கேட்கலாம். சிறிது காலத்திற்கு முன் ''பருத்தி-மனிதகுல வரலாறு'' என்ற நூலைப் படித்தேன். அஃது எனக்கு எழுச்சியூட்டியது; கற்பனைக் கதை போலிருந்தது. அது பண்டைக் கால முதல் பருத்தி எவ்வாறு எப்போது முதலில் பயிரிடப்பட்டது, எவ்வாறு வளர்ச்சி பெற்றது, எப்படி பண்டமாற்று வாணிகப் பொருளானது என்பதை எல்லாம் விளக்கியது.

குழந்தைக்குப் பல நாடுகளைப் பற்றி சொல்லுபோது அவற்றின் வரலாறு, புவியியல் பற்றி சொல்லவேண்டும். யார் ஆட்சியில் எவ்வெப்போது வாணிக உடன்படிக்கைகள் செய்யப்பட்டன? ஏன் சில நாடுகள் பருத்தியையும் சில துணியையும் இறக்குமதி செய்ய வேண்டும்? ஒவ்வொரு நாடும் தனக்குத் தேவையான பருத்தியை ஏன் உற்பத்தி செய்யக் கூடாது? இவற்றை விளக்க பொருளாதாரத்தையும் பயிர்த் தொழிலையும் கற்றுக் கொடுக்கவேண்டும். பல வகைப் பருத்தியையும், அவை வளரும் நிலத்தையும், வளரும் விதத்தையும், கிடைக்கும் இடத்தையும் பற்றி கற்றுக்கொடுக்க வேண்டும்.

இவ்வாறாக தக்ளி நூற்றலிலிருந்து, கிழக்கிந்திய கம்பெனியாரின் வரலாற்றை முழுவதும், அவர்கள் ஏன் இங்கு வந்தனர், எவ்வாறு நமது நூற்றல் தொழிலை அழித்தனர், பொருளாதார நோக்குடன் வந்தவர்கள் எவ்வாறு அரசியல் விழைவு பெற்றனர், அதனால் எவ்வாறு முகலாய, மராட்டிய அரசுகள் வீழ்ந்து, ஆங்கிலேய ஆட்சி தோன்றியது, நமது காலத்தில் எவ்வாறு மக்கள் விழித்தெழுந்தனர் என்பனவற்றை எல்லாம் கற்றுக்கொடுக்கலாம். இவ்வாறாக இப்புதிய முறையில் எதையும் கற்றுக்கொடுக்கலாம். குழந்தையும் எவ்வளவோ எளிதில், உள்ள உலைவும் நினைவுத் தொல்லையுமின்றி கற்றுக்கொள்ளும். நூற்றல் எனக்குத் தெரியுமாதலால் இதை விரிவாக விளக்குகிறேன்.

★

மாணவர்களுக்கு அன்றாடம் கற்றுக் கொடுக்கும் பாடம் பற்றி சிந்திக்கும் தற்படைப்புத்திறமும் உண்மை ஆர்வமுமுள்ள கல்வியறிஞர்கள் தேவை. ஆசிரியருக்கு இவ்வறிவு பழம் நூல்களிலிருந்து வாராது. அவர் தமது காட்சி, நினைவு ஆற்றல்களைப் பயன்படுத்தி, தமது அறிவை சொற்களாலும் கைத்தொழிலின் வாயிலாகவும் வழங்க வேண்டும். இது கல்வி முறையிலும், ஆசிரியரின் நோக்கிலும் ஒரு புரட்சியை உண்டுபண்ணும்.

உண்மையான வாழ்க்கைத் தொழிலுடன் தொடர்பில்லாத ஒரு கைத்தொழிலைக் கற்பதில் ஏன் ஒரு குழந்தை ஏழாண்டுகளை வீணாகக் கழிக்கவேண்டும்? எடுத்துக்காட்டாக, பொருளகத் தொழிலில் நுழைய விழையும் பொருளக முதல்வரின் மகன் ஏன் ஏழாண்டுகள் நூற்கக் கற்றுக் கொள்ளவேண்டும்?

களைப் பொறுத்தவரை, நாம் படிப்பதிலோ போதிக்கப்படுவதிலோ அடங்கவில்லை, கல்வி தானாகச் சிந்திக்கப் பழகுவது தான், உரையாடலுக்கும் உண்மையின் ஆய்வுக்கும் உகந்த முறையாகிறது. ஒருவர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், பண்பட்ட முறையில் விவாதம் நடத்திக் கருத்து வேறுபாட்டைத் தெரிவிக்க உதவுவது கல்வியின் கோட்பாடு.

இக் கோட்பாட்டைக் கல்வி நிலையங்களில் நாம் கல்விப் பயிற்சிக்கு முழு நேர முறையாக ஏற்றுக் கொள்ளலாம், முறைகளைப் பொறுத்தவரையில். வாழ்வை இரு கட்டங்களாகப் பிரிக்கலாமென்றும், (நீரால் தொட்டியை நிரப்புவதைப்போல்) அறிவைத் திரட்டும் கட்டம் ஒன்றுஎன்றும், (தொட்டியின் குழாய்களைத் திறப்பது போல) அறிவை வெளிப்படுத்தும் கட்டம் ஒன்று என்றும், பழங்காலத்திலிருந்து நாம் சுவீகரித்துள்ள கருத்து இப்பொழுது பொய்ப்பிக்கப் பட்டுள்ளது, அது போலவே, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் குழாய்களைத் திறந்து தொட்டியைக் காலி செய்து விட்டால், பின்னர் வாழ்வில் தொட்டியை நிரப்பிக் கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பதும் தவறே.

கல்வி, வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது, என்று சொல்லும் நிலை இன்று மாறி விட்டது. இன்று கல்வி, வாழ்வின் இணை பிரியா அம்சமாகி விட்டது. கல்வி, சமூகத்தின் வாசற்படி என்று கூறுவது இன்று பொருந்தாது. அது சமூகத்தின் மையமாகி விட்டது. எதிர்கால நோக்குடன் விளங்காமல், பழங்காலப் பெருமைகளின் எண்ணத்தில் மட்டுமே ஊறியிருந்தால், வரலாற்று உணர்வில் கல்வி சிறைபட்டு விடும். கல்விக்கும் வேலைக்கும் முரண்பாடு இருந்த நிலை இன்று மாறி விட்டது. வேலையும் வாழ்வும், ஒன்றையொன்று இன்று விழுங்குவதில்லை. வேலையில் மூழ்கி விளையாட்டில் ஈடுபடாத சிறுவன் சோர்வுக்குப் பலியாவான் என்ற கூற்று இன்று பொருந்தாது. இன்று, வேலையே கல்வி. உழைத்து உற்பத்தி செய்யும் நேரத்தில் ஓரம்சம், கல்வி. ஓய்வும் வசதியும் நிறைந்த வருங்கால வாழ்க்கையின் முன்னோடி, கல்வி.

வாழ்வில் எந்தக் கட்டத்தில் நாம் கல்வியைப் புறக்கணித்தாலும், அது நம்க்கு அளவிலாத் தீங்கு செய்யும் என்ற உண்மையைத் தான் இது வலியுறுத்தும். பள்ளி வாழ்வின் ஆரம்ப ஆண்டுகளை அரசியலில் வீணாக்கினால், நமக்குத் தேவையற்ற, தீதான பல போக்குகளைக் கற்றுக் கொள்கிறோம் என்றும், கற்றதைப் பின்னர் மறந்தால் தான் நலன் பெறுவோம் என்றும் தான் பொருள். கல்வி என்பது, ஓயாத, தொடர்ச்சியான, பயிற்சி. எண், ஏடு, எழுத்து, அல்லது தொழில் திறமை, மனிதப் பண்புகள், அல்லது மனிதப் பண்புக்குப் புறம்பான இச்சைகள், சொந்த முயற்சியில் அறிவு வளர்ச்சி, அல்லது தவறான முயற்சியின் விபரீதம்—இவ்வாறு ஏதாவது ஒன்றை நாம் ஒவ்வொரு கட்டத்திலும் கற்றுக் கொள்கிறோம். ஓயாது நற்பணியில் ஈடுபட்டு ஊக்கம் நிறைந்த வாழ்வு வாழவும் நம்மால் முடியும்; சோம்பலுக்குப் பலியாகிச் சைத்தானுக்கு அடிமையாகி வாழவும் முடியும்.

பள்ளியில் பயிலும்போது, சுயமாகச் சிந்தித்து விவாதம் செய்யப் பழகுவதற்குப் பதிலாகக் கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பிந்திய வாழ்வில் அறிவை வளர்க்கும் வாய்ப்புக் கிட்டுமென்று எதிர்பார்ப்பது வயது வந்த பருவத்தை, வளமான அறிவு செறிந்த பருவமாக்குவதற்குப் பதிலாக, மனநோய்க்குச் சிகிச்சை பெறும் மருத்துவ மனையாக, சிறுவர்

(தொடர்ச்சி 33 ஆம் பக்கம் பார்க்க)

ஆதாரக் கல்வி முறையில் மாணவன் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதற்காக பள்ளிக்கு செல்வதில்லை. தொழில் வழியாக உள்ளத்தைப் பயிற்றுவிக்கும் அடிப்படைக் கல்வி பெறவே செல்கின்றான். ஏழாண்டு இவ்வடிப்படை கல்வி பெற்றவன் ஏழாண்டு சாதாரண கல்வி பெற்றவனைவிட சிறந்த பொருளக முதல்வராக விளங்குவான். சாதாரண கல்வி பெற்றவன் பொருளகப் பள்ளிக்குச் சென்றால் நன்கு படிக்க முடியாது; ஏனெனில் அவனது திறமைகள் வளர்ந்திரா.

தப்பெண்ணங்கள் எளிதில் மறைவதில்லை. இப்புதிய கல்வி முறை ஓரளவு இலக்கியமும் ஓரளவு தொழிலும் கலந்த முறையன்று என்பதை நீங்கள் உணரச் செய்வேன் என்றால் அதைப்பற்றிப் பெருமைப்படுவேன். இஃது ஆரம்பநிலை வளர தொழில் வாயிலாக வழங்கப்படும் முழுக் கல்வியாகும். ஆகவே நான் தொடக்கத்தில் கூறியது போல், கைத்தொழிலை ஆசிரியர் ஆய்வறிவு நோக்குடன் கற்றுக்கொடுப்பாரென்றால், மாணவனின் எல்லாத் திறமை களையும் வளர்க்கும் பல வகைகளில் கல்வி கற்பிக்க முடியும்.

அறிவோடு, சேர்ந்த பயனுள்ள உடலுழைப்பு அறிவை வளர்க்கும் சிறந்த சாதனமாகும். உடல், உள்ளம், ஆன்மா ஒருங்கியைந்து வளரும் போதுதான் சமநிலையான அறிவு தோன்றும். ஆகவே நமது பயிற்சித் திட்டத்தில் உடலுழைப்புக்குச் சிறப்பிடம் வழங்குகிறோம்.

★

ஒழுக்க வளர்ச்சிக்கு முதலிடம் தருவதே அரம்பக் கல்வி. அதன் அடிப்படையில் அமையும் அமைப்பு என்றும் நிற்கும்.

★

உடலை அறிவுடன் பயன்படுத்துவதன் மூலமே அறிவை வளர்க்க முடியும். ஏனெனில் உடல், உள்ள வளர்ச்சி ஆன்ம விழிப்புடன் இணைந்து நிகழவேண்டும். ஆன்ம அறிவு எனும்போது இதயப் பயிற்சியைக் குறிப் பிடுகிறேன்.

★

கல்லூரிக் கல்வியை நாட்டின் தேவைகளுக்கேற்ப முற்றிலும் மாற்றியமைப்பேன். அதில் இயந்திர, பிற பொறியாளர் பட்டங்கள் வழங்கப்படும். அவர்கள் பல்வேறு தொழில் துறைகளுடன் இணைக்கப்படுவர். அத் துறைகள் தமக்குத் தேவையான பட்டதாரிகளின் பயிற்சிக்குப் பண உதவியளிக்கும்.

இந்தியாவிற்கு இலவச, கட்டாய ஆரம்பக் கல்வி தேவையென திண்ணமாக எண்ணுகிறேன். குழந்தை களுக்குப் பயனுள்ள வாழ்க்கைத் தொழிலைக் கற்றுக் கொடுத்து அதன் வாயிலாக அவர்களின் உள்ள, உடல், ஆன்மீகத் திறமைகளை வளர்ப்பதால் இதைப் பெறமுடியும் என்றும் நம்புகிறேன். கல்வியுடன் பொருளாதார நோக்கையும் இணைப்பதை இழிவாகவோ பொருத்தமற்ற தாகவோ எவரும் கருதவேண்டாம்.

நமது நாடு கல்வியில் எவ்வளவு பின்தங்கியுள்ள தென்றால், இத்திட்டம் பணத்தை நம்பி இருக்குமெனில், இத்தலைமுறையில் நாம் நமது கடமையை நாட்டிற்கு ஆற்ற முடியாது. கல்வி தற்சார்புடையதாக இருக்க வேண்டுமென்று, ஆக்கத் திறமையுள்ளவன் என்ற பெயரை யும் இழக்கும் அளவுக்குத் துணிந்து கூறுகிறேன்.

பொருளாதார நோக்கில் இழிவொன்றுமில்லை. நல்ல அளவியல் நல்ல பொருளியலாக இருக்க வேண்டும் என்பது போல் உண்மையான பொருளியலும் விழுமிய ஒழுக்க விதிகளை எதிர்ப்பதில்லை. பண வழிபாட்டை வளர்த்து, வலியோர் எளியோரை வாட்டிப் பொருள் திரட்டச் செய்யும் பொருளியல் பொய்மையான இருளார்ந்த இயலாகும்.

அதற்கு மாறாக உண்மையான பொருளியல் சமூக நீதியை ஆதரித்து, எளியோர் உட்பட எல்லோரது நலனையும் பேணி, நல்வாழ்விற்கு இன்றியமையாததாக இயங்குகிறது.

★

பிற நாடுகளில் எவ்வாறு இருப்பினும், 80 சதவிகித மக்கள் பயிர்த் தொழிலையும், 10 சதவிகிதம் தொழில் துறையையும் சார்ந்திருக்கும் இந்தியாவில் வெறும் இலக்கியக் கல்வியை அளித்து மாணவ மாணவிகளைப் வாழ்வில் உடலுழைப்பிற்குத் தகுதியற்றவர்களாகச் செய்வது குற்றமாகும். நமது வாழ்க்கையில் பெரும் பகுதி பொருளீட்டும் உழைப்பில் கழிவதால், நமது குழந்தைகள் தொடக்கத்திலிருந்தே உழைப்பின் உயர்வை உணரச் செய்ய வேண்டும்.

உழைப்பை வெறுக்கும் கல்வியைக் குழந்தைகளுக்கு அளிக்கக் கூடாது. உழவன் மகன் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு பயிர்த்தொழிலுக்குப் பயன்படாமல் போகக் காரண மேயில்லை. நமது மாணவர்கள் உடலுழைப்பை வெறுப்பது வருந்தத்தக்கது.

★

நகரப் பள்ளிகளில் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தக்க வாழ்க்கைத் தொழில்கள் யாவை? இதைப் பற்றி திட்டமாக ஒன்றும் கூறமுடியாது. ஆயினும் எனது பதில் தெளிவானது. கிராமங்களின் தேவைகளைப் பற்றி நகரப் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் ஆசிரியர்களுக்குக் கற்றுக்கொடுக்க முடியாது. கிராமநிலைபற்றிய ஆர்வத்தை யும் அவர்களிடம் எழுப்ப இயலாது. நகர் வாழ்வோரை கிராம வாழ்வில் ஈடுபடுத்துவது எளிதன்று. இதை எந் நாளும் கண்டு வருகிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில், எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்துத் தொடங்குதல் அறிவு வளர்ச்சியைத் தடுக்குமென நம்புகிறேன். வரலாறு, புவியியல், மனக்கணக்கு, நூற்றல் போன்ற கலை ஆகிய வற்றின் அடிப்படைகளை அறிந்து கொள்ளும் வரை அவர் களுக்கு எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்க மாட்டேன். இம் மூன்றின் வழியாக அவர்களது அறிவை வளர்ப்பேன்.

தக்ளி அல்லது இராட்டினத்தால் அறிவை எவ்வாறு வளர்க்க முடியும் எனக் கேட்கலாம். ஆர்வத்துடன் கற்றுக் கொடுத்தால் சிறந்த அளவில் அறிவை வளர்க்கலாம். ஒவ் வொரு செய்முறையையும் குழந்தைக்கு விளக்கும்போதும், தக்ளி அல்லது இராட்டினத்தின் அமைப்பை விவரிக்கும் போதும், பருத்தியின் வரலாற்றையும் நாகரிகத்துடன் அதற்குள்ள தொடர்பையும் எடுத்துரைக்கும்போதும், அது வளரும் கிராம வயலுக்குக் குழந்தையைக் கூட்டிச் செல்லும்போதும், அவன் நூற்கும் சுற்றுக்களை எண்ணவும், நூலின் திண்மையையும் சம தன்மையையும் காணவும் கற்றுக் கொடுக்கும் போதும் அவனது கவனத்தை ஈர்த்து, அவன் கைகளுக்கும் கண்களுக்கும் உள்ளத்திற்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிக்கிறோம்.

இம்முறை வரலாறு, புவியியல் பற்றிய அறிவைத் தவிர்ப்பதில்லை. சொற்களின் வாயிலாகப் பொது அறிவை வளர்த்து இதைக் கற்றுக்கொடுக்கலாம் எனக் கருதுகிறேன். எழுதிப் படிப்பதைவிட பத்து மடங்கு அதிகமாக இம் முறையில் கற்றுக்கொள்ள முடியும். மாணவன் பய னுள்ளதைப் பயனற்றதிலிருந்து பகுத்தறிந்து, தனது விருப் பார்வங்களை ஓரளவு வளர்த்துக் கொண்ட பிறகு அவனுக்கு எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கலாம். இது புரட்சிகர மான திட்டம். ஆனால் இதில் உழைப்பு குறைவு;

★

- உலகில் பெறக்கூடிய மிக்குயர் கல்வியையும் நான் எதிர்க்கவில்லை.
- அதனால் நன்மை விளையுமெனில் அரசு அதற்கான செலவை ஏற்கவேண்டும்
- பொது வருவாயிலிருந்து உயர் கல்விக்காக செல விடுவதை எதிர்க்கிறேன்.
- கல்லூரிகளில் பெருவாரியாக அளிக்கப்படும் கலைக் கல்வி எனப்படும் கல்வி வீண் எனவும், அது கற்றவரிடையே வேலையின்மையை உண்டுபண்ணு கிறது எனவும் உறுதியாக நம்புகிறேன்.

ஆகவே, நான் உயர் கல்வியின் எதிரி அல்லன் எனக் கூறினும், இந்நாட்டில் அளிக்கப்படும் உயர் கல்விக்கு எதிரி ஆவேன். எனது திட்டத்தில் மிகுதியான சிறந்த நூலகங் களும் ஆய்வுக்கூடங்களும் ஆராய்ச்சி நிலையங்களும் இடம் பெறும். அதன்படி, நாட்டிற்கு உண்மையான சேவை செய்து, தமது உரிமைகளையும் தேவைகளையும் மிகுதியாக உணர்ந்துவரும் மக்களின் பலவகைத் தேவைகளையும் நிறை வேற்றும் ஏராளமான வேதியியல் அறிஞரும், பொறி யாளரும் பிற வல்லுநரும் நமக்குத் தேவை.

தமிழில்: மோ. வள்ளுவன் கிளாரன்சு

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

''என் சமயத்திற்குப் பூகோள வரம்பு இல்லை. எனக்கு அதில் உண்மையான நம்பிக்கை இருந்தால், இந்தியாவிற்கு அப்பாலும் நான் அன்பு செலுத்துவேன். ஒதுங்கி நிற்கும் சுதந்திரம் உலக நாடுகளுக்கு நல்லதல்ல. உதவும் சுதந்திரமே நல்லது. அரசாங்கம் வரையறுத்துள்ள எல்லையைத் தாண்டி நாம் தொண்டாற்றுவதற்கு அளவே இல்லை. ஆண்டவன் இந்த எல்லைகளைப் படைக்கவுமில்லை.''

ஒரே கோளத்தில் வசிக்கும் மனிதனின் எதிர்கால நலனை நாம் எண்ணிப் பார்த்தால், காந்திஜியின் அகிம்சை மனிதனைக் கட்டுப்படுத்தும் தளைகளை அறுத்தெறிவது மட்டுமல்லாது, அவனுடைய முன்னேற்றத்திற்குப் புது இராஜபாட்டையையும் அமைக்கிறது என்பதை உணர்வோம்.

''அரசாங்கம் வரையறுத்துள்ள எல்லையைத் தாண்டி நாம் தொண்டாற்றுவதற்கு அளவே இல்லை. ஆண்டவன் இந்த எல்லைகளைப் படைக்கவுமில்லை.''

அச்சம் கவிந்த விஞ்ஞானம் அழிவுச் சக்தியாகும். அகிம்சையின் ஆதரவு பெற்ற விஞ்ஞானமோ ஆக்க சக்தி ஆகமுடியும்.

தமிழில்: க. இராமசாமி

---

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்காட்டாகக் காந்தி விளங்குகிறார். தம் இனம் காரணமாகத் தென் ஆப்பிரிக்காவில் இழிவுப்படுத்தப்பட்டார்; இங்கிலாந்தில் கல்வி பயின்றாலும் தம் இந்தியப் பிறப்பினால் உள்ளுணர்ச்சி பெற்றார்; துன்பத்தை ஏற்கவும் வரம்பின்றித் தியாகம் செய்யவும் தயாராக இருப்பதால் விடுதலை பெற்று இழந்த பெருமையை மீண்டும் இந்தியா அடைய வேண்டும் என்னும் ஆர்வத்தால் உந்தப்பெற்றார். அதே சமயத்தில் மேலும் உறுதி கொள்வதற்கு ஊக்கம் தருவதான குற்ற உணர்ச்சியை அவர் ஒருபோதும் இழந்ததில்லை.

உடலியலான இம்சை, போர் ஆகியவற்றினின்றும் தப்பி, அணுக் கருவிகளால் எரிந்துபோகாமல் உய்வது எப்படி என்பது இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள கேள்வி. செயலாலும் சொல்லாலும் காந்தி இதற்குச் சரியான விடை தந்தார். அரசியலையே கடந்த அரசியல் குறிக்கோள்கள் தாம் நம்மை உய்விக்கக் கூடிய ஆற்றலைத் தோற்றுவிக்கும். இவ் விடை இன்று ஆசிய நாட்டினரொருவரால் தரப்படுகிறது என்பது உள்ளுணர்ச்சியைத் தூண்டுவதாயுளது.

தமிழில்: தேவசேனாபதி

---

31ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீர்திருத்தப் பள்ளியாக, ஒழுக்க, ஆன்மீகச் சிறையாக மாற்றுவதாக முடியும். இத்துணை தீய விளைவுகள் இப்போக்குகளால் விளையுமென்றால், கட்சி அரசியலின் கைப்பாவையாகவும் விளையாட்டுப் பொம்மையாகவுமாகக் கல்வி நிலையங்கள் இடம் தர முடியாது.

## கல்வி நிலையங்கள் கல்வி நிலையங்களாக வேண்டும்

கட்சி அரசியல் கல்வி நிலையங்களில் புகக் கூடாதென்ற காந்தியத் தடை, பள்ளிகளையும் கல்லூரிகளையும் பற்றி அவர் கொண்டிருந்த சில தெளிவான துணிவான அடிப்படைகளிலிருந்து எழுந்தது. எண்ணும் எழுத்தும் பயில்வது மட்டுமல்ல, கல்வி; ஒழுக்கத்தை உருவாக்குவதே கல்வி; தர்மத்தை அறிந்து போற்றுவதே கல்வி, என்று 1939 மார்சு 25ஆம் தேதி காந்திஜி எழுதினார். அறிவுப் பசி கொண்டவன், மாணவன்; அறியத் தகுந்ததை அறிவதே அறிவு. உண்மையை நாடி ஓயாமல் கேள்வி எழுப்புவதும், புதிய அறிவைப் பெறத் தீரா ஆர்வம்கொள்வதும்தான், கல்வியின் அடிப்படை அம்சங்கள. புதியதோர் உலகைப் படைக்கப் புதுமுறை காண்பதே கல்வி. நாட்டின் விடுதலைக்காக வாழ்வையும் உயிரையும் அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கும், உண்மையான மக்கள் ஊழியர்களை உருவாக்குவதே பல்கலைக் கழகக் குறிக்கோள் என்று 1937 ஜூலை 31ஆம் தேதி ஹரிஜன் இதழில் காந்திஜி எழுதினார்.

காந்தியக் கல்விக் கோட்பாட்டோடு, இன்றுள்ள கல்வி முறையை ஒப்பு நோக்காமல் இருக்க முடியாது. தற்காலக் கல்வி முறையின் குறைபாடுகளைக் காந்திஜி காணத் தவறவில்லை. தொடக்கக் கல்வி யாயினும், உயர்கல்வியாயினும், அது நம்மை ஆண்மக்களாய் ஆக்கத் தவறுவதால், அது தேவையற்றது என்று, சற்று ஆத்திரமாகவே, 1939 டிசம்பரில், 'ஹிந்த் சுயராஜ்' என்ற நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார். நம் கடமையை ஆற்ற அது நமக்குத் துணைபுரிவதில்லை என்று எடுத்துக்காட்டினார். தர்மமே, கல்வியின் குறிக்கோள் என்று அவர் பன்முறை வலியுறுத்தினார். மனித உரிமைகளுக்கு விளக்கம் கூற, 1947ஆம் ஆண்டில் யுனெஸ்கோ காந்திஜியை அழைத்தபோது, 1947 மே மாதம் 25ஆம் தேதி பங்கிக் காலனியிலிருந்து எழுதிய கடிதமொன்றில் அவர் குறிப்பிட்டார்: ''கல்வியறிவு இல்லாத, ஆனால் விவேகம் நிறைந்த என் அன்னையிடமிருந்து நான் அறிந்த உண்மை, உரிமைகள் பெற அருகதையும் அவற்றைப் போற்றிக் காக்கும் ஆற்றலும் கடமையைச் செம்மையாக ஆற்றுவதிலிருந்து பிறக்கின்றன என்பதுதான்''.

இன்றோ இந்தியாவில் கல்வி நிலையங்கள் அருகதையிலும் ஆற்றலிலும் குறைந்து, பண்பும் பலனும் இழந்து, வீழ்ச்சி நோக்கி வேகமாகச் செல்கின்றன. விரயம்; பயிற்சியின் நடுவிலேயே பள்ளியிலிருந்து மாணவர் விலகுதல்; சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்தல்; திறமைக் குறைவு ஆகியவை நம் கல்வி நிலையங்களைப் பீடித்துள்ளன. உணர்வில்லாமல் ஒப்புவிக்கும் பாடபோதனை; சாரத்தைத் தருவதாகக் கூறிச் சக்கையைத் தரும் பாட உரை நூல்களைப் பயன்படுத்துதல்; வகுப்புக்களில் அளவுக்கு மீறிய மாணவர் எண்ணிக்கை; சிந்தனை செய்யவும், காந்திஜி வற்புறுத்தியது போல், உண்மை அறியும் ஆர்வத்தில் கேள்விகள் எழுப்பவும், அவகாசம் இல்லாத காரணத்தால், உருப்போடும் வழக்கம் பரவியுள்ள நிலை ஆகியவை நம் பள்ளிக்ளிலும் கல்லூரிகளிலும் தவிர்க்க முடியாத தீங்குகளாக ஊன்றிவிட்டன.

நம் தேர்வு முறைகள் சிந்தனையை முடக்கி, மாணவர்களை மேலெழுந்தவாரியாகத் தரம் பிரிக்கும் இயந்திரங்களாக இயங்குகின்றன. தேர்வு எழுதும்போது மாணவன் சிந்திக்க முயன்றால், குறித்த நேரத்திற்குள் விடை எழுதி முடிக்க இயலாது என்று பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் அண்மையில் கூறினார். வாய்மை வேட்கை; கடமை ஆர்வம்; ஒழுக்கத்தை உருவாக்குதல்; நாட்டின் முன்னேற்றப் பணிகளின் தேவைகளை நிறைவு செய்தல் ஆகியவை கல்வியின் நான்கு அம்சக் குறிக்கோளாக அமைய வேண்டுமென்று காந்திஜி அடிக்கடி வற்புறுத்தினார். அக்குறிக்கோள்களுக்கும், இன்று போதிக்கப்படும் பாடங்களுக்கும் தொடர்பே இல்லை. இறுதி ஆண்டில் படிக்கும் மாணவனை இங்கு எதிர்நோக்கி நிற்பது, வேலையில்லாத் திண்டாட்டம்தான்.

இதற்கும் மேலாக, நம் கல்வி நிலையங்களில் புகுந்துள்ள ஒழுக்கச் சீர்குலைவு, ஊழல்கள் ஆகியவற்றையும், மாணவர்களைப் பற்றியுள்ள பயங்கர வெறுமை உணர்வு, சூழ்நிலையுடன் சிறிதும் தொடர்பின்றிக் கல்விமுறை இயங்கும் நிலை ஆகியவற்றையும் நாம் கணக்கெடுத்தால், கல்வி நிலையங்களின் நிலைமை பயங்கரமானதாகத் தோன்றுகிறதல்லவா?

இதுதான் உண்மை நிலையா? இது ஓரளவு உண்மையாய் இருந்தால்கூட மாணவர்கள் ஒன்றாகக் கல்வி பயின்று, ஒன்று சேர்ந்து வாழப் பழக வழிகாட்டுவதற்குப் பதிலாகக் கல்வி நிலையங்கள், மாணவர் கலகங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் அரங்கமாய் அமைந்துள்ளதில் வியப்பில்லையே? இந்நிலையில், கட்சி அரசியலும் குறுகிய அரசியல் உணர்ச்சிகளும் நம் கல்வி நிலையங்களில் புகுந்து விட்டது குறித்து வியப்பதற்கில்லையே? இந்நிலையில், நம் கல்வி முறையைச் சீர்திருத்திச் சீரமைப்புச் செய்து, மாணவர்கள் குறைகளையும் கோரிக்கைகளையும் அலசி ஆராய்ந்து, நிவாரணம் காண வழிவகைகள் செய்யவும், பரிந்துரைகள் செய்துள்ள இந்தியக் கல்வி ஆய்வுக் குழுவின் அறிக்கை முடிவுகளை நாம் உடனடியாகவும் அவசரமாகவும் செயல்படுத்துவது அவசியமல்லவா?

நம் சொந்த வாழ்வும், சமூக, தேசிய, சர்வதேச வாழ்வும், குழப்பத்திலும் அழிவிலும் சிக்காமல் தடுக்கவும், நம் பள்ளிகளும் கல்லூரிகளும் மீண்டும் கல்வி நிலையங்களாகிப் பணியாற்றவும், வாய்மையை நாடவும் வளர்ச்சியைப் போற்றவும் வகை செய்யும் ஆக்க நிலையங்களாக அவை இயங்கவும், காந்திஜியின் அழைப்பும், அறைகூவலும், என்றும் விட இன்று, பொருத்தமாகவும். பெரும் பயனுள்ளதாகவும் விளங்குகின்றன அல்லவா? அந்த அழைப்பை ஏற்க நாம் இன்றே முன்வருவோமா?

தமிழில்: கா. திரவியம்

# யுனெஸ்கோ செய்தியறை

## கல்வியில் முதலீடு

கடந்த 1968 69ஆம் நிதி ஆண்டில் உலக வங்கி ஆப்பிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்காவிலுள்ள 10 நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கென 8.1 கோடி டாலர் கடனுதவி அளித்தது. அடுத்த 5 ஆண்டுகளில் இக்கடனுதவியை 3 மடங்காக்கத் திட்டமிட்டுள்ளது. உலக வங்கி யுனெஸ்கோ கூட்டுறவு திட்டப்படி இவ்வுதவி பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் பல கட்டி, விரிவாக்கி, அவற்றில் கல்விச் சாதனங்களை அமைக்கப் பயன்படுகிறது.

## அதிக புரதம் அதிக உரோமம்

புரத உணவினுல் ஆடுகளின் உரோமம் 3 மடங்கு மிகுதியாக வளர்கின்றது. புரதம் ஆடுகளின் (நுண்ணுயிர்கள் புரதத்தைப் பெரிதும் அழித்துவிடும்) முதல் 3 இரைப்பைகளையும் கடந்து, அது செரிமானமாகும் நான்காவது இரைப்பையை அடைவது அரிது. ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் இதற்கு இரு வழிகள் கண்டுபிடித்துள்ளனர். நுண்ணுயிர்கள் அழிக்கா வண்ணம் புரதத்தை இரசாயன முறையில் மாற்றுகின்றனர் அல்லது நான்காம் இரைப்பையை அடையும் வரை அழியாத் பிளாஸ்டிக்கில் அதை அடைக்கின்றனர்.

## குளிர் நாட்டில் வாழ்க்கை

ரஷ்யர்கள் மென்மயிருடை, குளிர் காலத் தொப்பி, கம்பளக் காலணிகள், மேற்சட்டை, கம்பளி ஆடை போன்ற குளிர்கால உடைக்கென ஆண்டுதோறும் 600 கோடி ரூபிள் (660 கோடி டாலர்) செலவிடுகின்றனர். குளிர் காலத்தில் வீடுகளையும் ஆலைகளையும் வெப்பமாக்க 5 கோடி டன் எரிபொருளைப் பயன்படுத்துகின்றனர். மாஸ்கோவின் தெருக்களை மட்டும் சுத்தம் செய்து காக்க 120 பனியேற்றும் பொறிகள், 500 ஐந்து டன் பார உந்துகள், 150 பெரிய இயந்திரத் துடைப்பங்கள் 1,85,000 டன் மணல், 150 மணலெறியும் பொறிகள் தேவைப்படுகின்றன.

## ஆர்மீனிக் கவிஞன் ஓவானஸ் டுமானியன் (1869---1923

தற்கால ஆர்மீனியா இலக்கியத்தின் தந்தை எனப்படும் ஒவானஸ் டுமானியனின் பிறந்த நாள் நூற்ருண்டு விழாவை ஆர்மீனியர்கள் உலகெங்கும், சிறப்பாக அவரது நூல்களை 18 மொழிகளில் 40 இலட்சம் பிரதிகளாக சோவியத் யூனியனிலும் வெளியிட்டு இவ்வாண்டு கொண்டாடுகின்றனர். நாட்டின் உணர்ச்சிகளையும், குறிக்கோள்களையும், பண்பாட்டையும் உணர்த்துவதில் அவர் ஜெர்மனியின் கதேயையும், புஷ்கினையும், போலந்தின் மிக்கிவிக்வியையும், யுக்ரேனிய ஷெவ் செங்கோவையும் இந்தியாவில் தாகூரையும் போன்றவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக டுமானியன் இலக்கியத்தை ஆர்மீனியரின் வாழ்க்கையோடும் உணர்ச்சிகளோடும் பின்னிப் பிணைத்தார். 'ஆனுஷ்' எனும் கவிதை, 'கிக்கார்' எனும் குறுங் கதை, 'உழவின் பாட்டு' போன்றவற்றில் ஆர்மீனியரின் நாட்டுப் பண்புகளையும். உரிமை வேட்கையையும் காட்டுகிருர். தத்துவம் தோய்ந்த அவருடைய நாலடிப் பாடல்கள் உமார் கய்யாம், காகனி, ஹஃபீஸ் போன்றவர்களின் பாரசீக இலக்கியங்களுக்கு ஒப்பானவை 1000 ஆண்டுக்கு முந்திய ஆர்மீனிய காவியத்தை தற்கால வடிவில் கூறும் 'டேவிட் ஆப்சாசன்' (1) எனும் கவிதையிலும், 'பிடிபட்ட டிம்பெர்டு' - இலும் அவர் அழகு, அழியாமை, நாட்டுப்பற்று, அன்பின் ஆற்றல் ஆகியவற்றை விளக்குகிருர். புஷ்கின், பைரன், லெர்மாண்டாவ், ஷில்லர், லாங் ஃபெல்லோ, மிக்கிவிக்ஸ், டி முஸ்ஸே, கதே போன்றவரின் நூல்களைத் தமது சிறந்த மொழி பெயர்ப்புகளின் மூலம் ஆர்மீனியருக்கு அறிமுகப்படுத்தினர்.

காகஸனி குழப்பம், துருக்கியில் ஆர்மீனியர் படுகொலை, முதல் உலகப் போர், ரஷ்யப் புரட்சி, உள் நாட்டுப் போர் ஆகிய நிகழ்ச்சிகளின் போதெல்லாம் அவர் தமது உயிரையும் மதியாது அறிவு, மனித நலம், பன்னுட்டு உறவு ஆகியவற்றிற்காக அயராது உழைத்தார்.

(1) மூல காவியத்தை ஜீன் சர்மேலியன் 'டேர்டெவில்ஸ் ஆப் சாசூன்' என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதை ஜார்ஜ் ஆலன் அண்டு அன்வின், இலண்டன், பன்னுட்டு இலக்கிய யுனெஸ்கோ திரட்டிய ரஷ்ய வரிசையில் வெளியிட்டுள்ளது.

## பொலிவாரின் பாதையில்

150 ஆண்டுகளுக்கு முன் பொலிவார் சென்ற விடுதலைப் பாதையில் இன்று கொலம்பிய நகர எழுத்தறிவு நிறுவனம் அறியாமையை ஒழிக்கும், திட்டத்தைத் தொடங்கியுள்ளது. பொலிவார் (ஜூன் 4, 1819இல்) வெனிஸுவலாவிலிருந்து கொலம்பியா வழியாகச் சென்றபோது விடுவித்த முதல் நகராகிய சுராக்காவில் இது தொடங்கியது. இவ் வியக்கத்தை 'இரண்டாவது விடுதலை' அறியாமையினின்று விடுதலை எனக் கூறுகின்றனர். இத் திட்டத்தில் 1,80,000 மக்கள் வாழும் 18 நகர்கள் இடம் பெற்றுள்ளன. இவர்களுள் வயது வந்தோரில் 45000 பேர் எழுத்தறிவற்றவரெனக் கணிக்கப் பெற்றுள்ளது.

## பிளேட் நதிப் பள்ளத்தாக்கில் 5 நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

13 இலட்சம் சதுர மைல் பரப்புள்ள பிளேட் நதி பள்ளத்தாக்கின் மின்னுற்றல், போக்கு வரத்து போன்ற வளங்களை வளர்ப்பதில் அர்ஜென்டைனு, பொலிவியா, பிரேஸில், பராகுவே, உருகுவே இணைந்து ஈடுபட்டுள்ளன. பள்ளத்தாக்கில் பாதி பிரேஸிலில் உள்ளது. அர்ஜென்டைனு, பராகுவே மக்கள் அனைவரும், உருகுவே மக்களில் அரைப்பகுதியினரும் அங்கு வாழ்கின்றனர் அப்பகுதியின் நீர் மின்சார ஆற்றல் 10 கோடி கிலோ வாட் என மதிப்பிடப்பட்டுள்ளது. பிரேஸில் ஏற்கெனவே பரானு, பரனைப்பா, ரையோ கிராண்டு ஆகிய மூன்று ஆற்றுப் பகுதிகளிலும் வேலை தொடங்கி விட்டது. இங்கு 5 ஆண்டில் மின்னுற்றல் உற்பத்தி தொடங்கிவிடும்.

## செய்திக் கதிர்....

- ■ ஸாம்பியாவின் விரைவு மருத்துவர் பணி 50 வானூர்தி திட்டுகளையும் மருத்துவ மனைகளையும் பயன்படுத்தி நாடு முழுவதற்கும் மருத்துவ உதவி வழங்க திட்டமிட்டுள்ளது.
- ■ செக்கோஸ்லோவாக்கியா ஐ. நா. வளர்ச்சி திட்டத் துணையுடன் பிராட்டிஸ்லாவாவில் 66 இலட்சம் டாலர் செலவில் கணக்கிடும் ஆய்வு நிலையமொன்றைத் தொடங்கியுள்ளது.
- ■ 1300 யுனெஸ்கோ கழகங்கள் 35 நாடுகளில் பன்னுட்டு உணர்வையும் ஒத்துழைப்பையும் வளர்க்கத் துணை செய்து வருகின்றன.
- ■ பர்மாவில் எழுத்தறிவை வளர்க்கும் நோக்குடன் 20,000 மாணவர்கள் 2000 நிலையங்களில் முதியோருக்கு எழுத்தறிவிக்க முன்வந்துள்ளனர்.

## ஐரோப்பாவில் வெளியான முதல் ஐ. நா. அஞ்சல் தலைகள்

இம்மாதம் அஞ்சல் தலைகள் முதல் முறையாக சுவிட்ஸர்லாந்தில் வெளியிடப் படுகின்றன. முன்னுல் எல்லா ஐ நா. அஞ்சல் தலைகளும் அமெரிக்க நாணய. மதிப்பின்படியே அச்சிடப்பெற்றன. ஜெனிவாவில் 'பாலாய்டெஸ் நேஷன்ஸ்' இலிருந்து மட்டும் அனுப்பக் கூடிய இப் புதிய தலைகள் 5, 10, 20, 30, 50, 75 காசுகளிலும், 1, 3 பிராங்குகளிலும், அஞ்சல் அட்டைகள் 20, 30 காசுகளிலும், விமானக் கடிதத் தாள் 65 காசுகளிலும் கிடைக்கின்றன. மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட வற்றிற்கு எழுதவும்; ஐ. நா. அஞ்சல் நிலையம், CH-1211, ஜெனிவா 10, ஐ. நா. அஞ்சல் நிலையம், முதல் அவென்யூ, நியூயார்க் 17, யு. எஸ். ஏ, அல்லது யுனெஸ்கோ அஞ்சல் பணி, பிளேஸ்டி ஃபான்டினுய் பாரிஸ்-7. ஐ. நா. அஞ்சல் நிலைய விற்பனையாளர்களான யுனெஸ்கோ அஞ்சல் பணி நிலையத்தில் எல்லா ஐ. நா. அஞ்ச்ல் தலைகளும் முதல் நாள் உறைகளும் கிடைக்கும்.


Edited and published by T. P. Meenakshisundaran for the Southern Languages Book Trust, 441, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

# யுனெஸ்கோ இப்போது வெளியிட்டுள்ள மறுபதிப்பு




**இரண்டாம் பதிப்பு 1969   196 பக்கம்**
**காகிதம்: $ 4-00 24/-14-00F**
**துணி: $ 6-00 36/- 21-00F**

## யாவரும் சோதரரே

### மகாத்மா காந்தியின் வாழ்க்கையும் கருத்துக்களும்—அவரது வாக்கில்.

- மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவின் நினைவாக (அக்டோபர் 2, 1969), யுனெஸ்கோ தான் 1958 இல் வெளியிட்ட காந்தி தொகுப்பு நூலின் புதிய பதிப்பை வெளிக் கொணர்கிறது.
- காந்தியின் பண்புகளையும் கருத்துக்களையும் பொது மக்களுக்குப்பலகோணங்களில் காட்டுவதற்காக கிருஷ்ண கிருபளானி இதைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார்.
- அப்போது இந்தியக் குடியரசின் துணைத் தலைவராகவும். பிறகு தலைவராகவுமிருந்த் பேராசிரியர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் தமது முன்னுரையில் மகாத்மா காந்தியின் தத்துவத்தையும் அவர் பன்னாட்டு உறவை வளர்க்க உதவியதைப் பற்றியும் விளக்குகிறார்.

## வாசகர்களுக்கு

யுனெஸ்கோ கூரியரின் தமிழ்ப்பதிப்பு இதுவரை இருபத்திமூன்று இதழ்கள் வெளி வந்துள்ளன. ஒவ்வோர் இதழும் தனிச் சிறப்புடன் திகழ்ந்து வாசகர்களின் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஜூலை இதழில் தென்னாப்பிரிக்கா அரசாங்கம் கடைப்பிடித்து வரும் இன ஒதுக்கல் கொள்கையின் கேடுகள் நன்கு விளக்கப்பட்டிருந்தது. எழுதும் கலை தோன்றி வளர்ந்த வரலாற்றை முழுவதுமாக ஆராயும் அரிய கட்டுரைகளையும் படங்களையும் கொண்டதாக ஆகஸ்ட் இதழ் அமைந்தது. விசேஷ வரலாற்றுச் சிறப்பைக் காட்டும் கட்டுரைகள் செப்டம்பர் இதழில் இடம் பெற்றன. அக்டோபர்-நவம்பருக்கான பண்டை இரட்டை இதழ் போரினால் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கி உலகில் அமைதி நிலவ வேண்டியதன் அத்தியாவசியத் தேவையை உள்ளத்தைத் தொடும் விதத்தில் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

சோவியத் யூனியன் அக்டோபர் புரட்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதையொட்டி கல்வி, விஞ்ஞானம், கலாசாரத் துறைகளில் அந்நாடு அடைந்துள்ள சாதனைகளை விளக்குவதாக டிசம்பர் இதழ் வெளி வந்தது.

பாரத நாட்டின் மாபெரும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டைப் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளையும் அழகான படங்களையும் கொண்டதாக ஜனவரி, 68 இதழ் வெளிவந்தது. 12 பக்க வண்ணப் படங்கள் இதன் சிறப்பு அம்சமாகும்.

பிப்ரவரி இதழில் மனித உரிமைகளைப் பற்றிய அரிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. விஞ்ஞானம் ஒரு பண்பாடு என்பதை மார்ச் இதழ் விளக்கியது. 'நமது வருங்கால ஆரோக்கியம்' பற்றிய கட்டுரைகளைக் கொண்டதாக ஏப்ரல் இதழ் வெளிவந்தது. மே இதழில் எழுத்தறிவு பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. மயக்க மருந்துகளினால் விளையும் பேரபாயத்தை விளக்கும் கட்டுரைகளைத் தாங்கி ஜூன் இதழ் வெளிவந்தது. ஜூலை, ஆகஸ்ட்—செப்டம்பர், அக்டோபர்—நவம்பர், டிசம்பர், ஜனவரி, 69, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை இதழ்களும் வெளிவந்துள்ளன.

பல துறைகளிலும் அக்கறையுள்ளவர்களுக்கு அரிய கருத்துக்களை வழங்கும், சர்வதேச உணர்வை வளர்க்கப் பாடுபடும் 'யுனெஸ்கோ கூரியர்' எல்லோர்க்கும் ஏற்றதொரு வெளியீடாகும். உலகைக் காண விரும்பும் அறிவுத் தாகம் கொண்டோர்க்கும் கல்வி நிலையங்களுக்கும் பெரிதும் பயன்படும் பத்திரிகை. சர்வ தேசத் தரத்துக்கு சற்றும் குறையாத விதத்தில் கண்கவர் அமைப்புடன் சிறப்பாக வெளியிடப்படுகிறது.

சந்தாச் செலுத்தி மாதந்தோறும் வீடு தேடி வர ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

ஆண்டுச் சந்தா ரூ. 10.50 கல்வி நிலையங்களுக்கு ரூ. 9-50.

**வேண்டுவோர்க்கு முந்தைய இதழ்களும் கிடைக்கும்.**

**யுனெஸ்கோ கூரியர்**
**458, பூந்தமல்லி நெடுஞ்சாலை**
**கீழ்ப்பாக்கம், சென்னை-10.**